
# தமிழரசு

1-11-1979 50 காசு.





## கூட்டுறவுச் சிறப்பிதழ்



மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச்செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்களின் இலக்கியப் பணியைப் பாராட்டி சென்னைப் பல்கலைக் கழகம் அளித்த டாக்டர் பட்டத்தை மேதகு ஆளுநர் பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் 28.9.79 அன்று வழங்கினார்.



# கூட்டுறவு பரவவேண்டும்!

—பேரறிஞர் அண்ணா

தமிழரசு மலர்:10 இதழ்: 9 * 1-11-1979

நீண்ட பல ஆண்டுகளாய்க் கூட்டுறவு இயக்கம் நமது நாட்டில் இயங்கி வந்ததன் காரணமாக அது பல்வேறு துறைகளில் வளர்ச்சி பெற்றுள்ளது. ஆனால், இயக்கம் அடைந்த வளர்ச்சிக்கேற்ப அதில் ஈடுபட்டுள்ள மக்களிடையே கூட்டுறவு உணர்வு பரவவில்லை. கூட்டுறவியக்கத்தின் கொள்கைகளில் மக்களிடையே ஆர்வம் பெருக வேண்டும். சமுகம் முழுவதிலும் இந்த இயக்கம் நன்கு ஊடுருவ இதில் சம்பந்தப்பட்ட அனைவரும் பாடுபட வேண்டும்.

கூட்டுறவுச் சங்கங்களில் ஈடுபட்டுள்ள மக்களில் சுமார் 80 சதவிகிதத்தினர் அவைகளில் தீவிரமான பங்கு பெற்றவர்கள் அல்லர். இந்த இயக்கத்தில் நெருங்கிய தொடர்பு இன்றியே அவர்கள் இருந்திருக்கிறார்கள். இது வரையில் எப்படி நடந்தபோதிலும் இனிமேல் அவ்வாறு இருக்கக்கூடாது.

கூட்டுறவு முயற்சியானது அரசியல் கட்சிக்கு அப்பாற்பட்ட ஓர் இயக்கமாகும். கட்சி வேறுபாடுகளுக்கு அதில் எவ்வித இடமும் கிடையாது. இந்தியாவிலுள்ள மாநிலங்களில் கடந்த இருபது ஆண்டுகளாக இருந்து வந்த சூழ்நிலை இப்போது மாறிவிட்டது.

பல்வேறு அரசியல் கட்சிகள் மாநிலங்களில் இப்போது ஆட்சி புரிகின்றன. இது மிகப்பெரிய மாறுதலாகும். அரசியல் கட்சிகளின் செல்வாக்கைக் கூட்டுறவுத் துறை பெற்றால் அதில் எவ்விதத் தவறும் இல்லை. ஆனால் அரசியல் செல்வாக்கைக் கூட்டுறவாளர்கள் தங்கள் சொந்த நலனுக்குப் பயன்படுத்துவதுதான் கூடாது. கூட்டுறவில் தங்கள் தவறுகளை மறைக்க அரசியல் கட்சிச் செல்வாக்கை எவரும் பயன்படுத்தக்கூடாது. அரசியலுக்கு அப்பாற்பட்டதாக இயக்கம் விளங்கவேண்டும். இதில் ஈடுபட்டுள்ளவர்கள் தங்களுடைய சொந்த நலத்தை முன்வைக்காமல் பிறர் நலத்தைக் கருதிப் பாடுபடவேண்டும். இந்த மனப்பக்குவம் ஏற்பட்டால் ஜனநாயகம் சிறப்புற்று வளர்ந்தோங்கும்; சமூகம் முழுதும் தோழமை வளரும். பல்வேறு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் கூட்டுறவுத்துறையில் ஈடுபட்டுப் பாடுபடுவதன் மூலம் தங்களிடையேயுள்ள கருத்து வேறுபாடுகளைக் களைந்து ஒற்றுமையுடன் பொதுப்பணிக்குச் சேவை புரிந்தவர்களாகிறார்கள்.

"கூட்டுறவுத்துறை நன்கு வளர்ந்திருக்கிறது" "இயக்கத்தில் எல்லாம் சரியாய் நடக்கிறது" என்று மனத் திருப்தியடைவதில் பயனில்லை. இயக்கத்தில் சங்கங்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ள அளவுக்கு அவைகளில் ஏற்றம் காணப்படவில்லை கூட்டுறவுத்துறையில் போதுமான அளவுக்கு மக்களிடையே நம்பிக்கை வளரவில்லை. "எங்களுக்கு எங்கே சங்கத்தில் இடம் கிடைக்கப் போகிறது?" "நம்மை யார் கவனிப்பார்கள்!" என்பன போன்ற எண்ணங்கள் இயக்கத்தில் ஈடுபட்டுள்ள மக்களிடையே ஏற்பட்டு வருகின்றன. கூட்டுறவியக்கத்தின் மீது மக்களின் ஆர்வத்தைக் குன்றச் செய்யும் இவைபோன்ற அவநம்பிக்கை எண்ணங்கள் முழுதுமாக நீங்கவேண்டும். அதைச்செய்ய வேண்டியது கூட்டுறவாளர்களின் தலையாய கடமையாகும்.

கூட்டுறவுச் சங்கத்தில் குடும்பத்துக்கு ஒருவர் வீதமாவது அங்கத்தினராய்ச் சேர வேண்டும். இந்த வகையில் இயக்கம் வளர்ந்தோங்கப் பாடுபடவேணுமாய் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன். சமுதாயத்தில் தனி உடமைக்கும், பொது உடமைக்கும் மையமான ஒரு தங்குமிடமாகக் கூட்டுறவியக்கம் உருவாகியுள்ளது.

சமூக அமைதிக்கும் பொருளாதார நீதிக்கும் பயன்படும் கூட்டுறவு நமது நாட்டில் நன்கு பரவ வேண்டும்; அதன் முழுப்பயனையும் அனைவரும் அடையவேண்டும் நல்ல ஆர்வத்தோடு இந்த இயக்கத்தில் யாவரும் பணியாற்றினால் மக்களின் பொருளாதாரம் மேம்பாடடையும். நாடும் முன்னேற்றமடையும். கூட்டுறவே நாட்டுயர்வு!

# அரசு அலுவலர்களுக்குப் புதிய சலுகைகள் !

* 1-10-1979 முதல், காவல் துறையினர் உட்பட எல்லா அரசு ஊழியர்கள், பள்ளி ஆசிரியர்கள், உள்ளாட்சி நிறுவன அலுவலர்கள் ஆகிய தமிழ்நாடு அரசின்கீழ் வரும் அலுவலர்கள் அனைவருக்கும், அகவிலைப்படி உயர்வு வழங்கப்படும். 1979 ஏப்ரல் மாதம் அளிக்கப்பட்டதைப்போன்று இந்த அகவிலைப்படி மாதமொன்றுக்கு ரூ. 6 முதல் ரூ. 30 வரையில் அமையும். கிராம அலுவலர்களுக்கும் ஏற்ற முறையில் 1-10-79 முதல், உயர்வு அளிக்கப்படும். ஓய்வு ஊதியம் பெறுபவர்களுக்கும் தக்க உயர்வு அளிக்கப்படும்.

* அலுவலர் சங்கங்கள், ஊதியக் குழுவின் அறிக்கையின் மீது காணும் முரண்பாடுகளை ஆராய்ந்து அரசுக்கு அறிக்கை தருவதற்கான திரு சி. வி. ஆர். பணிக்கர் அவர்களை ஒருவர் குழுவாக அரசு நியமித்துள்ளது. ஊதியக்குழு அறிக்கையையும் அலுவலர்கள் சங்கங்களின் கோரிக்கைகளையும் விரிவாக ஆராய்ந்து அரசுக்கு அவர் அறிக்கை தருவார்.

* மத்திய அரசு அண்மையில் அறிவித்துள்ளவாறு ஓய்வு ஊதியம் அறிவிப்பதற்கான விதிமுறைகள் அலுவலர்கட்கு சலுகை தரும் முறையில் 1-10-79 முதல் மாற்றியமைக்கப்படும்.

* தற்போது வீட்டு வாடகைப்படி ஏதும் பெறாத கிராமப்பகுதிகளில் பணிபுரியும் அரசு அலுவலர்கள், பள்ளி ஆசிரியர்கள், உள்ளாட்சி நிறுவன ஊழியர்கள் ஆகியோர்க்கு கிராமப்பணி ஊக்கப்படியாக மாதமொன்றுக்கு ரூ. 10/- அளிக்கப்படும். இது ஒரு புதிய சலுகையாகும்.

* 1-1-1974 முதல் செயல்பட்டுவந்த குடும்ப பயன் திட்டத்தின்படி மாதமொன்றுக்கு ரூ. 10 வீதம் பணம் செலுத்தி, 30 ஆண்டுக் காலத்தின் பின் ரூ. 7,200 வரை பெறுவதற்கான திட்டம், இடையில் 1975ல் கைவிடப்பட்டது. அரசு இதனை மீண்டும் செயல்படுத்த முடிவு செய்துள்ளது. இதன்படி மாதமொன்றுக்கு ரூ. 10 வீதம் அரசு அலுவலர் செலுத்தி, 30 ஆண்டுகள் ஆனபின் ரூ. 10,000/- பெறலாம். இதில் அலுவலர்கள் தங்கள் விருப்பப்படி சேரலாம்.


* ஏற்கெனவே அறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளன்று அறிவிக்கப்பட்டபடி, காவல் துறையினர், தீயணைப்புத் துறையினர் ஆகியோருக்கு மாதமொன்றுக்கு ரூ. 20/- வீதம் (Risk Allowance) இடையூறுப்படி 1-10-79 முதல் வழங்கப்படும். காவலர் முதல், ஆய்வாளர் உள்ளிட்டவர்களுக்கு இது அளிக்கப்படும்.


* அலுவலர் சங்கங்கள் அரசின் கவனத்துக்குக் கொண்டுவரவேண்டிய குறைகளை Joint Civil Service Council மூலம் கலந்து பேசுவதற்கு தற்போதுள்ள வாய்ப்பினை நன்கு பயன்படுத்திக் கொள்வதன் மூலம், பற்பல குறைகளைத் தீர்ப்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.



## கூட்டுறவுக் கோள்கைகள்

* அனைவரும் உறுப்பினராகலாம்
* மக்களாட்சி நிருவாகம்
* முதலீட்டுக்கு அளவான பயன்
* உபரித் தொகையில் நியாயமான பங்கு
* கூட்டுறவுக் கல்வி
* கூட்டுறவு நிறுவனங்களிடையே கூட்டுறவு





முன்பக்க அட்டையில்.... *வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதி வாழ் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் காரியாபட்டியில் நடைபெற்ற விழா ஒன்றின்போது கூட்டுறவுக் கடன்களை வழங்கினார்.*

# மலரட்டும் மக்கள் இயக்கம்



"கூட்டுறவு என்பது வெறும் வழிமுறையல்ல. அது இதயத்தைத் தொடும் சக்தி. தன்னிறைவும் சேவையும் வெளிப்படும் சாதனம்'', என்றார் மால்கம் டார்லிங் என்ற கூட்டுறவுச் சிந்தனையாளர்.

''கூட்டுறவு என்பது தன்னுதவியைப் பயனுள்ளதாகச் செய்யக்கூடிய ஒரு சிறந்த அமைப்பு'' என்றார் ஹோரஸ் பிளங்கெட்.

கூட்டுறவியக்கம் ஒரு பொருளாதார இயக்கம் மட்டுமல்ல; அறநெறி சார்ந்த ஓர் இயக்கமுமாகும் என்று, அண்ணல் காந்தி அடிகள் கருதினார்.

கூட்டுறவென்பது பொதுவுடைமைக்கும் தனி உடைமைக்கும் இடையே அமைக்கப் பட்ட வலிமையான பாலம் என்று பேரறிஞர் அண்ணா விளக்கமளித்துள்ளார்.

தனி மனித சுதந்திரமும் ஒருவருக்கு ஒருவர் சார்ந்து வாழும் இயல்பும் சமூக வாழ்வில் மிகவும் முக்கியமானது. இதன் அடிப்படையில் ''எல்லோரும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவரும் எல்லோருக்கும்'' என்ற பொதுநோக்கில் ஒரு குறிக்கோளை அடையப் பயணமாகும்போது ஏற்படும் இணைப்பே கூட்டுறவு.

கூட்டுறவு எண்ணம் அரும்பு விட்டு 100 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. தொன்மை மிகுந்த இந்த இயக்கத்தின் பரிணாம வளர்ச்சியில் பல மாற்றங்களும் முன்னேற்றங்களும் தோன்றின. மக்களின் வாழ்வில் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு மட்டும் தீர்வு காண்பதோடு நில்லாமல், எல்லா முனைகளிலும் எளியவரைத் தாக்கும் பொல்லாங்கினை எதிர்த்துப் போராடும் கருவியாக, போர்க் கலனாக, மறுமலர்ச்சி இயக்கமாக, கடந்த 100 ஆண்டுகளுக்கு மேலாக இந்த இயக்கம் அமைதிப் புரட்சி செய்து வந்துள்ளது.

கல்தோன்றி மண்தோன்றாக் காலமுதற் கொண்டே சிறந்த பண்பாட்டோடும் நாகரிக முதிர்ச்சியோடும் இருந்து பல வழிகளிலும் வழி காட்டியது தமிழகம். இந்தியக்கூட்டுறவியக்க வரலாற்றுக்கு 75 ஆண்டுகள் ஆகிவிட்டன. அந்த வரலாற்றின் துவக்கமே முதல்

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்

திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி

கூட்டுறவுச் சங்கம் உதயமான தமிழகந்தான் என்பதை மறந்து விடக்கூடாது. அறிஞர் அண்ணா பிறந்த செங்கல்பட்டு மாவட்டத் திலுள்ள திருருக்கு அந்தப் பெருமையுண்டு. எனவே, கூட்டுறவியக்கத்தின் வரலாறு தமிழகத்திலிருந்துதான் துவங்குகிறது.

எளிய விவசாயிகளின் கடன் சுமையினைக் குறைக்கக் கைகொடுக்கும் முயற்சியில் ஈடுபட்ட இயக்கம் இன்று எல்லாத்துறைகளிலும் பரவியுள்ளது. வாழ்க்கைப் போராட்டத்தில் எங்கெல்லாம் மனிதன் சிக்கித்திணருகின்றானோ அங்கெல்லாம் கூட்டுறவின் தேவை உணரப்பட்டு எங்கும் எதிலும் கூட்டுறவு என்ற இலட்சிய உணர்வு எதிரொலிக்கிறது.

எளியவரின் இன்னல் தீர்க்கும் உதய கீதமாக உருவெடுத்த இயக்கம் இன்று சமூகப் பொருளாதாரச் சிக்கல் நீக்கி, சமதர்ம சக வாழ்வுக்கு இட்டுச் செல்லும் இலட்சிய கீதமாக மலர்ந்துள்ளது.

இந்த இலட்சியம் வடிவம் பெறப்போராடிய பழம்பெரும் கூட்டுறவாளர்கள், அவர்கள் மேற்கொண்ட அரிய முயற்சிகளை இன்று நாம் நினைவு கூர்கின்றோம். குதிரையிலே சவாரி செய்து, கூடாரம் அடித்து, மக்களைச் சந்தித்துச் சங்கங்கள் அமைத்த அந்த மேதைகளுக்கு மரியாதை செலுத்துகிறோம். அவர்களது பணிகள் நமது நினைவில் நீங்காத இடம் பெற்றவையாகும்.

அவர்கள் நடந்த பாதையில் கடந்த 75 ஆண்டுகளாகத் தமிழகம் தலை நிமிர்ந்து வந்திருக்கிறது. கூட்டுறவியக்கத்துக்கு வழி காட்டியது மட்டுமன்றி, தனக்கெனத் தனிச் சிறப்பான இடத்தையும் இன்று தமிழகம் பெற்றிருக்கின்றது.

தமிழகத்தில் உள்ள சுமார் 53 இலட்சம் நில உடைமைகளில் சுமார் 40 இலட்சம் நில உடைமைகள், அதாவது 76 சதவீதம் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பயனடைகின்றன. தமிழகத்தில் சிறிய மற்றும் மிகச் சிறிய உழவர் நில உடைமையாளர்கள் 42 இலட்சம் பேர் உள்ளனர். அவர்களில் 30 இலட்சம் உடைமையாளர்கள், அதாவது 73 சதவீதத்தினர் கிராமக் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்ந்து பயன் பெற்று வருகிறார்கள்.

அவர்களுக்கு வேளாண்மைத் தொழிலுக்காக 1979-80-ல் சுமார் 160 கோடி ரூபாய் கடனாக வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. உழவர் பெருமக்களுக்குக் கடன் வசதி, வேளாண்மைத் தேவைக்கு உரம் போன்ற பொருட்கள், விற்பனை வசதி, இன்றியமையாப் பண்டங்கள் வழங்குதல் போன்றவற்றை ஒரு இடத்தில் வழங்குவதற்கு வசதியாக இருக்கும் பொருட்டு 26 உழவர் பணிக்கூட்டுறவுச் சங்கங்கள் தமிழகத்தில் செயல்பட்டு வருகின்றன. இவைகள் உழவர் பெருமக்களின் உற்ற தோழர்களாக இருந்து கிராம மட்டத்தில் ஒருங்கிணைந்து பணியாற்றி வருகின்றன.

வேளாண்மைத்துறையின் சிறு உழவர்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்படி அளிக்கப்பட வேண்டிய கடன் வசதியை மத்திய கூட்டுறவு வங்கிகள் கவனித்து வருகின்றன. சிறிய மிகச் சிறிய உழவர்கள் நிலமற்ற குத்தகைதாரர்கள் உற்பத்தியை அதிகரித்து முன்னேறவும் தீவிரமாக, உழவுத் தொழிலில் ஈடுபடவும் துணைத் தொழில்களை நடத்தி, வருமானத்தைப் பெருக்கவும் இது உதவுகிறது.



மக்கள் சமூகம் கவலையற்று வாழ ஒழுங்கான முறை, கூட்டுறவுத் தத்துவ வாழ்க்கை முறையேயாகும். இதற்கு மக்கள் தயாராகிவிட வேண்டும். சுயநலத்தை ஒதுக்கி வைத்துவிட வேண்டும். பலருடைய நன்மை ஒன்றே கருதி வாழ்வில் இறங்க வேண்டும்.

—தந்தை பெரியார்

கூட்டுறவுச் சங்கங்கள் நலிந்தபிரிவினரின் தேவைகளைக் குறித்து அதிக அக்கறை செலுத்தி வருகின்றன. ரிசர்வ் வங்கியின் கருத்துப்படி மொத்தக் கடன் தொகையில் 20 சதம் நலிந்த பிரிவினருக்கு வழங்கப்பட வேண்டும். ஆனால் சொந்தமாகவோ குத்தகையாகவோ சாகுபடி செய்கின்ற நலிந்த பிரிவினருக்கு, கூட்டுறவுச் சங்கங்கள் கடந்த ஆண்டு சுமார் 62 கோடி ரூபாய் (49 சதம்) கடன் வழங்கியுள்ளது. இது ரிசர்வ் வங்கி வகுத்துள்ள அளவைவிட இரு மடங்குக்கு மேற்பட்டதாகும். இதை நடப்பு ஆண்டில் 54 சதவீதமாக உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

மலைவாழ்மக்களின் இருண்ட வாழ்விலே ஒளி ஏற்றவும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் ஒரே இடத்தில் கடன் மற்றும் விற்பனை வசதிகளும் ஒருங்கிணைந்த பணிகளும் செய்யும் பொருட்டுத் தமிழகத்தில் 9 இடங்களில் பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன. இத்தனை உதவிகளும் கிராம மக்கள் குறிப்பாக உழவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள உழவர் பெரு மக்களின் நலனுக்காகக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்கப்பட்டதாகும். கிராம மட்டத்தில் உழவர் பெருமக்களுக்குத் தேவையான ஒருங்கிணைந்த பணியினை வழங்குவதற்குக் கிராமக்கூட்டுறவுச் சங்கத்தைத் தவிர வேறு எதுவுமே இல்லை. எனவே கூட்டுறவுச் சங்கத்தின் கடனைத் தவணை தவறாமல் திருப்பிச் செலுத்தி கூட்டுறவுச் சங்கம் தங்களுக்கும் மற்றவர்களுக்கும் தொடர்ந்து பணிபுரிய அவைகளைப் பலப்படுத்த வேண்டிய கடமை விவசாயப் பெருமக்களுக்கு உள்ளது.

நகரங்களில் வாழும் மக்கள் நுகர்பொருட்களைப் பெறுகின்றபோது கிடைக்கும் வசதிகளைப் போலவே கிராமங்களிலும் பண்டங்களைச் சீராகவும் தரமாகவும், நியாய விலையிலும் வழங்க ஊருக்கோர் அங்காடித்திட்டம் 11000 கிராமங்களில் செயல்பட்டு வருகிறது. கிராம மக்கள் தங்கள் தேவைகளைப் பெற

காலத்தை வீணாக்கிக் கால்கடுக்க நடந்து செல்ல வேண்டிய குறையை நீக்கியது இந்தப் புரட்சித் திட்டம்.

சமுதாயத்தில் நலிந்த பிரிவினரான தொழிலாளர்கள், சலவைத் தொழிலாளர்கள், முடிதிருத்துவோர், உப்பளத் தொழிலாளர்கள், பழங்குடி மக்கள் போன்றவர்களின் நலனைப் பேண கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றன. தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பல்லாயிரம் தொழிலாளர்கள் வேலை வாய்ப்புப் பெறுகின்றனர். இச்சங்கங்களுக்குப் பங்கு மூலதனம், கடன், உதவித் தொகை அரசுப் பணியாளர்களின் இலவசச் சேவை ஆகியவற்றை வழங்கி அரசு உதவுகின்றது. சைக்கிள் ரிக்ஷாத் தொழிலாளர்கள் தங்களுக்கென வண்டிகளை வைத்துக் கொண்டு சுயவேலை வாய்ப்புப் பெற்று முன்னேறும் பொருட்டு திண்டுக்கல்லிலும் சென்னையிலும் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன.

எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும், இல்லாமை என்ற பொல்லாங்கு மறையவேண்டும். எளியோர் ஏற்றம் பெற்று வாழ்வில் புதிய மாற்றம் காண வேண்டும் என்ற உயர்ந்த குறிக்கோளில் பல துறைகளில் கூட்டுறவியக்கம் பணியாற்றுகிறது. கூட்டுறவியக்கம் படராத இடமில்லை. அதன் பணிகள் தொடராத இடமுமில்லை.

கடந்த 75 ஆண்டுகளாகத் தமிழகத்தில் கூட்டுறவு இயக்கம் தொடர்ந்து சீராக வளர்ந்தோங்கியுள்ளது. ஆற்றி வந்த பணிகளையும் அடைந்த வெற்றிகளையும் எண்ணிப் பூரிக்கும் நேரத்தில் வரும் காலத்தில் ஆற்றவேண்டிய பணிகள் ஏராளம் என்பது நம் கண்முன் தெரிகின்றது. வாழ்வின் அடிமட்டத்திலுள்ள ஆதரவற்ற நலிவுற்றோரின் நலம் காக்கும் கேடயமாக இருப்பது கூட்டுறவு இயக்கந்தான். அந்தப் பெரும் பணியில் நாம் நிறைவேற்ற வேண்டிய கடமைகள் நிரம்ப உண்டு. அந்த உணர்வை மக்கள் மன்றத்திலே பரப்பி கூட்டுறவு இயக்கத்தில் ஈடுபாட்டை வளர்த்து தொடர்ந்து பணிபுரிய பலப்படுத்த வேண்டும்.

நாணயத்தை அடித்தளமாகக் கொண்டு கூட்டுறவுக் கொள்கையில் நம்பிக்கையுடன் பணியாற்றினால், மாபெரும் சாதனைகளைக் குவிக்க முடியும். மக்களுக்காக மக்களால் உருவாக்கப்பட்டு மக்களால் நிர்வகிக்கப்படும் இந்த மக்கள் இயக்கம் மலர்ந்து மணம் பரப்பி எல்லோருக்கும் எல்லாம் என்று இருப்பதான பொன்னகரத்திற்கு வழி நடத்திச் செல்ல ஒன்றுபட்டுப் பணி புரிய வேண்டியது அனைவரது கடமையாகும்.

''வெல்க கூட்டுறவு.''



கூட்டுறவில் உறுப்பினர்கள் நேர்மையாக இருக்க வேண்டும். கூட்டுறவின் சிறப்பை நன்கு அறிந்திருக்க வேண்டும். முன்னேற்றம் காணக் குறிப்பிட்ட இலக்கு இருக்கவேண்டும். கூட்டுறவு முயற்சியின் வெற்றிக்கு இதுதான் ரகசியம்.

உறுப்பினர்களின் நாணயத்தைப் பொறுத்துத் தான் கூட்டுறவின் வெற்றி அமைகிறது. இவ்வியக்கம் சங்கங்களின் எண்ணிக்கையைப் பொறுத்ததல்ல; உறுப்பினர்களின் நேர்மையின் அடிப்படையில் அமைகிறது. —காந்தியடிகள்

கூட்டுறவோடு, கூட்டுறவியக்கத்தோடு, இந்தியாவைப் பிணைக்க வேண்டும் என்பதே என்னுடைய நோக்கம். அதுவே ஊர்தோறும் அடிப்படைச் செயலாக அமைய வேண்டும். இந்தியாவின் பொது எண்ணமே கூட்டுறவு அணுகுமுறையில் இருக்கவேண்டும்.

நமது உழவர்களை விஞ்ஞான முறையில் வேளாண்மைத் தொழில் செய்ய ஈடுபடுத்த வேண்டும். அதை நாம் எவ்வாறு செய்வது? கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாக இதை மிக எளிதாகச் செய்ய முடியும். வேறு அணுகுமுறை எதுவும் எனக்குத் தோன்றவில்லை.

—ஜவகர்லால் நேரு



# கூட்டுறவுச் செய்திகள்!

நிற்போது தமிழகத்தில் 116 பிரதமக்
கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் செயல்படு
கின்றன. அவை விற்பனை செய்து தந்த
வேளாண்மை உற்பத்திப் பொருட்களின்
மதிப்பு 1973-74-ல், ரூ. 1164.71 இலட்சமாக
இருந்தது. 1977-78-ல், ரூ. 3,376.48 இலட்ச
மாக உயர்ந்தது. இந்த வளர்ச்சியின் அளவு
190 சதவீதம். அவை வேளாண்மைக்குத்
தேவையான பொருட்களை 1977-78-ல் ரூபாய்
927.61 இலட்சத்துக்கு வழங்கின.

116 பிரதமக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்
களில் கோவை மாவட்டத்தில்தான் அதிக
எண்ணிக்கை (15) உள்ளன. அடுத்தபடியாக
வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள 5 விற்
பனைச் சங்கங்களும், ரூ.1141.72 இலட்சம்
மதிப்புள்ள வேளாண்மைப் பொருட்களை
விற்பனை செய்துள்ளன. இது மாநிலத்திலுள்ள
விற்பனைச் சங்கங்கள் செய்த மொத்த
விற்பனையில் 34 சதம் என்பது குறிப்பிடத்
தக்கது.

இதற்கு அடுத்த இடத்தைப் பெறுவது
இரண்டே விற்பனைச் சங்கங்கள் உள்ள நீலகிரி
மாவட்டமாகும். இவை விற்பனை செய்துள்ள
பொருட்களின் மதிப்பு ரூ. 656.72 இலட்
சங்கள் ஆகும். (19 சதம்). 1977-78 சேலம்
மாவட்டத்திலுள்ள சங்கங்கள் அதிக அள
வான ரூ. 14.24 இலட்சம் ஆதாயம் பெற்
றுள்ளன. அதற்கடுத்தபடியாக நீலகிரி மாவட்
டம் ரூ. 12.90 இலட்சம் ஆதாயம் பெற்றுள்
ளது.

## கூட்டுறவு நகர வங்கிகள்

கடந்த 10 ஆண்டுகளில் கூட்டுறவு
நகர வங்கிகள் சீரான முன்னேற்றமடைந்
துள்ளன. அவை 1977-78-ல் 131 ஆகக்
குறைந்தன. அவற்றின் உறுப்பினர் தொகை
ரூ. 10.82 இலட்சத்திலிருந்து 13.66 இலட்ச
மாக அதிகரித்துள்ளது. பங்கு மூலதனமும்
ரூ. 222 இலட்சத்திலிருந்து, ரூ. 461 இலட்ச
மாக உயர்ந்துள்ளது. அவை வழங்கிய குறு
கிய கால, நடுத்தரக்காலக் கடன்கள் ரூபாய்
1335 இலட்சத்திலிருந்து ரூ. 4838 இலட்ச
மாகப் பெருகிற்று. தமிழகத்தின் கூட்டுறவு
நிறுவனங்கள் வழங்கும் நகையீட்டுக் கடனில்
பெரும்பகுதி (52.93 சதம்) நகரவங்கிகளால்
வழங்கப்படுகிறது. இந்தியாவில் உள்ள 1407
நகர வங்கிகளில் தமிழகம் நான்காவது இடம்
பெறுகிறது.

## நீண்ட காலக் கடன்கள்

உழவர்களுக்குத் தேவையான நீண்ட
காலக் கடன்களை 223 பிரதம நிலவள
வங்கிகள் வழங்குகின்றன. இது 1968-69-ல்
106ஆக இருந்தது. இவற்றில் சேர்ந்துள்ள
உறுப்பினர்கள் கடந்த பத்து ஆண்டுகளில்
கணிசமாக உள்ளது. இவை வழங்கிய அதிக
அளவு கடன்கள் (1970-71) ரூ. 2431 இலட்சம்
ஆகும். 1977-78-ல் வழங்கிய கடனளவு
ரூ. 1207 இலட்சமாகும்.

## உடல் நலக் கூட்டுறவுகள்

நீலகிரி மாவட்டத்தில் ஒன்றும், இராம
நாதபுரத்தில் ஒன்றுமாக மொத்தம் இரண்டு
உடல் நலக் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன.
1977-78-ன் போது, உறுப்பினர்களுக்கும்,
இதரர்களுக்குமாக மொத்தம் 6392 பேருக்கு
இவை மருத்துவ வசதிகளை வழங்கின.

## கூட்டுறவுப் பயிற்சி


தமிழ்நாட்டில் காஞ்சீபுரம், தஞ்சாவூர்,
மதுரை, கோயம்புத்தூர், வேலூர், திருநெல்
வேலி ஆகிய இடங்களிலும் சென்னையிலு
மாக 7 கூட்டுறவுப் பயிற்சி நிலையங்கள்
உள்ளன. அரசுத்துறை சாராதவர்களுக்கும்,
இளநிலையினருக்கும் இவை கூட்டுறவுப்
பயிற்சியை அளித்து வருகின்றன. 1960-61-
முதல் 1977-78 வரை இவை 31144 பேருக்குப்
பயிற்சி அளித்துள்ளன. 1973-74-ல் 3498
பேருக்கு இது உச்ச அளவு பயிற்சி அளித்
திருந்தது.

இது தவிர தமிழ்நாடு அரசுப் பணித்
தேர்வு ஆணையகம் தேர்வு செய்யும் நபர்
களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக மத்திய
கூட்டுறவுப் பயிற்சிக்கழகமும் உயர்நிலைப்
பயிற்சி அளிப்பதற்காகக் கூட்டுறவுப் பயிற்சிக்
கல்லூரியும் சென்னையில் உள்ளன. இந்தியா
விலே ரூ. 50 இலட்சம் மதிப்புள்ள கட்டடத்
தைக்கொண்ட கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி
சென்னையில் உள்ளதாகும்.

## நூற்பாலைகள்

31—12—78-ன்படி தமிழகத்தில் 13
கூட்டுறவு நூற்பாலைகள் உள்ளன. (மதுரை
யில் மிசரேர் கூட்டுறவு நூற்பாலை 1977-
ஆகஸ்டு முதல் இயங்கி வருகிறது) 1972-73-ல்
12 நூற்பாலைகளில் 9 நூற்பாலைகள் ரூ.
48.22 இலட்சம் ரூபாயை இலாபமாகச் சம்பா
தித்தன. 1975-76-ல் 12 கூட்டுறவு நூற்
பாலைகளும் ரூ. 275.50 இலட்சம் ரூபாய்
அளவுக்கு நஷ்டத்தில் செயல்பட்டன. ஆனால்,
31-12-78-ல் இவை அனைத்தும் இலாபத்தை
ஈட்டின. சேலம் கூட்டுறவு நூற்பாலை
அதிக அளவு நூலை உற்பத்தி செய்து ரூபாய்
32.77 இலட்சத்தை ஆதாயமாகப்பெற்றது.





# வேளாண்மைக்குக் கூட்டுறவுக் கடன்

டி. ஏ. எஸ். பிரகாசம், ஐ.ஏ.எஸ்.
கூட்டுறவுப் பதிவாளர்

கிராமப் பொருளாதாரத்தின் அடிப்படை வேளாண்மையே. பல பொருளாதாரத் துறைகளில் கூட்டுறவு முறை பின் பற்றப்பட்டாலும், வேளாண்மைத்தொழிலுக்கும் அதன் வளர்ச்சிக்கும் கூட்டுறவு இயக்கம் ஆற்றிவரும் பணி தனிச் சிறப்புடையதாகும்.

தமிழ்நாட்டில் மூன்று அல்லது நான்கு கிராமங்களுக்கு ஒன்று வீதம் சுமார் 4700 கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் பணியாற்றி வருகின்றன. இரசாயன உரம், பூச்சிக்கொல்லி மருந்து போன்ற இடு பொருள்களையும் இதர சாகுபடிச் செலவிற்குத் தேவைப்படும் ரொக்கத்தையும் ஓராண்டுக்குள் திருப்பிச்செலுத்த வேண்டிய குறுகிய காலக்கடன்களாகக் கிராமக்கூட்டுறவுச் சங்கங்கள் வழங்குகின்றன. மேலும், உழவு மாடு வாங்கவும், மாட்டு வண்டி வாங்கவும், கறவை மாடுகள் வளர்த்தல், கோழி வளர்த்தல் போன்ற வேளாண்மைத்தொழில்களுக்காகவும் மூன்று முதல் ஐந்து ஆண்டுகளுக்குள் திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய மத்திய காலக் கடன்கள் வழங்குகின்றன. ஒவ்வொரு வகைப்பயிருக்கும் சாகுபடி செய்யத் தேவைப்படும் உரம் முதலிய இடுபொருள்களும் ரொக்கமும், அந்தப்பயிரின் அறுவடைக் காலத்தையொட்டி கடனைத் திருப்பிச்செலுத்தும் தேதியும் நிர்ணயிக்கப்படுகின்றன. சொத்து ஆதாரமின்றி இன்னொரு உறுப்பினரின் பிணையத்தின் பேரில் (Surety) கடன்கள் வழங்கப்படுகின்றன. சொந்த நிலமில்லாத குத்தகை சாகுபடியாளர்களுக்கும் இந்தக் கடன்கள் கொடுக்கப்படுகின்றன.

இந்தக் கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் அரசின் நிதி உதவியுடன் சுமார் 3,000 கிடங்குகள் கட்டியுள்ளன. இரசாயன உரத்தை முன்கூட்டி இருப்பு வைத்து, பருவத்தில் வழங்குவதற்கு இவை பெரிதும் உதவுகின்றன. இரசாயன உரத்தைக் கடனின் ஒரு பகுதியாக வழங்குவதன்மூலம் பசுமைப் புரட்சிக்கு இக்கூட்டுறவுச் சங்கங்கள் பெரும் துணையாக இருக்கின்றன.

சென்ற ஆண்டுக்கு முந்தைய ஆண்டு, அதாவது 1977-78-ல், 120 கோடி ரூபாய் அளவிற்கு இந்தச் சங்கங்களால் பயிர்ச்சாகுபடிக் கடன்கள் வழங்கப்பட்டன. இது தமிழ்நாட்டு விவசாயிகளின் மொத்த சாகுபடிக் கடன்தேவையில் 60 சதவீதம் என்று கணக்கிடப்படுகிறது. கடன் நிவாரணச் சட்டத்தின் காரணமாக, தனியார்களிடமிருந்து கிடைத்து வந்த கடன் வசதி வெகுவாகக் குறைந்துவிட்டதால், இந்தக் குறையை முடிந்த அளவு சரிக்கட்டும் வகையில் 900-க்கு மேற்பட்ட கிராமக்கூட்டுறவுச்சங்கங்கள் நகையீட்டுக் கடன்கள் வழங்க முற்பட்டுள்ளன. இந்தச் சங்கங்களும் கூட்டுறவு மத்திய வங்கிக் கிளைகளும், நகர வங்கிகளும் சேர்ந்து சுமார் 79கோடி ரூபாய் அளவிற்குச் சென்றாண்டு நகையீட்டுக் கடன்கள் வழங்கின. விளைபொருளின் விலை சாதகமாக இல்லாத சமயத்தில் கூட்டுறவுச் சங்கக் கிடங்கில் ஈடு வைத்துக் கடன் பெற்று, நல்ல விலை கிடைக்கும் நேரத்தில் அதை விற்கும் வசதியும் கூட்டுறவுச் சங்கத்தினால் செய்யப்படுகிறது. மேலும், இன்றியமையாத நுகர் பொருட்களை இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் விற்பனை செய்கின்றன. சிமெண்டு, மண்ணெண்ணெய் போன்ற கட்டுப்பாடான பொருள்களும் விநியோகிக்கப்படுகின்றன.

இப்படி எல்லா வகையிலும் விவசாயிக்கு உதவக்கூடிய, கிராமத்திலேயே இருக்கக்கூடிய ஒரே நிறுவனம் கிராமக் கூட்டுறவுச் சங்கம்தான். அதிக வட்டி வாங்கும் வட்டிக் கடைக்காரர்களுக்கும், சிறு வியாபாரிகளுக்கும் கிராமக் கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சி வருத்தத்தை அளிக்கும் என்பதில் ஐயமில்லை. இடைத்தரகை நீக்கி, மக்களுக்கு நேரடிப் பயன் கிடைக்கச் செய்வதே கூட்டுறவுச் சங்கத்தின் நோக்கமாகும். கிராம மக்கள் தங்கள் தேவைகளை உரிய நேரத்தில், நியாயமான விலையில் கிராமத்திலேயே பெற முடிகிறது. விவசாயிகளே கிராமக் கூட்டுறவுச் சங்கத்தின் சொந்தக்காரர்கள். அவர்களால் தேர்ந்தெடுக்கப்படும் குழு, சங்கத்தின் நிர்வாகம் செய்கிறது. ஆகையால், விவசாயிகளின் தேவைகளையெல்லாம் முறைப்படி நிறைவேற்றிக்கொள்ளும் வாய்ப்பு இருக்கிறது.

பயிர் ஈட்டுறுதித் (Crop insurance) திட்டம் ஒன்று 10 மாவட்டங்களில் உள்ள 17 வட்டங்களில் அடுத்த நெற்பயிருக்குக் கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் செயல்படுத்தப்பட இருக்கிறது. கிராமப் பொருளாதாரத்தில் இந்தக் கூட்டுறவுச் சங்கத்தின் இன்றியமையாத நிலையை உணர்ந்துதான் பல தன்னலமற்ற சமூகத் தலைவர்கள் கூட்டுறவு இயக்கத்தைப் பாடுபட்டு வளர்த்துள்ளனர். அரசும் பல வகைகளில் இதன் வளர்ச்சிக்கு உதவி செய்து வருகிறது.

கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் எப்படி நிதிகளைப்பெற்று கடன் வழங்குகின்றன என்பதைப்பற்றித் தெரிந்து கொள்வது மிகவும்

முக்கியம். விவசாய உறுப்பினர்கள் தாங்கள் பெறுகின்ற கடனுக்கு, சிறு விவசாயியாக இருந்தால் கடனில் 5 சதவீதமும், மற்ற விவசாயியாக இருந்தால் 10 சதவீதமும் சங்கத்தில் பங்குத் தொகையாகச் செலுத்தவேண்டும். கடனின் ரொக்கப்பகுதியில் 2 சதவீதத்தைச் சிக்கன நிதியாகச் செலுத்த வேண்டும். கூட்டுறவுச் சங்கம் உறுப்பினர்களிடமிருந்து இதர இட்டு வைப்புகளும் பெறுகின்றது. இவ்வாறு கூடுகின்ற நிதியோடு மாவட்ட மத்திய வங்கியில் இருந்து கடன் பெற்று, உறுப்பினர்களுக்குக் கடன் வழங்கப்படுகிறது.

மாவட்ட மத்திய வங்கிகள் தாங்கள் பொதுமக்களிடமிருந்து பெறுகின்ற இட்டு வைப்புகளில் இருந்தும், மாநிலக் கூட்டுறவு வங்கி மூலம் பெறுகின்ற கடன் தொகை மூலமும் கிராமக் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன்கள் வழங்குகின்றன. மாநிலக் கூட்டுறவு வங்கி ரிசர்வ் வங்கியில் இருந்து பெறுகின்ற கடனோடு, பொதுமக்களிடமிருந்து பெற்றுள்ள இட்டு வைப்புகளையும் சேர்த்து மத்திய வங்கிகளுக்குக் கடன் வழங்குகிறது. சராசரியாகப் பார்க்கும்போது, விவசாயிகளுக்குக் கொடுக்கப்படும் பயிர்ச் சாகுபடிக் கடனில் 50 சதவீதத்திற்கும் குறைவாக ரிசர்வ் வங்கியில் இருந்து கிடைக்கிறது.

மற்ற பகுதி விவசாய உறுப்பினர்களின் பங்குத்தொகை, இட்டு வைப்புகள், மத்திய வங்கிகள், மாநில வங்கி ஆகியவற்றிலுள்ள இட்டு வைப்புகளைக் கொண்டு அளிக்கப்படுவதாகும். மற்ற எந்த வங்கியையும் போலத்தான் கிராமக் கூட்டுறவுச் சங்கமும் இயங்குகிறது. அது, தான் உயர் நிலை வங்கியில் இருந்து பெற்ற கடனை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்த வேண்டும். உறுப்பினர்களுக்குக் கொடுக்கும் கடன்களை உரிய காலத்தில் வசூலித்துத் தான் தன்னுடைய நாணயத்தை அது காப்பாற்றிக் கொள்ள முடியும். இதே நிலைமைதான் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிக்கும், மாநிலக் கூட்டுறவு வங்கிக்கும் உள்ளது. கடன் வசூலில் ஓரளவுக்குச் சுணக்கம் ஏற்பட்டால் இவை தங்கள் சொந்த நிதியைக் கொண்டு தாங்கிக் கொள்ள முடியும். பெருத்த அளவிற்குச் சுணக்கம் ஏற்பட்டால் மேல்நிலை வங்கிகளுக்குக் கடனை உரிய காலத்தில் செலுத்த முடியாமல் போய் மேற்கொண்டு கடன் பெற்று விவசாயிகளுக்குக் கடன் வழங்கும் சக்தி இல்லாத நிலை ஏற்பட்டு விடும். இதனால் தான் கிராமக் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் உரிய காலத்தில் கடனைச் செலுத்த வேண்டுமென்பது அவசியமாகிறது.

வறட்சி, வெள்ளம் போன்ற இயற்கையின் சீற்றத்தால் விளைச்சல் ஆறணாவுக்குக் குறைந்து விட்டால், அந்தப் பயிருக்காகப் பெற்ற குறுகிய காலக் கடனை அடுத்த மூன்று ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தும் மத்திய காலக் கடனாக மாற்றும் வசதி ரிசர்வ் வங்கியின் உதவியுடன் அளிக்கப்படுகிறது. தொடர்ந்து இரண்டாவது ஆண்டிலும் விளைச்சல் பாதிக்கப்பட்டால், மேற்படி கடன் 5 ஆண்டுக் கடனாக மாற்றப்படுவதோடு, இரண்டாவது பெற்ற குறுகிய காலக் கடனும் மூன்றாண்டுக் கடனாக மாற்றப்படுகிறது.

சென்ற சில ஆண்டுகளில் இவ்விதம் இயற்கைச் சீற்றத்தினால் தமிழ்நாட்டில் பல பகுதிகள் பாதிக்கப்பட்டு, மேற்கண்ட வகையில் குறுகிய காலக்கடன்கள் மத்திய காலக் கடன்களாக மாற்றப்பட்டுள்ளன. இந்த வசதி இருந்தும் தவணை தவறிய கடன்களின் நிலுவை அண்மைக் காலத்தில் அதிகரித்து வந்துள்ளது. விவசாயிகளின் சில பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அமைக்கப்பட்ட உயர் மட்டக்குழு விவசாயிகளின் கடன் பிரச்சினையையும், பரிசீலித்து சில பரிந்துரைகள் செய்தது. இந்தப் பரிந்துரைகளைப் பரிசீலித்து தமிழக அரசு ஏறக்குறைய 27 கோடி அளவிற்குக் கூட்டுறவுச் சங்கக் கடன் பெற்ற உறுப்பினர்களுக்கு மானியம் அளித்துள்ளது. முக்கியமாக, வறட்சி போன்ற இயற்கையின் சீற்றத்தால் பாதிக்கப்பட்டு, ஒரு விவசாயிக்கு மாற்றியமைக்கப்பட்ட மத்திய காலக் கடன்கள் இரண்டு இருந்தால் மூன்று ஆண்டுகளிலும், மூன்று இருந்தால் ஐந்து ஆண்டுகளிலும், நான்கு இருந்தால் ஆறு ஆண்டுகளிலும் அவற்றைத் திருப்பிச் செலுத்தும் வகையில் அக்கடன்கள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

இந்தக் கடன்களில் உரிய தேதி தாண்டிய தவணைத் தொகைகளும் சேர்த்து ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. 30-6-78 அன்று இந்தக் கடன்களின் மீது செலுத்தப்பட வேண்டியிருந்த வட்டி முழுவதும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. 1978-79-ல் கட்ட வேண்டிய தவணைத்தொகைகள் ஒத்தி வைக்கப்பட்டு, ஒருங்கிணைக்கப்பட்ட கடனின் முதல் தவணை 1979-80-ல் செலுத்தப்படும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. உதாரணமாக, 4 மத்திய கால மாற்றுக்கடன்களை உடைய ஒரு சிறு விவசாயி மீதம் கட்ட வேண்டியுள்ள மொத்தம் 2997 ரூபாயை 1977-78- இல் இருந்து மூன்று ஆண்டுகளில் முறையே ரூ. 1028; ரூ. 1027, ரூபாய் 942 என்று திருப்பிச் செலுத்த வேண்டி இருப்பதற்கு பதிலாக, 1979-80-ல் இருந்து 6 ஆண்டுகளில் ஆண்டொன்றுக்கு ரூ. 500 வீதம் செலுத்தினால் போதும். இதனால் ஒவ்வொரு ஆண்டும் கட்ட வேண்டிய தவணைத் தொகை குறைந்து விவசாயிக்கு நிவாரணம் கிடைக்கிறது. இந்த வகையில் நிவாரணம் அளிப்பதற்காகத் தமிழக அரசு மத்திய கூட்டுறவு வங்கிகளுக்குச் சுமார் 10 கோடி ரூபாய் அளவிற்குக் கடன் உதவி அளிக்க வேண்டியுள்ளது.

இயற்கையின் சீற்றத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மேற்கண்ட வகையில் அரசு உதவி அளித்துள்ளது. பாதிக்கப்படாத விவசாயிகள் தங்கள் கடன்களை திருப்பிச் செலுத்தாமல் இருக்கிறார்கள். 1977-78-ல் சாகுபடிக் கடன் பெற்றவர்களில் பலர் 1978-79-ல் விளைச்சல் பாதிக்கப்படாமல் இருந்தும் கடனைத் திருப்பிச் செலுத்தவில்லை. இவர்கள் திருப்பிச் செலுத்தாமல் இருப்பதற்கு எந்தவித நியாயமுமில்லை. பெருந்தொகையை அதிக நாட்கள் வேண்டுமென்றே திருப்பிக்கட்டாமல் இருப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது.

கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்கள் கடமையை உணர்ந்து, உரிய நேரத்தில் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதுதான் முறை. நடவடிக்கை எடுத்து வசூலிக்க வேண்டும் என்றநிலை கூட்டுறவு இயக்கத்திலே தவிர்க்கப்படவேண்டிய ஒன்றாகும். எல்லா உறுப்பினர்களும் கண்காணிப்புடன் ஒத்துழைத்து வசூல் செய்தால், இந்த நிலை தவிர்க்கப்படும். சங்க நிர்வாகக் குழுவினரும் தங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் பொறுப்பைக் கவனத்துடன் நிறைவேற்றவேண்டும். இதிலே அலட்சியம் இருந்தால் விவசாயிகளுக்குக் கேடயமாக இருக்கும் கிராமக் கூட்டுறவுச் சங்கம் நலிவடைந்து, விவசாயிகள் கடன் வசதியும் இதர வசதிகளும் இன்றி அவதிப்பட நேரிடும்.

கிராமக் கூட்டுறவுச் சங்க நிர்வாகக் குழுவினரும், உறுப்பினர்களும் மத்திய கூட்டுறவு வங்கி மேற்பார்வையாளர்களும் இதர அலுவலர்களும் நல்ல முறையில் முழு முயற்சி எடுத்து கிராமக் கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சியைக் குன்றாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

# பெரியார் மாவட்டம்

டி. வி. வெங்கட்டராமன், ஐ.ஏ.எஸ்.,
ஆணையர் மற்றும் அரசுச் செயலர்,
வருவாய்த்துறை.

**பெ**ரிய மாவட்டங்களைச் சீரமைத்து அரசுப் பணிகள் செம்மையாகவும், விரைவாகவும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்கிற தமிழ்நாடு அரசின் தலையாய கொள்கையின் அடிப்படையில், கோவை மாவட்டத்தைப் புனரமைக்க அரசு முடிவெடுத்து, அதற்கான ஆணைகளை 1979ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்களில் வெளியிட்டது. முதல் கட்டமாக, சமுதாய மறுமலர்ச்சிக்கு வித்தூன்றிய வரலாற்று நாயகர் தந்தை பெரியார் அவர்களின் நினைவிற்கு அழியாத அஞ்சலி செய்யும் வகையில் தமிழ்நாடு அரசு, புதியதொரு மாவட்டத்தினைப் பெரியார் அவர்களுடைய பெயரில் ''பெரியார் மாவட்டம்'' அவர் பிறந்த ஈரோடு நகரத்தினைத் தலைமையிடமாகக் கொண்டு அமைத்துள்ளது.

புதிய மாவட்டத்தினை அமைக்கும் பொறுப்பு ஒரு தனி அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டு, அதற்கான எல்லாப் பணிகளும் நான்கே மாதங்களில் முடிக்கப்பட்டு 17.9.79-ஆம் நாளன்று ஈரோட்டில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகமும் மற்றும் வேறு சில அலுவலகங்களும் செயல்படத் துவங்கியுள்ளன. அரசின் எல்லாத் துறைகளும் இப்புதிய மாவட்டத்தைத் துவங்கும் பணிகளில் ஊக்கத்துடன் ஈடுபட்டு மேலான ஆதரவை அளித்ததன் விளைவாக, இத்துணை குறுகிய காலத்தில் இம்மாவட்டம் மாநிலத்தின் 16-வது மாவட்டமாகச் செயல்பட ஏதுவாயிற்று.

இம்மாவட்டம் பற்றிய சில முக்கியப் புள்ளி விவரங்கள் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | பிரிக்கப்படுமுன் கோவை மாவட்டத்தின் மொத்த பரப்பு | 15,673 ச.கி.மீ. |
| 2. | பெரியார் மாவட்டத்தின் மொத்தப் பரப்பளவு | 8169.17 ச.கி.மீ. |
| 3. | வருவாய்-வளர்ச்சிக் கோட்டங்கள் | 2 (ஈரோடு, கோபி) |
| 4. | மாவட்டத்திலுள்ள மொத்த வட்டங்கள்: | 6 |
| 5. | வளர்ச்சி ஒன்றியங்கள் | 20 |
| 6. | நகராட்சிகள் | 5 |
| 7. | நகரியம் | 1 |
| 8. | பேரூராட்சிகள் | 61 |
| 9. | ஊராட்சிகள் | 346 |
| 10. | கிராமங்கள் | 510 |
| 11. | 1971 மக்கள் கணக்கெடுப் பின்படி மக்கள்தொகை | 17,97,016 (சுமார் 18 இலட்சம்) |
| 12. | தற்போதைய உத்தேச மக்கள் தொகை | சுமார் 20 இலட்சம் |
| 13. | கல்லூரிகள் | 5 |
| 14. | உயர்நிலைப்பள்ளிகள் | 107 |
| 15. | இளநிலைப்பள்ளிகள் | 1,341 |
| 16. | படித்தவர் சதவீதம் | 41% |
| 17. | தொழிற்பயிற்சி நிலையங்கள் | 2 |

புதிதாக உருவாகியுள்ள பெரியார் மாவட்டம், கோவை மாவட்டத்தோடு ஒப்பிடும்போது நிலப்பரப்பில் சில நூறு கிலோ மீட்டர்கள் கூடுதலாகக் கொண்டிருக்கும். இதன் மக்கட் தொகை பெருமளவிற்குக் குறைவுபட்டிருக்கும்.

கீழ்பவானித் திட்டம், அரக்கன் கோட்டை, தடப்பள்ளி, மேட்டூர்க் கால்வாய், காளிங்கராயன் கால்வாய்த் திட்டங்களினால் இம்மாவட்டத்தின் வடக்கு மற்றும் வடகிழக்குப் பகுதிகள், வளங்கொழிக்கும் பகுதிகளாக விளங்குகின்றன. பெருந்துறையின் சில பகுதிகள், ஊத்துக்குளி, சென்னிமலை, காங்கேயம், மூலனூர், வெள்ளக்கோவில், தாராபுரம் ஆகிய பகுதிகள் வறட்சிப் பகுதிகளாகும். பரம்பிக்குளம -ஆளியாறு திட்ட விரிவாக்கத்தின் பயனால் காங்கேயம் தாராபுரம் பகுதிகளில் கூடுதலாக மானாவாரிப் புஞ்சை நிலங்கள் பாசனம் பெற வாய்ப்புள்ளது.

இம்மாவட்டத்தின் வடக்கெல்லையில் தாளவாடி, பர்கூர் பகுதிகளில் வன வளமும் மலை வளமும் அதிகம். கோபி, பவானி, ஈரோடு வட்டங்களில் நஞ்சைப் பகுதிகள் பெருமளவில் உண்டு. மற்ற வட்டங்களில் பெருவாரியாக வறண்ட பகுதிகளே அதிகம். நீர் வளத்தைப் பொறுத்தவரை காவிரியும், பவானி ஆறும் பெரியார் மாவட்டத்தின் உயிரோட்டமாக அமைந்திருக்கின்றன. ஈரோடு, பவானி, சத்தி வட்டங்களில் நஞ்சை சாகுபடியில் இவ்விரு ஆறுகளும் முக்கிய அங்கம் வகிக்கின்றன.

**வேளாண்மை:**—உணவு உற்பத்தியிலும் வணிகப் பயிர்களின் விளைச்சலிலும் இம்மாவட்டம் சிறப்பான இடத்தினைப் பெற்றுள்ளது. கிராமத் தொழில்களான கதர் உற்பத்தி, கைத்தறி உற்பத்தி, துணிகளைச் சாயமேற்றி அச்சிடுதல் போன்ற தொழில்கள்

சிறப்பாகப் பெருகியுள்ளன. தோல் பதனிடும் தொழில், துணிகளுக்குச் சாயமேற்றும் தொழில் ஆகியவை தற்போது அதிகமாகப் பெருகியுள்ளது. சுற்றுச் சூழ்நிலையைப் பாதிக்கக்கூடிய கழிவு நீரை அதிகமாக வெளியேற்றும் தொழில்களுக்குத் தனியாகத் தொழிற்பேட்டை அமைக்க மாவட்ட அளவில் தற்போது ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. தொழில் வாணிபத் துறையிலும், பெரியார் மாவட்டம் கோவைக்கு நிகரான மதிப்புப் பெற்றது. ஈரோடு நகரில் மஞ்சள், துணி நூல் வியாபாரம், பவானி நகரில் படுக்கை விரிப்பு நெய்யும் தொழில், சென்னிமலையின் புகழ்பெற்ற ஜவுளிகள், ஈரோட்டின் நிலக்கடலை எண்ணெய், தோல்பொருட்கள், 'ஸ்கிரீன் பிரிண்டிங்' மற்றும் 'பாடிக்' முறையில் துணிகளை அச்சிடும் தொழில்கள் ஆகியன குறிப்பிடத்தக்கவை.

**கால்நடை வளம்:**—காங்கேயம் காளைகளுக்குப் பெயர் பெற்ற பெரியார் மாவட்டத்தில் கால்நடைச் செல்வத்திற்கும் குறைவில்லை. சமீப காலத்தில் கோழி வளர்த்தலும் அது சார்புடைய தொழில்களான கோழிப் பண்ணை அமைத்தல், கால்நடைத் தீவனம், கோழித் தீவனம் தயாரித்தல் ஆகிய தொழில்கள் வெகுவாக முன்னேறியுள்ளன. தமிழகத்தின் பெரிய சந்தைகளில் ஒன்றான ஈரோடு வாரச் சந்தை நெடுங்காலமாகவே ஈரோடு மற்றும் சுற்றுப்புறக் கிராமங்களின் பொருளாதார வளர்ச்சியில் உறுதுணையாக இருந்து வந்திருக்கிறது.

**திட்டப்பணிகள்:**—புதிய மாவட்டத்தில் பல்வேறு துறைகளால் நிறைவேற்றப்பட பல திட்டங்கள் உள்ளன. ஈரோடு நகரப் பொது மக்களுக்குக் குடிநீர் வழங்கும் தீவிரத் திட்டம் சென்ற ஆண்டு ஈரோட்டில் நடைபெற்ற பெரியார் நூற்றாண்டுத் துவக்க விழாவின் போது முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. இப்பணி துரிதமாக முன்னேறி வருகிறது. மத்திய அரசு நிறுவனமான வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தின் (HUDCO) ஆதரவுடனும், தமிழ்நாடு அரசின் நிதியுதவியுடனும், ஈரோடு நகராட்சிப் பகுதியில் கீழ்க்கண்ட திட்டங்களைச் செயல்படுத்த வாய்ப்புக்கள் உள்ளன. இத்திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்கக் கொள்கை அளவில் 'HUDCO' ஒத்துக்கொண்டுள்ளது.

| திட்டம் | உத்தேச செலவுத் தொகை ரூ. |
|---|---|
| 1. மணிக்கூண்டு அருகே விரைவு வடிகால் சாக்கடைத்திட்டம் | 45.5 இலட்சம் |
| 2. பாதாள சாக்கடைத்திட்டம் | 6 கோடி |
| பெரும்பள்ளம் ஓடையில் குடிசைவாசிகளுக்கான புதிய குடியிருப்புக்கள் கட்டுதல். | 52.53 இலட்சம் |
| 4. புதிய மாவட்ட அலுவலகங்களின் மையம் அமைத்தல், மற்றும் அரசு அலுவலர்க்கான வீட்டு வ்சதித் திட்டம் | 78.76 இலட்சம் |
| 5. பொருளீட்டும் நோக்குடன் (Remunerative Enterprise) பேருந்து நிலையத்தில் கடைகள் அமைக்கும் திட்டம், தினசரி, வாராந்தரச் • சந்தைகள் அமைத்தல், துணிக்கடைகள் மற்றும் அங்காடி மையம் அமைத்தல் ஆகிய திட்டங்கள். | 1.73கோடி |

இவைகளைத் தவிர, குடிநீர் வடிகால் வாரியத்தினரால் நகராட்சி எல்லையில் ரூ. 194 இலட்சம் செலவில் குடிநீர் வழங்கு வளர்ச்சித் திட்டமும் செயல்படவுள்ளது. இப்பணிக்கான அங்கீகாரம் மார்ச்சு 1979ல் அரசினால் வழங்கப்பட்டுள்ளது. இப்பணியைத் தொடங்கித் துரிதமாக முடிக்க, இவ் வாரியத்தின் செயற் பொறியாளர் அலுவலகம் ஒன்று ஈரோடு நகரில் செயல்பட ஆரம்பித்துள்ளது. மேலும் ஈரோடு நகராட்சியினரின் முன்மொழிவுகளின்பேரில் நகரில் ''சில்லரைத் துணிக்கடைப் பகுதி'' ஒன்றையும், ''தினசரி மார்க்கெட்'' ஒன்றையும் ரூ. 30.50 இலட்சம் செலவில் துவங்க அரசினர் சமீபத்தில் ஆணை பிறப்பித்துள்ளனர். மேலும், ஈரோடு நகரைச் சுற்றியுள்ள வீரப்பன் சத்திரம், பிராமணப் பெரிய அக்ரகாரம், காசிபாளையம், சூரம்பட்டி ஆகிய நகர்ப்புற ஊர்களுக்கும் குடிநீர் வழங்க ரூ.92.17 இலட்சம் செலவில் ஒரு திட்டமும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இத் திட்டங்களெல்லாம் சீரான காலமுறை அடிப்படையில் (Phased Programme.) படிப்படியாகவும், துரிதமாகவும் நிறைவேற்றப்படும்.

**சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம்:**—ஈரோட்டில் தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்கெனத் தனியாகவும், கோபியில் இயந்திரத் தொழில்களுக்கெனத் தனியாகவும், தொழிற்பேட்டைகள் நிறுவுதல், தொழிற் கூடங்கள் கட்டி சிறிய தொழில் தொடங்குவோருக்குத் தவணை முறையில் கடன்களையும் தேவையான முக்கிய உதவிகளையும் அளித்தல், சிறு தொழிற்கூடத் திட்டத்தின் கீழ் கிராமப்புற மக்களின் மேம்பாட்டிற்கான சைக்கிள் பழுதுபார்த்தல், 'பவர்' சலவைக் கடை, மருந்து தெளிக்கும் கருவிகளைப்பழுது பார்த்தல் போன்ற சுயவேலை வாய்ப்பு அளிக்கும் திட்டங்களை ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் சுமார் 10 இடங்களில் செயல்படுத்துதல் முதலியன தற்போது சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் பரிசீலித்து வருகிறது.

**கைத்தறி மற்றும் துணி நூல் துறை:** பெரியார் மாவட்டத்தில் கைத்தறித் தொழில் முக்கியப் பங்கு வகிக்கிறது. நடப்பு ஆண்டில் சென்னிமலையில் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுத் துறையின் கீழ் கைத்தறிகளைக் கொண்டு வருதல், ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப உதவி அளித்தல், தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அமைத்து கூலி நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்தல், கைத்தறி நெசவாளர் சேமிப்பு, பாதுகாப்பு வசதிகள், வீட்டு வசதிகள் ஆகியனவற்றை விரிவாக்குதல் ஆகிய திட்டங்கள் இத்துறையின் பரிசீலனையில் உள்ளன.

**கால்நடை பராமரிப்புத் துறை:** பவானி சாகர் அருகில் வெள்ளகண்டி என்ற இடத்தில் சுமார் 5,000 ஏக்கரில் வனத் துறை, வரு

# மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர்

அவர்களால்

24-9-'79 அன்று துவக்கி வைக்கப்பட்ட

# பெரியார் மாவட்டம்





வாய்த் துறை, கால்நடைப் பராமரிப்புத் துறை ஆகியன அமைக்கும் திட்டமும், மற்றும் ஓர் ஆட்டுப் பண்ணை அமைக்கும் திட்டமும் பரிசீலனையில் உள்ளது.

**வீட்டு வசதி வாரியம்:** ஈரோடு பெரும்பள்ளம் ஓடையில் உள்ள சுமார் 2,000 குடிசைகளை அப்புறப்படுத்திவிட்டு சுமார் 4.70 ஏக்கர் நிலத்தில் ரூ. 52.53 இலட்சம் செலவில் ஏழை எளிய மக்களுக்கு வீடு கட்டி வழங்கும் திட்டம் அரசினரின் பரிசீலனையில் உள்ளது. அரசு அலுவலர்களுக்கான வாடகை வீடு அளிக்கும் திட்டத்தின் கீழ் புதிதாக 176 வீடுகளைக் கட்ட அரசு ஆணையிட்டுள்ளது. நசியனூர், கொல்லம்பாளையம் ஆகிய கிராமங்களில் முறையே 81.36 ஏக்கர், 144.90 ஏக்கர் நிலம் கையகப்படுத்தி, வீடுகள் கட்டும் திட்டம் உள்ளது. பல்வேறு தர வருமானமுள்ளவர்களுக்காக 'HUDCO' உதவியுடன் பெரியார் நகரில் 808 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. இவை மனுதாரர்களுக்கு விரைவில் வழங்கப்படவுள்ளன.

**பால் வள அபிவிருத்தி:** பெரியார் மாவட்டம் பால் உற்பத்தியிலும், பால்படு பொருட்கள் உற்பத்தியிலும் தனி இடத்தைப் பெற்றுள்ளது. தேசியப் பால்வளப் பெருக்கக் கழகத்தினரால் ரூ. 1.50 கோடி செலவில் சித்தோட்டிற்கு அருகே ஏற்படுத்தப்படவிருக்கும் பால்வளக் கூட்டுறவு அமைப்பு, குஜராத் மாநிலத்தில் 'ஆனந்த்' எனப்படும் இடத்தில் ஏற்பட்டுள்ளதுபோன்று புரட்சிகரமான வளர்ச்சிக்கு வித்திடும் என எதிர்பார்க்கலாம். மேலும், கால்நடைத் தீவன ஆலை, பதனிடும் நிலையங்கள் எல்லாவற்றிற்கும் முழுமையாக ரூ. 6 கோடி செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. 500 பேருக்கு நேரடி வேலை வாய்ப்பும் 15,000 பேருக்கு மறைமுகமாக வேலைவாய்ப்பும் இதனால் கிடைக்க வசதியுண்டு.

பெரியார் மாவட்டம், பல வசதிகளைக் கொண்ட ஒன்றாகும். உழவுத் தொழிலிலும், வாணிபத்திலும் தொழில் வகைகளிலும் ஏற்கெனவே கணிசமான முன்னேற்றத்தைக் கண்டுள்ள மாவட்டங்களில் ஒன்றாகும்; கடுமையாக உழைக்கக்கூடிய விவசாயப் பெருங்குடி மக்கள் நிரம்பிய மாவட்டம், மேலும், அரசின் பல்வேறு திட்டங்கள் அடிப்படையில் வெகு வேகமாக முன்னேற்றம் காண்பதற்கு வாய்ப்புகள் ஏராளமாக உள்ள ஒரு மாவட்டம்.

இப்புதிய மாவட்டத்தைத் துவக்குவதால் அரசின் பல பொருளாதார, சமூக நலத் திட்டங்கள்—இப்புதிய மாவட்டத்தில் ஊக்கத்துடன் நிறைவேற்றப்பட்டு, ஏழை, எளிய மக்கள் வாழ்வு வளம்பெற வாய்ப்புகள் பெருகும்.

## புள்ளியியல் துறை—மாதிரி ஆய்வு


தமிழ்நாடு அரசின் புள்ளியியல் துறை மத்திய அரசின் தேசிய மாதிரி ஆய்வு நிறுவனத்துடன் பங்கேற்று, வர்த்தகம், போக்குவரத்து, உணவு விடுதி, தேநீர் விடுதி, கிடங்கு மற்றும் சேவைப் பிரிவு விவரங்களை 1979-80ல் மாதிரி ஆய்வு செய்யத் துவக்கியுள்ளது.

புள்ளியியல் துறையின் சிறப்புப் பயிற்சி பெற்ற பணியாளர்கள் மேற்குறித்த தொழிற் பிரிவுகளில் ஈடுபட்டுள்ளோரைச் சந்தித்து, இதற்கெனச் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட படிவங்களில் விவரங்கள் சேகரிக்க கிராம-நகர்ப்புறங்களுக்கு மிக விரைவில் வருவார்கள். சேகரிக்கப்படும் விவரங்கள் திட்டப் பணிக்கு அடித்தளமாக அமைவதுடன், சமுதாயம் முழுமைக்கும் பயன் தரும் திட்டங்கள் தீட்டுவதற்கும், ஆட்சியாளர்களுக்கும் பயனுடையதாக இருக்கும். ஆகையால், சேகரிக்கப்படும் விவரங்கள் காலங் கடவாமலும், துல்லியமாகவும் இருக்க வேண்டும் என்பது மிகவும் அவசியமாகிறது.

சேகரிக்கப்படும் விவரங்களும், விவரம் வழங்கும் தனி நபர் அடையாளங்களும் எந்தச் சூழ்நிலையிலும் வெளியிடப்படமாட்டாது.

புள்ளியியல் துறைப் பணியாளர்கள் விவரங்களைச் சேகரிக்க வரும்போது நம்பகமான விவரங்களைக் குறித்த காலத்தில் கொடுக்குமாறு புள்ளியியல் ஆணையர், மேற்சொன்ன தொழிற்பிரிவுகளில் ஈடுபட்டுள்ளோரை வேண்டுகிறார்.

இந்த ஆய்வின் முழு வெற்றிக்கு, அனைவரின் ஒத்துழைப்பும் வேண்டப்படுகிறது.



# அயல் நாட்டுப் பணிக்கு ஆள் திரட்டும் நிறுவனம் ஆற்றிடும் அரிய பணிகள்

**ஏ. உமாமகேஸ்வரன்**
நிர்வாக மேலாளர்,
அயல் நாட்டு வேலை வாய்ப்புப் பணி நிறுவனம்,
சென்னை.

பூமிக்கடியில் சுரந்து வரும் கறுப்புத் தங்கம் எனப்படும் எண்ணெய் வளத்தால் பெரும் செல்வ வளம் பெற்ற மத்திய கிழக்கு நாடுகள், சமீப காலமாக தங்களது வளர்ச்சிப் பாதையில் மிகுந்த கவனம் செலுத்தி வருகின்றன. இதன் விளைவாக மருத்துவ விடுதிகள் கட்டுதல், ஐந்து நட்சத்திர ஓட்டல்களை உருவாக்குதல், நிலத்தை வேளாண்மைக்கேற்றவாறு பண்படுத்துதல் மற்றும் பல்வேறு கட்டுமானப் பணிகள் இந்நாடுகளில் ஏராளமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்தகைய முன்னேற்றப் பணிகளினால் அங்கெல்லாம் கணிசமான வேலை வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

இந்த வேலை வாய்ப்புக்களை மேற்கொள்ள உள்நாட்டிலேயே தேவைப்படும் அளவுக்கு மனித சக்தி இல்லாமையினால் இந்நாடுகள் மற்ற நாடுகளிலிருந்து பல்வேறு தொழில்களுக்கான தகுதி பெற்ற ஆட்களை எதிர்பார்க்கின்றன. எனவே, தகுதி வாய்ந்த நம் இளைஞர்களுக்கு இந்த நாடுகளில் வேலை வாய்ப்புக்கள் உள்ளன எனலாம். திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்ற மூதுரைக்கிணங்க ஏற்கெனவே நம் இளைஞர்கள் பலர், மத்திய கிழக்கு நாடுகளுக்குப் பணி புரிந்து பொருளீட்டச் சென்றுள்ளனர். மேலும் கணிசமான அளவில் நம்முடைய இளைஞர்களுக்கு அங்கு வாய்ப்புக்கள் உள்ளன எனத் தெரிகின்றது.

இந்த நிலையைப் பயன்படுத்திக் கொண்டு ஏராளமான தனியார் நிறுவனங்கள் புற்றீசல்கள் போல் நாட்டில் தோன்றியுள்ளன. இந்த நிறுவனங்கள் அயல் நாட்டு வேலைகளுக்கு இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பும் தொழிலில் ஈடுபட்டுச் செழித்து வளர்ந்துள்ளன. கடுமையான போட்டிகள் நிறைந்த துறை இது. எனவே, ஏற்கத்தகாத முறைகேடுகள் இத்துறையில் மலிந்துள்ளன. இதனால் அயல் நாடுகளில் பணிபுரிய விரும்பி முயற்சிகளை மேற்கொள்ளும் இளைஞர் பலர் பாதிக்கப்பட்டு ஏமாற்றமுற்றுள்ளனர்.

இத்தகைய நிலையைத் தவிர்த்து, இடைத் தரகர்கள் ஊழல் இன்றி இளைஞர்கள் பயன்பெற மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் விளைவாக தமிழக அரசினால் 'அயல் நாட்டுப் பணி வாய்ப்பு நிறுவனம்' (Overseas Manpower Corporation Ltd.) அண்மையில் தோற்றுவிக்கப்பட்டது.

இந்த நிறுவனத்தின் முக்கிய நோக்கங்கள்:—

* படித்த, பயிற்சி பெற்ற மற்றும் தொழில் நுணுக்கத் தேர்ச்சி பெற்ற இளைஞர்களுக்கு அயல் நாடுகளில் வேலை வாய்ப்பினைத் தேடித் தருவது.

* சுயமாகவோ அல்லது அரசின் சார்பிலோ கூட்டுத் தொழில் முயற்சிகளை அயல்நாடுகளில் மேற்கொள்ள முனைவதன் மூலம் வெளிநாடுகளில் நம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்தித் தர முயற்சிப்பது.

* அயல்நாடுகளில் பணிபுரியும் இந்திய மக்களிடமிருந்து தேவையான பொருளாதார வசதியினைத் திரட்டி நம் நாட்டில் தொழில்களை ஏற்படுத்துவது.

* கைவினைப் பொருட்கள், கைத்தறித் துணிகள் மற்றும் கலாச்சார அல்லது கலைச் சிறப்பு வாய்ந்த உலோகப் பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முனைதல்.

தன்னுடைய பணியின் முதல் படியாக இந்நிறுவனம் அயல்நாடுகளில் வேலை பெறத் தகுதி

# மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்

## விஜய் காம்ப்ளெக்ஸ் & யூரியா உரங்களை தயாரிப்பவர்கள்




ஆண்டு தோறும் 5,50,000 டன் விஜய் காம்ப்ளெக்ஸ் உரங்களையும் 1,25,000 டன் விஜய் யூரியாவையும் தயாரிக்கின்றோம். தரமான உரங்களை தயாரித்தளிப்பதோடல்லாமல் இந்திய விவசாயம் சிறக்க பல விவசாய மேம்பாட்டுத் திட்டங்களை செயல் படுத்திவருகின்றோம். அவற்றுள் சில:

- **நீண்டகால விவசாய மேம்பாட்டுத் திட்டம்:**
  இந்த 22 திட்டங்களினால் 1,90,000 ஹெக்டர் நிலத்தைக் கொண்ட 76,000 குடும்பங்கள் பலனடைந்து வருகின்றன.
- **கிராம ஏற்புத் திட்டம்:**
  விவசாய உற்பத்தியைப் பெருக்குவதை குறிக்கோளாகக் கொண்ட இத்திட்டத்தினால் 200-க்கும் மேற்பட்ட கிராமங்கள் பயன் பெற்றுள்ளன.
- **துரித மண் பரிசோதனைத் திட்டம்:**
  விவசாயிகள் மண் மாதிரிகள் அனுப்பிய 4 வாரங்களுக்குள் முடிவுகளும் சிபாரிசுகளும் அவர்களுக்கு அனுப்பி வைக்கப் படுகின்றன.
- **நவீன விவசாய நுணுக்கங்களை தெரிவிக்கும் திட்டம்:**
  நடமாடும் திரைப்பட ஊர்திகள், வானொலி, சினிமா, செய்தித் தாள்கள் மற்றும் சாகுபடி குறிப்புப் புத்தகங்கள் முதலிய பல்வேறு சாதனங்கள் மூலமாக விவசாயிகள் புரிந்து செயலாற்றும் வகையில் நவீன விவசாய நுணுக்கங்கள் தெரிவிக்கப் படுகின்றன.

மேலும், விவசாய கருத்தரங்குகள், விவசாயிகள் பயிற்சி திட்டங்கள் போன்றவற்றை செயல்படுத்தி விவசாயிகளுக்குத் தேவைப்படும் ஆலோசனைகளும் தரப்படுகின்றன.

**மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் — இந்திய விவசாய வளர்ச்சியில் முழுமையான ஈடுபாடு கொண்டுள்ள நிறுவனமாகும்.**

மேலும் விவரங்களுக்கு, மண்டல மேலாளர்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட், 10, வில்லியம்ஸ் ரோடு, திருச்சி 620 001

VIJAY
MADRAS FERTILIZERS

MFL 2111

வாய்ந்த இளைஞர்களைப் பற்றிய 'குறிப்பு வங்கி' ( Data Bank) ஒன்றினைத் தொகுத்தது. இந்நிறுவனம் தகுந்த தகுதி வாய்ந்த இளைஞர்களிடமிருந்து விண்ணப்பங்களை வரவேற்று, செய்தித் தாள்களில் விளம்பரம் ஒன்றினை வெளியிட்டது. இதன் பயனாக 6503 பேர் மனுச் செய்தார்கள். பூர்த்தி செய்து அனுப்ப அவர்களுக்குக் குறிப்பேடுகள் (Data Sheets) அனுப்பப்பட்டன. பூர்த்தி செய்த குறிப்பேடுகளை அனுப்பியவர்களில் 1627 பேர் குறிப்பு வங்கியில் சேர்த்துக் கொள்ளப் படத் தகுதி பெற்றிருந்தனர். அவர்கள் விவரம் வருமாறு:—

| | |
|---|---|
| பொறியாளர் | ... 310 |
| உழவு மற்றும் தோட்டக் கலைப் பணியாளர் | ... 9 |
| செவிலியர் | ... 29 |
| மற்ற மருத்துவத்துறை ஊழியர்கள் | ... 55 |
| ஆசிரியர் | ... 4 |
| கை வினைஞர் மற்றும் பயிற்சி பெற்ற தொழிலாளர் | ... 780 |
| மற்ற தொழில் நுட்பத் திறன் பெற்றவர் | ... 12 |
| பல்வேறு உணவு விடுதிப் பணியாளர் | ... 120 |
| கட்டுமானப் பணியாளர் | 115 |
| ஓட்டுநர் | ... 95 |
| அலுவலகப் பணியாளர் | 50 |
| தொழில் நுணுக்க உதவியாளர் | ... 35 |
| மற்றவர் | ... 13 |
| மொத்தம் | ...1627 |

அயல் நாட்டுப் பணி வாய்ப்பு நிறுவனத்தில் பதிவு செய்து கொள்ள ஆகும் செலவு அதிகம் இல்லை. ஏழு ரூபாய் மட்டுமே! இதைத் தவிர வேறு எந்தக் கட்டணத்தையும் விண்ணப்பதாரர்களிடம் இருந்து இந்த நிறுவனம் பெறுவதில்லை.

குறிப்பு வங்கியினைத்தொகுத்து வைப்பது மட்டுமல்ல; பல்வேறு செய்தித்தாள்களில் வரும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பற்றிய விவரங்களையும், விளம்பரங்களையும் தொகுத்து அதைப் பயனுள்ள வகையில் இந்நிறுவனம் பயன்படுத்துகின்றது. அயல் நாட்டு வேலை வாய்ப்பு விளம்பரங்களைப் பிரசுரித்த நிறுவனங்கள் அல்லது அவற்றின் அங்கீகாரம் பெற்ற உள் நாட்டு அமைப்புகளோடு இந்நிறுவனம் தொடர்புகொண்டு, தன்னுடைய குறிப்பு வங்கியில் உள்ள இளைஞர்களுக்குவேலைவாய்ப்பினைப் பெற்றுத் தர முயற்சிக்கின்றது.



அதோடு மட்டும் இந்நிறுவனம் திருப்தி அடைந்துவிடுவதில்லை. தொழில் நிமித்தமாகவோ அல்லது வேறு காரணமாகவோ சென்னைக்கு வரும் தொழிலதிபர்களைச் சந்தித்து அவர்கள் மூலம்வேலைவாய்ப்பினைப்,பெற இந்நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் தவறுவதில்லை. இத்தகைய முயற்சியினால் ஓட்டல் தொழில் சம்பந்தப்பட்ட 19 இளைஞர்கள் ஷார்ஜாவில் (U.A.E.) உள்ள 'நோவோடெல் ஷார்ஷா பீச்' என்ற ஐந்து நட்சத்திர ஓட்டலில் வேலை வாய்ப்பை சமீபத்தில் பெற முடிந்துள்ளது. முழு மூச்சுடன் பணியாற்றத் தொடங்கிய முதல் மூன்று மாதங்களிலேயே இத்தனைப் பேருக்கு வெளிநாட்டில் வேலை வாய்ப்பைப் பெற்றுத் தந்தது குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட 19பேர்களையும் வழியனுப்பும் நிகழ்ச்சி, தமிழகஅரசு தலைமைச் செயலாளர் திரு வி.கார்த்திகேயன், ஐ.ஏ.எஸ். அவர்கள் தலைமையில் சென்னையில் 10.9.79 அன்று சிறப்பாக நடைபெற்றது.

தம்முடைய தலைமை உரையில் திரு கார்த்திகேயன் அவர்கள், வெளிநாடு செல்லும் 19 இளைஞர்களுக்கும் நல்லுரை வழங்கினார். 'அவர்கள் கடுமையாக உழைக்க வேண்டும் என்றும், தங்களுக்கு நல்ல பெயரைத் தேடிக் கொள்ள வேண்டும் என்றும், அவர்களுக்கு வேலை பெற்றுத் தந்த அயல் நாட்டுப் பணி வாய்ப்பு நிறுவனத்திற்கு நீடித்த நல்ல புகழைத் தேடித் தரவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். அந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் சிறப்புரை ஆற்றினார்கள். தம்முடைய உரையில் அமைச்சர் அவர்கள், "வெளிநாட்டில் பணிபுரியச் செல்லும் நம் இளைஞர்கள் நன்கு உழைத்து நற்பெயர் பெறுவதுடன் அவர்கள் நமது நாட்டின் கலாச்சாரத் தூதுவர்களாகவும் திகழவேண்டும்' என்று குறிப்பிட்டார். இந்நிறுவனத்தின் மூலமாக வேலை வாய்ப்பினைப்பெற்றுபயனடைந்தவர்கள் தாங்கள் வேலை செய்யும் நாடுகளில் இருந்து மேலும் பல வேலைவாய்ப்பு விவரங்களை இந்நிறுவனத்திற்கு அறிவிப்பதன் மூலம் மற்ற இளைஞர்களுக்கும் உதவ வழி செய்யுமாறும் அவர் கேட்டுக் கொண்டார். துவக்கத்தில் வரவேற்புரை ஆற்றிய இந்நிறுவனத்தின் தலைவரும் மற்றும் தொழிலாளர் வேலை வாய்ப்புத்துறைச் செயலாளர் திரு சி. இராமச்சந்திரன், ஐ.ஏ.எஸ். அவர்கள் இந்நிறுவனத்தின் நடவடிக்கைகளை விவரித்தார்.

முதல் அணியில் அனுப்பப்பட்ட 19 இளைஞர்களும் 16.9.'79 அன்று 'ஷார்ஜா' வில் உள்ள நோவோடெல் ஓட்டலில் தங்களுடைய பணியை ஏற்றுக் கொண்டனர். அவர்களுக்கு பாஸ்போர்ட், விசா மற்றும் பயண ஏற்பாடுகள் அனைத்தையும் அயல் நாட்டுப் பணி வாய்ப்பு நிறுவனமே செய்தது.

ஓட்டல் தொழில் சம்பந்தப்பட்ட பணியாளர் அடங்கிய இன்னொரு அணியினையும் விரைவில் வெளிநாடு அனுப்பக் கூடிய சூழ்நிலை விரைந்து உருவாகி வருகின்றது. எதிர்காலத்தில் இதன் பணிகள் மேலும் சிறக்கும்; அதனால் வெளிநாடுகளில் வேலை தேடும் நம்முடைய இளைஞர் பலர் மேலும் பயனடைவர் என்று தாராளமாகக் கூறலாம்.

அயல் நாட்டுப் பணி வாய்ப்பு நிறுவனத்தின் கவனம் வேலை வாய்ப்பைப் பெறுவதில் மட்டுமே செலுத்தப்படவில்லை. விதைகள், காய்கறிகள், செடிகள், பழவகைகள் போன்றவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வாய்ப்புக்களையும் இந்நிறுவனம் ஆராய்ந்து வருகின்றது. மத்திய கிழக்கு நாடுகளின் சீதோஷ்ண நிலையில் வளரக் கூடிய செடிகளை ஏற்றுமதி செய்யக்கூடிய வாய்ப்புக்களும் ஆராயப்பட்டு வருகின்றது.

# தரமான பொருட்களைத் தயாரித்தளிக்கும் பணியில் தனிப்புகழ் பெற்ற நிறுவனம்

# டான்சி



மக்கள் நலனையே மனதில் கொண்டு அக்கறையுடன் செயலாற்றும் நிறுவனம் டான்சி!

டான்சி தொழிற்கூடங்களில் தயராகும் ஒவ்வொரு பொருளும் தீவிர தரக்கட்டுப் பாடுகளுக்கு உட்பட்டவை. டான்சி என்றாலே தரமான பொருட்கள். ஆம்! வாடிக்கையாளர்கள் இதனை நன்கு அறிவர்.

உங்கள் இல்லத்துக்கும் அலுவலகத் துக்கும் ஏற்ற பொருட்கள் மட்டுமல்ல— தொழிற்துறைக்கும் டான்சி தயாரித் தளிக்கும் பல்வேறு பொருட்களின் பட்டியல் இதோ!

கட்டுமானங்கள் மற்றும் கோபுரங்கள், இயந்திரக் கருவிகள், எஃகு மற்றும் மர மேசை நாற்காலிகள், இணைப்பு வண்டிகள், விவசாய உபகரணங்கள், செம்புக் கம்பிகள், உறுப்புகள் (Forged, Pressed, and Diecast) பாதுகாப்பு காலணிகள் மற்றும் கை உறைகள், பிரஞ்ச் பாலிஷ் மற்றும் அதைச் சார்ந்த பொருட்கள்.

எடுத்துச் சொல்ல இத்தனைதான்... ஆனால் இன்னும் எத்துணை பொருட்கள்?

*தரத்துக்கோர் சின்னம் டான்சி!*


## டான்சி

## தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்

(தமிழ்நாடு அரசின் ஒரு நிறுவனம்)

1, ஒயிட்ஸ் சாலை, சென்னை-600 014

தொலைபேசி: 82161 தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI



# கூட்டுறவும் கைத்தறித் தொழிலும்

வி. சங்கரசுப்பையயன், ஐ.ஏ.எஸ்.
இயக்குநர், கைத்தறித்துறை

தமிழ்நாட்டில் தொழில்களில் கைத்தறித் தொழில் ஒரு முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கிறது. இந்தியாவில் உள்ள 35.63 இலட்சம் மொத்தக் கைத்தறிகளில் 5.56 இலட்சம் கைத்தறிகள் தமிழ்நாட்டில் இயங்கி வருகின்றன. பின் தங்கிய நிலையில் உள்ள கைத்தறித் தொழிலை முன்னேற்றி வைக்கும் எண்ணத்துடனும், கைத்தறித் தொழிலை நல்ல முறையில் சீரமைக்கும் நோக்கத்துடனும் சில தீவிர முன்னேற்றத் திட்டங்களைத் தமிழக அரசு செயல்படுத்தி வருகின்றது.

கைத்தறி வளர்ச்சித் திட்டங்கள் நெசவாளர்களுக்குப் பயன்பட வேண்டுமெனில் அவர்களைக் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டு வருவதே சாலச் சிறந்தது என்பதை அரசு உணர்ந்து தமிழகத்திலுள்ள 60 சதவிகித நெசவாளர்களைக் கூட்டுறவுச் சங்கங்களின் கீழ் கொண்டு வர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

## பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

மேற்படி திட்டத்தின் கீழ் கடந்த இரண்டு ஆண்டுகளில் 44,720 நெசவாளர்கள் தனியார் துறையிலிருந்து கூட்டுறவுத் துறையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர். மேலும், இவ்விரண்டு ஆண்டுகளில் 118 புதிய நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தமிழ் நாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளன. சொந்தத் தறிகள் இல்லாத கூலி நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க 19 தொழிலியல் நெசவாளர் சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன. தற்பொழுது தமிழ் நாட்டில் 2.20 இலட்சம் தறிகளைக் கொண்ட 996 பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மேலும் தனியார் துறை நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் கீழ் கொண்டு வரப்படுவர்.

கூட்டுறவுத் துறையின் உற்பத்தி 1976-77-ல் ரூ. 38 கோடியாக இருந்தது 1978-79-ல் ரூ. 45 கோடியளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது. இதற்கேற்ப, விற்பனை 1976-77-ல் ரூ. 42 கோடியாக இருந்தது. 1978-79-ல் ரூ. 54 கோடியாக அதிகரித்துள்ளது. கடந்த 2 ஆண்டுகளில் மாநில அரசு கைத்தறி வளர்ச்சித் திட்டங்களின் கீழ் ரூ. 2471 இலட்சம் அளவிற்கு நிதியுதவி கடன் மற்றும் மானியமாக அளித்துள்ளது. 1976-77-ல் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரிசர்வ் வங்கியின் மூலம் ரூ. 9.27 கோடி அளவுக்கு மூலதனக் கடன் வழங்கப்பட்டது. 1978-79-ல் இது ரூ. 16.97 கோடி அளவிற்கு உயர்த்தி அளிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு மாநில நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் (கோ-ஆப் டெக்ஸ்):—

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்தியில் 50 சதவிகிதம் வரை தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் (கோ-ஆப்டெக்ஸ்) கொள்முதல் செய்து விற்பனை செய்து வருகின்றது. 1976-77-ல் கோ-ஆப்டெக்ஸின் விற்பனை ரூ. 19.24 கோடியாக இருந்தது. இது படிப்படியாக உயர்ந்து 1978-79-ல் கோ-ஆப்டெக்ஸின் விற்பனை ரூ. 34 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

விற்பனையைப் பெருக்க கோ-ஆப்டெக்ஸ் புது விற்பனை நிலையங்களைத் திறப்பதுடன் ஏற்கெனவே இயங்கிவரும் விற்பனை நிலையங்களை நவீனப்படுத்தியும் வருகிறது. தமிழ்நாட்டிலும் இதர மாநிலங்களிலும் சுமார் 400 விற்பனை நிலையங்களை நடத்தி வருகிறது. 1977-78 மற்றும் 1978-79-ல் மாநில சங்கத்திற்கு அரசு ரூபாய் 411.53 இலட்சம் அளவிற்கு நிதியுதவி அளித்து, ரிசர்வ் வங்கியின் நடைமுறை மூலதனக் கடன் உதவி 2 ஆண்டுகளுக்கு முன்பு ரூ. 650 இலட்சமாக இருந்ததை 1978-79-ல் ரூ. 1200 இலட்சமாக உயர்த்தி அளிக்கப்பட்டுள்ளது.

## கூட்டுறவு நூற்பாலைகள்

கூட்டுறவுச் சங்கங்களின் கீழ் இயங்கி வரும் நெசவாளர்களின்

மூலப் பொருளான நூல் தேவையைப் பூர்த்தி செய்யும்பொருட்டு தமிழக அரசு 12 கூட்டுறவு நூற்பாலைகளை நிறுவி இயக்கி வருகிறது. இந் நூற்பாலைகளின் மொத்த நிறுவை 2.30 இலட்சம் கதிர்களிலிருந்து, 1978-79-ல் 3.05 இலட்சம் கதிர்களாக அதிகப்படுத்தியுள்ளது. தவிர இரண்டாண்டுகளுக்கு முன்பு மாதந்தோறும் 4,500 பேல் நூல் உற்பத்தி செய்ததைத் தற்பொழுது 8500 பேல் அளவுக்குப் பெருக்கியுள்ளது. 1976-ல் நட்டத்தில் இயங்கிக் கொண்டிருந்த நூற்பாலைகள் 1978-79-ல் ரூ. 2.01 கோடி அளவிற்கு நிகர இலாபத்தை ஈட்டியுள்ளன.

### தமிழ்நாடு கூட்டுறவு நூல் பதனிடும் ஆலை, ஈரோடு

இவ்வாலை நூல் மற்றும் கைத்தறித் துணி பதனிடும் வேலைகளில் படிப்படியாக நெசவாளர் கூட்டுறவுசங்கங்களின் தேவையை முழு அளவிற்குப் பூர்த்தி செய்ய ரூ. 22.50 இலட்ச செலவில் அபிவிருத்தித் திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தி வருகின்றது. 1976-ல் இவ்வாலையின் திறன் 10.81 இலட்சம் மீட்டர்களாக இருந்தது. இதை 1978-79-ல் 28.27 இலட்சம் மீட்டர்களாக உயர்த்தப்பட்டுள்ளது.

கடந்த 2 ஆண்டுகளில் இந் நிறுவனம் ஒரு துணி அச்சிடும் பிரிவை அமைத்துள்ளது. சாயச்சாலையை நவீன முறையில் விரிவு படுத்தியுள்ளது. மேலும் சேலம், திருநெல்வேலி, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி ஆகிய இடங்களில் நவீன சாயச்சாலைகள், ரூ. 60 இலட்சம் செலவில் நிறுவும் வேலையை மேற்கொண்டுள்ளது. இந்த 5 சாயச்சாலைகள் தவிர வேலூரில் மற்றொரு நவீன சாயச்சாலையும் நிறுவத் தக்க நடவடிக்கைகளை ஈரோடு பதனிடும் ஆலை மேற்கொண்டுள்ளது. பாலிஸ்டர் போன்ற பருத்தியில்லா ரகங்களைப் பதனிட ஒரு பிரிவையும் ரூ. 31 இலட்சம் செலவில் அமைக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

### தமிழ்நாடு கைத்தறி நிதி மற்றும் வர்த்தகக் கழகம்

இந்நிறுவனம், கடந்த 2 ஆண்டுகளில் ரூ. 2.13 கோடியை கடனாக நெசவாளர்களுக்கு வழங்கியது. 1976-ல் ரூ. 48.87 இலட்சம் ஆக இருந்த விற்பனை 1978-ல் ரூ. 193.07 இலட்சமாக அதிகரித்துள்ளது.

### கைத்தறி தீவிர வளர்ச்சி ஏற்றுமதி திட்டங்கள்

தமிழ்நாட்டில் 4 கைத்தறி தீவிர வளர்ச்சித் திட்டங்களும் 2 ஏற்றுமதித் திட்டங்களும் காஞ்சிபுரம், ஈரோடு, மதுரை, சேலம், கரூர் மற்றும் குறிஞ்சிப்பாடி ஆகிய இடங்களில் துவக்கப்பட்டுள்ளன. இத்திட்டங்களில் மொத்தம் 22,000 தறிகளைச் சேர்க்க இருப்பதில் 31-8-1979 முடிய 9950 தறிகள் சேர்க்கப்பட்டுள்ளன. இத்திட்டங்களின் மொத்த திட்ட முதலீடு ரூபாய் 464.20 இலட்சம் ஆகும். இத் திட்டங்களினால் கைத்தறித் துணியின் உற்பத்தி ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1.75 கோடி அளவிற்கு அதிகரித்துள்ளது. இவ்விரண்டு ஆண்டுகளில் மட்டும் இத்திட்டங்களுக்கு அரசு ரூ. 270.25 இலட்சம் நிதியுதவி அளித்துள்ளது.

### தமிழ்நாடு நெசவாளர் தொழிலியல் கூட்டுறவுச் சங்கங்கள்

தறியில்லாத நெசவாளர்கள் அதிகமுள்ள இடங்களில் தொழிலியல் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. தற்போது 4,700 கைத்தறிகளைக் கொண்ட 49 தொழிலியல் நெசவாளர் சங்கங்கள் இம்மாநிலத்தில் உள்ளன. கடந்த இரண்டு ஆண்டுகளில் மொத்தம் 1,900 தறிகளைக் கொண்ட 19 தொழிலியல் நெசவாளர் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### கோராப்பட்டு வழங்கும் திட்டம்

நல்ல தரமான கோரா மற்றும் ஜரிகை குறைந்த விலையில் காஞ்சிபுரம் மற்றும் ஆரணியில் உள்ள பட்டுக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வாங்கி விநியோகிக்க 'கோ-ஆப்டெக்ஸ்' தனி அதிகாரியைத் தலைவராகக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டு இத் திட்டம் 15-8-1978 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இந்த ஏற்பாட்டின் காரணமாக காஞ்சிபுரம் மற்றும் ஆரணியிலுள்ள பட்டுக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மிக இலாபகரமான முறையில் தரமான மூலப் பொருட்களைக் கொள்முதல் செய்ய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

### வடிவமைப்பு நிலையங்கள்

கைத்தறி நெசவாளர்களுக்குப் புதுப்புது வடிவங்கள் உருவாக்கவும், ஆலோசனை வழங்கவும், மதுரை, கோவை, சேலம் ஆகிய இடங்களில் 3 வடிவமைப்பு நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதுபோன்ற மேலும் 3 வடிவமைப்பு நிலையங்கள் மாநிலத்தின் இதர பகுதிகளில் ஏற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### ஜனதா துணிகள்

குறைந்த விலையில் மக்களுக்குக் கைத்தறித் துணிகள் வழங்க மொத்தம் 10,000 தறிகள் ஜனதா ரக உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. 1977-78 மற்றும் 1978-79-ல் மொத்தம் 2.40 கோடி மீட்டர் ஜனதாத் துணிகள் இத்தறிகளின் மூலம் உற்பத்தி செய்து 'கோ-ஆப்டெக்ஸ்' மூலமாக வழங்கப்பட்டுள்ளது.

### சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் 66,382 நெசவாளர்கள் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர். இத்திட்டத்தின் ஈட்டுறுதித் தொகையை ரூ. 500லிருந்து ரூ. 3,000 ஆக உயர்த்துவது தற்பொழுது அரசின் பரிசீலனையில் உள்ளது.

### கைத்தறி நெசவாளர்களுக்குச் சட்டப் பாதுகாப்பு

மாநில அரசால் ஏற்படுத்தப்பட்ட ஒரு குழு நெசவாளர்களின் வேலை செய்யும் முறை, வேலைக்குப் பாதுகாப்பு, சட்டப் பாதுகாப்பு முதலியவற்றை ஆராய்ந்து அதன் அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது. இக்குழுவின் பரிந்துரையின் பேரில் ஒருசட்டம் தமிழக அரசால் சட்டப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்டு அது ஒரு சட்டசபைக் கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனையில் உள்ளது.

நெசவாளர்களைக் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டுவரல், தடையில்லாத நிதியுதவி, உறுதியான மூலப்பொருள் விநியோகம் துணிகளின் உற்பத்தியில் மாற்றம் செய்தல், பாலியஸ்டர் வகை துணிகள் அறிமுகம், ஜனதா ரகத் துணித்தேவை முழுதும் உற்பத்தி செய்தல், அரசுத் துறைகளுக்குத் தேவையான துணிகளை வாங்குதல், உள்நாட்டு வெளிநாட்டு விற்பனைகளை அதிகப்படுத்துதல் போன்றவைகளின் மூலம் கைத்தறி பிரிவின் துணி உற்பத்தியை அதிகரிப்பதோடு கைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பையும் வருமானத்தையும்கிடைக்கச் செய்யலாம்.

# கிராமவளமே பால்வளக் கூட்டுறவின் இலட்சியம்

எம். ரகுபதி ஐ.ஏ.எஸ்.,
ஆணையர், பால்வளத்துறை.

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும், வாழ்வுக்கும் கிராமங்கள் தாம் உயிர்நாடியாக விளங்குகின்றன. கிராமத்தில் வாழும் ஏழை எளியவர்கள் ஏற்றம் பெற வேண்டும். அவர்களது இன்னல்கள் மாறிப் புன்னகை முகத்துடன் திகழ வேண்டும் என்பது அண்ணல் காந்தியடிகளும், அறிஞர் அண்ணாவும் கண்ட கனவாகும்.

கிராமத்தில் உள்ள சிறிய, மிகச் சிறிய விவசாயிகள், நில மற்றவர்கள் தங்கள் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். தொடர்ந்து வேலை வாய்ப்பினைப் பெற்று நிரந்தர வருமானம் பெற வேண்டும். வறுமையின் எல்லைக் கோட்டின் கீழ் வாடி வதங்கும் இலட்சக் கணக்கான குடும்பங்களின் வாழ்விலே ஒளியேற்ற வேண்டும். நாட்டுப் புறத்திலும், நகர்ப்புறத்திலும் வாழும் மக்களுக்குச் சிறந்த சத்துணவான பாலைச் சீராக விநியோகம் செய்ய வேண்டும். இந்த உயர்ந்த கோட்பாடுகளின் அடிப்படையில் பால் வளக் கூட்டுறவு நிறுவனங்கள் செயல்படுகின்றன.

ஒருங்கிணைந்த கிராமப்புற மேம்பாட்டில் நாம் அதிக கவனம் செலுத்தி வருகிறோம். கிராமப் புறத்தின் பொருளாதாரம் வளருமானால் பல துறைகளிலும் மேம்பாடு காண முடியும். அதை வெற்றிபெறச் செய்து முடிக்க வேண்டுமானால், கிராமங்களில் வேலை வாய்ப்பைப் பெருக்கியாக வேண்டும். வேலை வாய்ப்பு என்று குறிப்பிடும்போது, பெரிய தொழிற்சாலைகளையோ, நிலத்தின் அடியில் உறங்கிக் கிடக்கும் கனிவளத்தையோ நம்பிக்கொண்டிருக்க வேண்டியதில்லை. அதனால் பல கோடிக்கணக்கான தொகை முதலீடு செய்து சில ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்புத் தர முடியும். ஆனால், கிராமங்களிலேயே, இயற்கையின் உதவியுடன் சில ஆயிரம் ரூபாய் முதலீடு செய்தால், சுதந்திரமாக, நிரந்தரமாகப் பல ஆயிரம் பேர் வேலை வாய்ப்புப் பெற முடியும். அதற்கு உறுதுணையாக இருப்பவைதான் பால்வளக் கூட்டுறவு நிறுவனங்கள்.



தமிழகத்தில் பால்வளக் கூட்டுறவுச் சங்கங்கள் கடந்த அரை நூற்றாண்டுகளாக அரும்பணியாற்றி வந்துள்ளன. அவற்றின் பணிகளை மேம்படுத்தும் வகையில் அண்மைக் காலத்தில் சில முன்னேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பாலை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளருக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டும். அது எல்லாக் காலங்களிலும் சீராகக் கிடைக்க வேண்டும். நுகர்வோருக்கும் தரமான பாலை, முறையாக வழங்க வேண்டும். உற்பத்தியாளர்களுக்கு, கால்நடை மருத்துவ வசதி, மற்றும் சத்துள்ள தீவனம் வழங்கி தரமான பால் உற்பத்திக்கு உதவ வேண்டும் என்ற அடிப்படை நோக்குடன் பால்வளக் கூட்டுறவு நிறுவனங்கள் மூன்றடுக்கு முறையில் உற்பத்தியாளர்களின் நலனை மையமாகக் கொண்டு சீரமைக்கப்பட்டு வருகின்றன.

முதலாவது—பால் பெருக்குத் திட்டம் என்றழைக்கப்படும் இத்திட்டம் 1972-ஆம் ஆண்டு முதல் தமிழகத்தில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கு உறுதுணையாக உள்ளவை இந்தியப் பால்வள நிறுவனம் மற்றும் தேசியப் பால் வள வாரியம். அதனால் பால் உற்பத்தி பெருகியதோடன்றி, சீரான விநியோகத்திற்கும் ஏற்பாடு செய்ய முடிந்தது. பால் பெருக்குத் திட்டத்தின் முதல் கட்டத்தைச் சிறப்பாக முடித்துவிட்டு, இரண்டாவது கட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தும் முயற்சியில் தமிழக அரசு ஈடுபட்டுள்ளது.

இந்த அடிப்படையில்தான் 1978 ஜூன் திங்கள் இரண்டாம்நாளில் ஓர் ஆணை பிறப்பிக்கப்பட்டது. (அரசு ஆணை எண் 1000). இந்த ஆணை தமிழகப் பால் பெருக்குத் திட்டத்தின் வரலாற்றில் புதிய எழுச்சியையும் திருப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளது என்று கூற

முடியும். பால் உற்பத்தியாளர்களின் நலனை அடிப்படையாகக் கொண்டு கிராம மட்டத்தில் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள்-மாவட்ட அளவில் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள்-மாநில அளவில் கூட்டுறவு உற்பத்தியாளர் இணையம் என்ற மூன்றடுக்கு முறையில் தான் இனிவரும் சங்கங்கள் அமையும். கூட்டுறவு இயக்கம் மக்கள் இயக்கம் என்ற தத்துவத்தைச் செயல் வடிவில் கொண்டு வருவதற்கு இந்தத் திட்டம் பயன்படுகிறது.

புதிய பாணியில் அமைக்கின்ற சங்கங்களில்—

(1) பால் உற்பத்தியாளர்கள் மட்டுமே உறுப்பினர்கள் ஆகிறார்கள்.

(2) தரத்தின் அடிப்படையில் பாலின் விலை நிர்ணயிக்கப்படுகிறது.

(3) பால் மாடுகளைப் பராமரிக்கக் குறித்த காலத்தில் மருத்துவ வசதி உண்டு.

(4) தரமான கன்றுகளைப் பெற செயற்கைக் கருவூட்டு முறை பயன்படுத்தப்படுகிறது.

சுருக்கமாகச் சொன்னால் தரமான பாலை உற்பத்தி செய்து நியாயமான விலையைப் பெற, சிறந்த பராமரிப்பு வசதிகளை அடைய இந்தக் கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் வாய்ப்பு ஏற்படுகிறது.

உண்மையான உற்பத்தியாளர்கள் உறுப்பினர்களாக இல்லாத காரணத்தால் பல சங்கங்கள் செயலிழந்து விட்டன. ஆனால், ஆர்வமுள்ள உண்மையான உற்பத்தியாளர்கள் ஒன்று கூடி கூட்டுறவு முறையில் இயங்கும்போது வெற்றிக்கனிகள் நிச்சயம்.

பால் உற்பத்தியைப் பொறுத்த வரை, பால் அருந்துவோரின் தேவை சீராக இருப்பதும், உற்பத்தி மட்டும் பருவத்துக்குத் தகுந்தவாறு மாற்றம் பெறுவதாக உள்ள ஒரு விந்தையான பிரச்சினை உள்ளது. இதைத் தனிப்பட்ட பால் வியாபாரிகள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, பால் உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலை கொடுக்காமல் கொள்ளையடிக்க நேர்ந்தது. அந்த ஆபத்திலிருந்து, பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், உற்பத்தியாளர்களைக் காத்து உதவி வருகின்றன.

உபரிக் காலத்தில் கிடைக்கும் பாலைப் பக்குவப்படுத்தி, பால் பவுடர் போன்ற துணைப் பொருட்கள் தயாரிக்கும் திட்டமும் செயல்பட்டு வருகிறது. இத்தகைய திட்டம் மதுரையில் நடைமுறையில் இருந்து வருகிறது. (ஈரோடு, சேலம் ஆகிய இடங்களில் பால் பவுடர் தயாரிக்கும் தொழிலகம் துவக்கப்படவிருக்கின்றன.) இதனால் உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலையை எக்காலத்திலும் வழங்க முடிகிறது.

பால் உற்பத்தியாளர் கூட்டுறவுகள் அமைத்துச் செயல்படுவதில் தமிழகம் சிறந்த இடத்தைப் பிடித்துள்ளது. பல்லாண்டுகட்கு முன்பே குஜராத் மாநிலத்தில் துவங்கிய இந்த இயக்கம் சில ஆண்டுகளில் தமிழகத்தில் விரைவில் பரவி, இந்தியாவில் இரண்டாம் நிலையை எய்தியுள்ளது. 1973-74-ல் இங்கு 26 உற்பத்தியாளர் சங்கங்கள் இருந்தன. இன்று இவற்றின் எண்ணிக்கை 1800-க்குமேல் உள்ளன.

பால் உற்பத்தியாளருக்குப் பால் பணமாக வழங்கப்பட்ட தொகை 1972-73-ம் ஆண்டில் ரூ. 130.60 இலட்சம். 1978-79ல் அதாவது 6 ஆண்டுகளில் ரூபாய் 1350 இலட்சமாக, 10 மடங்காக உயர்ந்துள்ளது. 1972-73-ல் 4240 விவசாயிகள் பலனடைந்தனர் பால் கூட்டுறவால்! 1978-79-ல் 2,73,000-க்கும் அதிகமான உற்பத்தியாளர்க்கு இவை உறுதுணையாக நின்று வாழ்வளிக்கின்றன.

தமிழகத்தில் கிராம வளம் பெருக—வேலை வாய்ப்பும், வருமானமும் உயர்ந்திட, நிரந்தரமாகிட—பால்வளக் கூட்டுறவுகள் பணிபுரிகின்றன.

இன்னும் 5 ஆண்டுகளில் சுமார் 5,000 கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் தமிழகத்தில் அமைக்கப்பட வேண்டும். அதன் மூலம் 12 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்பட வேண்டும்-என்ற உறுதியான கொள்கை அடிப்படையில் தமிழக அரசு முனைந்து செயல்பட்டு வருகிறது. இதன் மூலம், கிராமத்தில் வாழும் நலிவுற்ற பிரிவினரின் வாழ்வு மேம்பாட்டையும்-விசையொடிந்த அவர்களின் தேகத்தில் புதிய வேகம் புறப்படும்—அறிஞர் அண்ணா கண்ட 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்ற ஆசைக் கனவு நிச்சயம் நிறைவேறும்; ஏனெனில் கூட்டுறவு முயற்சியில் முடியாதது ஒன்றுமே இல்லை!

## பால்வளம்



1974-75-ல் தமிழ்நாட்டில் 2525 பால் வளக் கூட்டுறவுச் சங்கங்கள் (22 ஒன்றியங்கள் உட்பட) இருந்தன. இது 1976-77-ல் 3163 ஆக அதிகரித்தது. இச்சங்கங்கள் 1974-75-ல் செய்திருந்த பால் கொள்முதலைவிட (ரூபாய் 1197.43 இலட்சம்), 1976-77-ல் செய்திருந்த கொள்முதலளவு 40 சதவிகிதம் அதிகமாகும் (ரூ. 1680.55 இலட்சம்). விற்பனையும் 1974-75-ல் ரூ. 1497.21 இலட்சமாக இருந்தது. 1976-77-ல் ரூ. 2073.07 இலட்சமாக இருந்தது (38 சதவிகிதம் கூடுதல்). 1976-77-ல் இருந்து வந்த 3163 சங்கங்களில் 1510 சங்கங்கள் ரூ. 493.54 இலட்சம் இலாபமாகப் பெற்றன.

## ஆடு வளர்ப்பு



1975-76-ல் 62 ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன. இவற்றின் எண்ணிக்கை 1976-77-ல் 89 ஆக உயர்ந்தது. 1975-76-ல் இருந்த 62 சங்கங்களில் 46 சங்கங்கள் ரூ.1.80 இலட்சம் இலாபம் பெற்றன. 12 சங்கங்கள் ரூ. 0.17 இலட்சம் நஷ்டமடைந்தன. 89 சங்கங்களில் 42 சங்கங்கள் ரூ. 1.73 இலட்சம் இலாபம் அடைந்தன.

# மீனவர் நலன் காக்கும் மீனவர் கூட்டுறவுச்சங்கங்கள்

**சி. செல்லப்பன், ஐ.ஏ.எஸ்.,**
**மீனளத்துறை இயக்குநர்.**

**த**மிழகத்தில் கிராமக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் மாதிரியில் உள்நாட்டு மீனவர் சங்கங்களும், கடல் மீனவர் சங்கங்களும் நிறுவப்பட்டுள்ளன.

மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் தற்போது 513 உள்ளன.

| | | |
|---|---|---|
| 1. பிரதம மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் ... | 478 | (உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கம் 200<br>கடல் மீனவர் கூட்டுறவுச் சங்கம் 278) |
| 2. கூட்டுறவு விற்பனை ஒன்றியங்கள் ... | 10 | |
| 3. மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சம்மேளனங்கள் ... | 9 | |
| 4. ஐந்து இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழும் வேலைவாய்ப்பு அதிகரிப்புத் திட்டத்தின் கீழும் நடத்தப்படும் சங்கங்கள் ... | 16 | |
| மொத்தம் ... | 513 | |

சமீப காலம் வரை மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் இந்திய சேம வங்கி *(Reserve Bank of India)* போன்ற நிதி நிறுவனங்களிடமிருந்து கடனேதும் பெறாமல், தமிழ்நாட்டு அரசின் கடனுதவியை மட்டுமே பெற்று வந்தன. மீனவர் கூட்டுறவுச் சங்கங்களையும், விவசாய நாணய கூட்டுறவுச் சங்கத்திற்கு இணையாகக் கருதி, இந்திய சேம வங்கிச் சட்டம் திருத்தப்பட்டவுடன் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன் அளிக்கும் சக்திகள் விரிவாக்கப்பட்டு விட்டது. இந்திய சேம வங்கி, தேசிய கூட்டுறவு அபிவிருத்திக் கழகம் *(National Co-operative Development Corporation)* மற்றும் அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பெருமளவு உதவி புரிய முன்வந்துள்ளன. தற்போதுள்ள சாதகமான நிலையில் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களைச் சீரமைக்கவும், மீனவர்களுக்கு அதிகமான அளவில் உதவி புரிந்து பயனுள்ளதாக ஆக்கவும் மீனவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்து மகிழ்ச்சியோடு விளங்க வைக்கவும் பயன்தரத்தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்திய சேம வங்கி, தமிழ்நாடு அரசு, தேசிய கூட்டுறவு அபிவிருத்திக் கழகம் ஆகியவற்றின் ஒத்துழைப்போடு உற்பத்தி மற்றும் விற்பனை அபிவிருத்திக்காக மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ. 75 இலட்சம் வரை கடன் வழங்கும் பயனுள்ள திட்டம் ஒன்று தமிழக மீன்துறையின் தீவிர பரிசீலனையிலுள்ளது. இத்திட்டத்தினால் கிட்டத்தட்ட 1 கோடி ரூபாய் மதிப்புள்ள மீன் உற்பத்தி மற்றும் விற்பனை உயரும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு முன்னோடியாக 78-79ஆம் ஆண்டில், தமிழக அரசு, உற்பத்தி மற்றும் விற்பனை மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பங்குத் தொகையாகவும் அலுவலர்களுக்காகவும் ரூ. 3 இலட்சம் அனுமதி அளித்துள்ளது.

**கடன்கள்**

மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தமிழக அரசால் ஐந்து வகைக்கடன்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. அவையாவன:-

1. நீண்டகாலக் கடன், 2. மத்திய காலக்கடன், 3. குறுகிய காலக் கடன், 4. நடைமுறை மூலதனக் கடன், 5. கிடங்கு கடன்.

எல்லா மீனவர் கூட்டுறவுச் சங்கங்களும் நியாய விலைக் கடைகளை நடத்த தங்கள் துணை விதிகளின் மூலம் அனுமதி பெற்றுள்ளன. தற்போது தமிழ்நாடு மீன்வள அபிவிருத்திக் கழகத்தால் அளிக்கப்படுகின்ற படகுகளுக்கு, மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் என்றால் முன்னுரிமை அளிக்கப்படுகின்றது.

மீனவர்களுக்கு வழங்கப்படும் கடன் பணமாகவும் பொருளாகவும் தரப்படுகின்றது. முன்கடனைத் தீர்ப்பதற்குப் பணமாகவும், மற்ற கட்டங்களில் மீன்பிடிச் சாதனங்களாகவும், நைலான் நூலாகவும் வழங்கப்படுகின்றன.

உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள், உறுப்பினர்களுக்கு அரிய சேவை செய்து வருகின்றன. உள்நாட்டு நீர்நிலைகளைக் குத்தகை எடுத்து அதனை தனது உறுப்பினர்களுக்கு மறு குத்தகை கொடுத்து உறுப்பினர்கள் பயன் பெறத்தக்க வகையிலே வேலை



வாய்ப்பினையும் ஊதியத்தையும் பெற அவை வழிவகை செய்கின்றன.

தேசியக் கூட்டுறவு அபிவிருத்திக் கழகம் மிக அதிக அளவிலே மீனவர் கூட்டுறவு அமைப்புகளுக்கு உதவிபுரிய முன் வந்துள்ளன.




**பங்கு மூலதனக் கடன்**

மீனவர் கூட்டுறவுச் சங்கம் 5 பங்கு மூலதனம் அங்கத்தினர்களிடமிருந்து வசூல் செய்யும் நிபந்தனையில் 100 சதவிகிதம் பங்கு மூலதனக் கடனைத் தருகின்றது. இதை 14 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்த வேண்டும்.

**வாகன வசதிக் கடன்**

மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 50 சதவிகிதம் கடன்,50 சதவிகிதம் மான்யம்(இதை 10 வருடங்களில் திருப்பிச்செலுத்த வேண்டும்.)

| | |
|---|---|
| மீன்பிடி குளங்கள் பண்ணைகள் அமைக்க மற்றும் அபிவிருத்தி செய்ய | 100 சதவிகிதம் கடன் உபயோகத்தின் அடிப்படையில் படிப்படியாகத் தரப்படும்.(10 வருடங்களில் திருப்பிச் செலுத்த வேண்டும். |
| மீன்விதைப் பண்ணை அமைக்க மற்றும் மீன் வளத்தை அதிகரிக்க | 100 சதவிகிதம் கடன், உபயோகத்தின் அடிப்படையில் படிப்படியாகத் தரப்படும். (10 வருடங்களில் திருப்பிச் செலுத்த வேண்டும்.) |
| மீன்விதைப் பண்ணை அமைக்க மற்றும் மீன்வளத்தை அதிகரிக்க | 100 சதவிகிதம் கடன், உபயோகத்தின் அடிப்படையில் படிப்படியாகத் தரப்படும். ( 14 வருடங்களில் இதைத் திருப்பிச் செலுத்த வேண்டும்.) |
| மீனைப் பதப்படுத்த ஐஸ் நிலையங்கள் அமைக்க...... | |
| குளிர்பதன நிலையம் அமைக்க | 55 சதவிகித கடன் 25 சதவிகிதம் பங்கு மூலதனம். |
| மீன்பிடி சாதனங்கள், கலங்கள் சாதாரண மற்றும் விசைப் படகுகள் வாங்க | 20 சதவிகிதம் மானியம் உபயோகத்தின் அடிப்படையில் படிப்படியாகத் தரப்படும். 14 வருடங்களில் திருப்பிச் செலுத்த வேண்டும். சங்கம் 5 சதவிகிதம் பங்குத்தொகை வசூல் செய்யவேண்டும். |
| கிடங்கு கட்ட<br>சில்லரைக் கடைகள் திறக்க | 50 சதவிகிதம் மான்யம்<br>50 சதவிகிதம் கடன் |
| ஐஸ் பெட்டி வாங்க | உபயோகத்தின் அடிப்படையில் படிப்படியாகத் தரப்படும். |



இவை தவிர மாநில சம்மேளனங்களுக்கும், தனிப்பட்ட சிறப்புத் திட்டங்களுக்கும், தனிப் பயிற்சி, நுண்கலை மற்றும் மேலாண்மைப் பயிற்சி ஆகியவற்றிற்கும் முழு அளவிலே பண உதவிபுரிகின்றது.

**விற்பனை ஒன்றியங்கள்**

தற்போது தமிழகத்தில் 10 கூட்டுறவு விற்பனை ஒன்றியங்கள் உள்ளன. அரசின் உதவி பெற்று, உறுப்பினர்கள் பிடிக்கின்ற மீன்களையும், மற்றும் உறுப்பினர்கள் தயாரிக்கின்ற இதர பொருட்களையும் நல்ல முறையிலே விற்பனை செய்து நுகர்வோருக்கும் உறுப்பினர்களுக்கும் நல்ல விலை கிடைக்கச் செய்வதே விற்பனை ஒன்றியங்களின் முக்கிய நோக்கமாகும்.

**அரசின் புதிய திட்டம் :**

இடைத் தரகர்களை நீக்க வேண்டும் என்ற நோக்கத்தோடும், அரசு அளித்துள்ள -அளிக்கின்ற சலுகைகள் எல்லாம் உண்மையான மீனவர்களுக்கே சேர வேண்டும் என்ற நோக்கத்தோடும், அரசு, மீனவர் கூட்டுறவுச் சங்கங்களில் நேரடியாக மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுள்ளவரே உறுப்பினராக இருக்க முடியும் என்ற திட்டத்தைக் கொண்டுவந்துள்ளது. அதன்படி, மீன்பிடித் தொழிலில் நேரடியாக ஈடுபடாத மீனவர் சங்க உறுப்பினர்கள் எல்லோரும் அந்தந்த மீனவர் சங்கங்களிலிருந்து உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்பட்டு வருகின்றார்கள். இப்பணி தமிழகம் முழுமையும் செயல்படுத்தப்பட்டு, மீன்பிடி தொழிலில் நேரடியாக ஈடுபடாதவர்களில் பெரும்பான்மைப் பகுதியினர் அந்தந்த சங்கங்களிலிருந்து நீக்கப்பட்டு விட்டார்

கள். இதன் பொருட்டு எல்லா மீனவர் கூட்டுறவுச் சங்கங்களும் தங்கள் துணை விதிகளைத் தகுந்தவாறு திருத்தியுள்ளன.

சமீபகாலம்வரை தமிழக அரசு மட்டுமே மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்குப் பண உதவி அளித்து வந்துள்ளது. தற்போது அரசு உதவியோடு, தேசிய கூட்டுறவு அபிவிருத்திக் கழகம், இந்திய சேம வங்கி ஆகிய நிறுவனங்களும் மீனவர் கூட்டுறவுகளுக்குப் பெருமளவில் உதவிபுரிய முன் வந்துள்ளது. மற்றும் ஹிட்கா (HIDCA), இப்பட் (HIFAD) போன்ற சர்வதேச நிறுவனங்களும் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவி புரிய முன்வந்துள்ளன. மாவட்ட மீனவர் கூட்டுறவு வங்கிகளை ஏற்படுத்தும் திட்டம் ஒன்றும் அரசின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டம் செயல்படத் துவங்குமேயானால் மீனவர்களுக்கு உதவிட இதை விடச் சிறந்த நிறுவனம் வேறு ஏதும் இருக்க முடியாது என்பதில் ஐயமில்லை.

### இரால் வியாபாரம்

மற்ற மீன் ரகங்களைக் காட்டிலும் இன்று மீனவர்களுக்கு நல்ல வருவாயை ஈட்டித் தருவது இரால் மீனாகும். இதற்குக் காரணம், இந்த இரால் மீனை மேல் நாட்டவர் மிகவும் விரும்பி உணவாக அருந்தி வருவதே, தற்சமயம் இரால் மீன் ஏராளமான அளவில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகி வருகிறது. இதனால், இரால் மீன் ஏற்றுமதிக்காக, மீன் வியாபாரிகள் இரால் மீனை அதிக விலை கொடுத்து வாங்க முன்வந்துள்ளனர். இதன் நிமித்தம் நல்ல ரக இரால் மீன் கிலோ ஒன்றுக்கு ரூ. 80 முதல் ரூ. 90 வரை விலை கொடுத்து வாங்கப் படுகிறது. ஆகவே, தற்சமயம் அநேகமாக எல்லா மீனவர்களும் இரால் மீன் பிடிப்பதில் தங்களது முழுக் கவனத்தை செலுத்தி வருகின்றனர்.

தமிழக அரசும் மேற்படி இரால் மீன் வியாபாரத்தின் முன்னேற்றத்தைக் கருத்தில்கொண்டு தமிழகக் கடற்கரைப் பகுதிகளில் இரால் மீன் வளர்ப்புக்கு ஏற்ற சுமார் 27,000 எக்டேர் கழிமுக நீர் நிலைப் பகுதிகளை இரால் வளர்ப்புக்குப் பயன்படுத்த, அரசு நிறுவனங்கள் நேரடியாக இந்தப் பகுதிகளை இரால் வளர்ப்பதற்குப் பயன்படுத்தி எடுத்துக் கொள்ளும் பகுதிகளைத் தவிர, இதர பகுதிகளை, மீனவக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இரால் வளர்ப்பிற்காக நீண்டகாலக் குத்தகைக்குத் கொடுக்க உத்தரவிட்டுள்ளது.



## மீனவர் கூட்டுறவுகள்

1972-73-ல் எட்டு மத்திய சங்கங்கள் உட்பட மொத்தம் 469 மீனவர் கூட்டுறவுகள் இருந்தன. தற்போது 519 சங்கங்கள் (19 மத்திய சங்கங்கள் உட்பட) உள்ளன. 1972-73-ல் இவை ரூ. 10.38 இலட்சம் ரூபாய் மதிப்புக்கு மீன் பிடிப்பு செய்திருந்தன. 1976-77-ல் இதன் மதிப்பு ரூ. 27.28 இலட்சமாக இருந்தது.

உள்ளூர்க் குளங்களிலும், ஏரிகளிலும் மீன் பிடிப்பைக் குத்தகைக்கு எடுத்து 100 சங்கங்கள் தொழில் செய்கின்றன. மீனவர்களின் உதவிக்கு மாவட்ட மீனவர் கூட்டுறவு இணையம் கைகொடுக்கின்றன. ஆண்டு சராசரி விற்பனை ரூ. 15 இலட்சமாகும்.

தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் வழங்கும் உதவிகளை மீனவர் கூட்டுறவுகள் பெற்றுக் கொள்கின்றன. 5 மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன் மற்றும் மான்யமாக ரூ. 8.07 இலட்சம் வழங்கப்பட்டது.

மத்திய அரசின் ஒருங்கிணைந்த இரால் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், 78-79ஆம் ஆண்டு முதல் ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் மீன் பிடித்தொழில் அபிவிருத்திக்கு நைலான் நூல் விசைப்படகுகள், நாட்டுப்படகுகள் முதலியன 50 சதவீத மானியத்துடன் மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமே மீனவ சங்கத்தினர்களுக்குப் பட்டுவாடா செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இதைத்தவிர, வறட்சிபாதிப்புப் பகுதித்திட்டத்தின் கீழ் இராமநாதபுர மாவட்ட மீனவ கூட்டுறவுச் சம்மேளனத்தின் மூலம் 300 நாட்டுப் படகுகள், 150 விசைப்படகுகள் முதலியன விநியோகம் செய்யவும் அவர்களுக்காகப் பனிக்கட்டி உற்பத்தி நிலையம் ஒன்று அமைக்கவும் மீன் விற்பனை வாகன ஊர்திகள் வாங்கவும் ரூபாய் 91.11 இலட்சம் (மானியம் ரூ.50.61 இலட்சம், கடன் ரூ. 40.50 இலட்சம்) அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டிலிருந்து மூன்று ஆண்டுக்காலத்திற்குள் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

தமிழகத்திற்கு மாநில அளவில் ஓர் கூட்டுறவுச் சம்மேளனம் மிகவும் அவசியமானதாகும். இந்த அமைப்பு தேசிய கூட்டுறவு அபிவிருத்திக் கழகத்திலிருந்து பெருமளவு பண உதவி பெற்று பயன்தரத்தக்க பல திட்டங்களை உருவாக்க முடியும். தற்போது மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மேற் கொண்டிருக்கும் உற்பத்தி விற்பனைப் பணிகளை ஒருங்கிணைக்கவும் முடியும். இவ்வித மாநில அளவிலான சம்மேளனம் அமைக்க நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. இனி புதிய சங்கங்கள் அமைக்கப்பட்டால் உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கங்களாகத்தான் அமைக்கப்படும்.

தமிழக அரசு, மீனவர்கள் மேம்பாடுடன் வாழ பல திட்டங்களைத் தீட்டிச் செயலாற்றி வருகின்றது. அவர்களுக்கு ஒளி பொருந்திய எதிர்காலம் கூட்டுறவு அமைப்புகளின் மூலம்தான் அமையவிருக்கிறது என்றால் அது மிகையாகாது.



விதைப் பெருக்குத் திட்டப்பிரிவை கூட்டுறவுத் துறைச் செயலாளர் செல்வி. எம்.எஸ். ரமேஷ் அவர்கள் பார்வையிடுகிறார்.

# 'டியூகாஸ்' என்றால் என்ன?

'டியூகாஸ்' என்றழைக்கப்படும் 'துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா நிலையம்' 1955-ஆம் ஆண்டு, தமிழக அரசின் முன்னோடித் திட்டத்தின் கீழ் 'துடியலூர் கிராம வளர்ச்சி வங்கி' என்ற பெயருடன் துவக்கப்பட்டு தற்போது துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா நிலையம் என்ற பெயரில் தென்னிந்தியாவில் தலை சிறந்த கூட்டுறவு நிலையமாக விளங்கி வருகிறது.

இச்சங்கம், 56 குக்கிராமங்களை உள்ளடக்கிய 13 ரெவின்யூ கிராமங்களைக் கொண்ட 135 சதுர கிலோ மீட்டர் பரப்பில் வாழும் பத்தாயிரம் மக்களுக்குச் சேவை புரியும் வகையில் எல்லை அமைப்பைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

ஆரம்ப நிலையில் 397 உறுப்பினர்களையும், ரூ. 32,460- மூலதனத்தையும் கொண்ட இச்சங்கம், இன்று 11,839 உறுப்பினர்களையும், ரூ. 12,69,935-50 பங்கு மூலதனத்தையும் கொண்டிருக்கிறது. உறுப்பினர்களுக்கு விவசாய வளர்ச்சிப் பணிகளுக்காக அசையாச் சொத்துக்களின் பேரில் மத்திய காலக் கடன்களையும், மற்றும் நகை ஈட்டுக்கடன், கறவை மாட்டுக்கடன், உரக் கடன், விவசாயக் கருவிகள், கொள்முதல் கடன் போன்ற குறுகிய காலக் கடன்களையும் கொடுத்து வருகிறது. பல கிராமங்களைச் சார்ந்த உறுப்பினர்களிடமிருந்து அவர்களுடைய சேமிப்பின் கணிசமான பகுதியாக ரூ. 51,22,828 வரை, வைப்பு நிதியாக இச்சங்கம் பெற்றுள்ளது.

அரசு ஆணைப்படி, தமிழகத்திலேயே முதன்மையாக தேசியமயமாக்கப்பட்ட கனரா வங்கியிலிருந்து ரூ. 150 இலட்சம் ஆண்டுக் கடன் அளவு பெற்றுள்ளது.

இச்சங்கம் உறுப்பினர்கள், ஏனைய விவசாயப் பெருங்குடி மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், கீழ்க்காணும் உற்பத்தி மற்றும் விநியோகப் பணிகளை மேற்கொண்டு வருகிறது:

**கலப்பு உரங்கள்:**

1961-ஆம் ஆண்டிலிருந்து ''அசோகா மார்க்'' என்ற தரமான கலப்பு உரங்களை உற்பத்தி செய்து, கோவை மாவட்டம், பெரியார் மாவட்டம் முழுவதுமுள்ள 82 கிராமக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், நீலகிரி மாவட்ட தேயிலைப் பயிர்களுக்கும், நீலகிரி கூட்டுறவுச் சங்கங்களுக்கும் விநியோகம் செய்து வருகிறது.

**கால்நடை, கோழித் தீவனங்கள்:**

தீவிர கால்நடை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 1965-ஆம் ஆண்டு, ரூ. 2.40 இலட்சத்தில் தமிழக அரசின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டு, தரமான கால்நடை மற்றும் கோழித் தீவனங்கள் உற்பத்தி செய்யப்பட்டு, விநியோகிக்கப்பட்டு வருகிறது.

**பூச்சிக்கொல்லி மருந்துகள்:**

தேசிய வளர்ச்சிக் கழகத்தின் நிதி உதவியுடன், 1970-ஆம் ஆண்டில் ரூ. 4,50,000-ஐ மூலதனமாகக் கொண்டு பூச்சிக் கொல்லி மருந்து தயாரிக்கும் தொழிற்கூடத்தை இச்சங்கம் நிறுவியுள்ளது. இத்தொழிற்கூடத்தின் மூலம் தனியே தூவப்படும் பொடி மருந்துகள், நீரில் கலந்து தெளிக்கும் பொடி மருந்துகள், நீரில் கலந்து தெளிக்கும் திரவ மருந்துகள் ஆகியவற்றை இந்திய தர நிர்ணயக் கழகத்தின் தரக் கட்டுப்பாட்டிற்குட்பட்டு தயாரித்து மாநிலத்தின் பல்வேறு கூட்டுறவுச்சங்கங்களுக்கும், அரசு விவசாய டிப்போக்களுக்கும், இச்சங்கத்தின் உறுப்பினர்களுக்கும் விநியோகம் செய்து வருகிறது.

உற்பத்தியாகும் மருந்துகளின் தரத்தை அவ்வப்போது பரி



சோதிக்க நவீன வசதிகள் கொண்ட ஆய்வுக்கூடம் ஒன்று திறமை வாய்ந்த இரசாயன வல்லுநர்கள் மூவரின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது. இப்பூச்சிக் கொல்லி மருந்தின் விற்பனைப் பிரிவு தமிழக அரசின் வேளாண்மைத் துறையிலிருந்து அயல் பணியில், பணியாற்றும் ஒரு இணை வேளாண்மை இயக்குநரின் கீழ் இயங்கி வருகிறது.

**விதைப்பெருக்குத் திட்டம் :**

இத்திட்டம், தேசீய வளர்ச்சிக் கழகம், தமிழக அரசு ஆகியவற்றின் நிதி உதவியுடன் ரூ. 1.70 கோடி செலவில், விவசாயிகளுக்குத் தரமான, அரசு சான்றிதழ் பெறப்பட்டு சாஸ்திரியமான முறையில் விதைகளைக் குறைந்த விலையில் அளிக்கும் பொருட்டு, கோவை மாவட்டத்திலுள்ள ஒன்பது கூட்டுறவுச் சங்கங்களுடன் கூட்டாகத் துவக்கப்பட்டுள்ளது.

விதைப் பெருக்கத் திட்டத்தின் கீழ் இச்சங்கம் பருத்தி மற்றும் வீரிய வித்துக்களுக்கான நிலையங்களைச் சுமார் 4,000-ஏக்கரில் அமல் செய்வதோடு, மத்திய அலுவலகமாகவும் செயல்படுகிறது. நவீன கருவிகள் கொண்ட மத்திய விதைப் பரிசோதனைக் கூடமும், விதைகளை நீண்ட காலத்திற்குக் கெடாமல் பாதுகாத்து வைக்க தட்பவெப்ப நிலைகளைக் கட்டுப்படுத்தும் கிடங்கும் கட்டப்பட்டுள்ளது. விதையுற்பத்திக்குத் தேவையான தொழில் நுட்ப ஆலோசனைகள் திறமை வாய்ந்த வேளாண்மைத்துறையைச் சார்ந்த அலுவலர்களால் வழங்கப்படுகின்றன.

**விவசாய உபகரணங்கள் வாடகைக்கு விடுதல் :**

இச்சங்கத்தின் சீரிய பணிகளைக் கண்ணுற்ற அகில உலக நிறுவனமான 'கேர்' நிறுவனம், ரூ. 5 இலட்சம் மதிப்புள்ள டிராக்டர்கள், துளைபோடும் இயந்திரங்கள், கதிரடிக்கும் இயந்திரங்கள் முதலியவற்றை 1969-ஆம் ஆண்டில் நன்கொடையாகக் கொடுத்துள்ளது. நன்கொடையாகப் பெறப்பட்ட இயந்திரங்களுடன் நிலையம் சொந்தமாகக் கொள்முதல் செய்த டிராக்டர், கதிரடிக்கும் இயந்திரம், பவர் டில்லர், பாறை உடைக்கும் இயந்திரம், கிணறு துளைபோடும் கருவிகள் முதலியவற்றைக் குறைந்த வாடகைக்குக் கொடுத்து வருகிறது.

**விவசாய உபகரணங்கள் உற்பத்தி:**

விவசாயத் தேவைக்கேற்ற கொத்துக் கலப்பைகள், பார் ஓட்டும் கலப்பைகள், கதிரடிக்கும் இயந்திரங்கள், தட்டு வெட்டும் இயந்திரங்கள், விசைத் தெளிப்பான்கள், சாண எரிவாயுச் சாதனங்கள், விதை தரம் பிரிக்கும் இயந்திரங்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்து விவசாயிகளுக்குக் குறைந்த விலையில் விற்பனை செய்து வருகின்றது.

**பெட்ரோல் பங்க்-சர்வீஸ் ஸ்டேஷன் :**

இப்பகுதியில் அதிகமான அளவில் விவசாயிகள் பவர் ஸ்பிரேயர்களைப் பயன்படுத்தி வருவதால், அவர்களுக்குத் தேவையான பெட்ரோல், டீசல் எண்ணெய் ஆகியவற்றை வழங்கிவருகின்றது. ஊர்திகளைக் கழுவிச் சுத்தம் செய்து எண்ணெய், கிரீஸ் முதலியன இட்டு செப்பனிடும் பகுதியும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இச்சங்கம் தொடங்கி 25 ஆண்டுகள் ஆனதை முன்னிட்டு வெள்ளிவிழா அலுவலகக் கட்டடம் கட்டுவதற்குக் கடந்த ஏப்ரல் மாதம் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்களால் கால்கோள் விழா நடத்தப்பட்டது.

சங்கத்தின் நிர்வாகமானது, தகுதியும் திறமையும் வாய்ந்த தலை சிறந்த கூட்டுறவாளர் திரு டி. என். பழனிசாமி அவர்களின் தலைமையின் கீழ் 12 இயக்குநர்களைக் கொண்டு சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது.

# ஜார்ஜ் டவுன் கூட்டுறவு வங்கி லிமிடெட்,

## எண் 8512

(பாதுகாப்புப் பெட்டக வசதியுடன்)

டாக்டர் பி. நடேசன் மாளிகை

62, கிருஷ்ணப்ப அக்ரஹாரம் தெரு, சென்னை—600 001

பெரம்பூர் கிளை : 60, படேல் சாலை, பெரம்பூர், சென்னை—600 011

வர்த்தக வங்கிகளை விட டெபாசிட்டுகளுக்கு 1% அதிக வட்டி பெறுவீர்.

| | | |
|---|---|---|
| எங்கள் நடைமுறை மூலதனம் | ... | ரூ. 5 கோடிக்கு மேல் |
| எங்கள் டெபாசிட்டுகள் | ... | ரூ. 4 கோடிக்கு மேல் |

1977-78 ஆம் ஆண்டு அளித்த ஈவுத்தொகை 12%

புதிய வட்டி விகிதங்கள் :

| | |
|---|---|
| சேமிப்பு வைப்பு | 6 % |

நிரந்தர வைப்பு :

| | |
|---|---|
| 1 ஆண்டு | 8 % |
| 3 ஆண்டுகளுக்கு மேல் | 9.5 % |
| 5 ஆண்டுகளுக்கு மேல் | 11 % |

தொடர் வைப்பு : 8% முதல் 11% வரை கூட்டு வட்டி

| | | | |
|---|---|---|---|
| மாதம் ரூ. 10 செலுத்தினால் | 12 | மாதங்களுக்குப் பின் | ரூ. 125—80 |
| ,, | 60 | ,, | ரூ. 768—75 |
| ,, | 120 | ,, | ரூ. 2177—25 |


G. T. C. மறுமுதலீட்டுத் திட்டம் : 9.5% மற்றும் 11% கூட்டு வட்டி.

உங்கள் குழந்தைகளின் உயர் கல்விக்கும், திருமணத்திற்கும் உதவும் மறுமுதலீட்டுத் திட்டத்தில் சேருவீர்!

ரூ. 1,000 முதலீடு செய்தால்
255 மாதங்களில் ரூ. 10,033—55 திரும்பப் பெறலாம்.

எல். சுப்பிரமணியன், பி.காம்.,
துணைப் பதிவாளர்/செயலர்

டி. சி. பாபு, பி.காம்.,
தலைவர்.




# ஒளிபரவட்டும்

ம. கனகசபாபதி,
தனி அலுவலர்,
தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம்.

**வெ**ள்ளத்தனையது மலர் நீட்டம் மாந்தர் தம் உள்ளத்தனையது உயர்வு என்பார் வள்ளுவப் பெருந்தகை. உயர்ந்த இலட்சியத்தை அடைய வேண்டுமென்ற உறுதியில்லாத மக்கள் சிறந்த சாதனைகளை நிகழ்த்திக்காட்ட முடியாது. கூட்டுறவு இயக்கம் பணியில் சிறந்திருக்க வேண்டுமானால் கூட்டுறவு இயக்கக் கொள்கைகளையும் கூட்டுறவு நிர்வாக முறைகளையும் தெரிந்து கொள்ளுதல் கூட்டுறவு இயக்கத்தில் ஈடுபாடு கொண்டுள்ள அனைவரின் கடமையாகும். இச் சீரிய பணியில் கடந்த 65 ஆண்டுகட்கு மேலாகத் தமிழ் நாடு கூட்டுறவு ஒன்றியம் தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

கூட்டுறவியக்கம் சமூக பொருளாதார மேம் பாட்டுக்காக இயங்கி வருகிறது. கூட்டுறவுச் சங்கங்கள் அதன் அங்கங்களாக அமைந்து ஆக்கப்பணியில் ஈடுபட்டு வருகின்றன. இந்தப் பெரும் பயணத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ள அனைவரும் பெரும் பங்கு வகிக்கின்றனர். எனவே கூட்டுறவு அமைப்புகளில் இடம் பெற்றுள்ள அனைத்து உறுப்பினர்களும் சங்கத்தின் நோக்கங்கள், செயல்முறைகள், நிர்வாகத்தின் வழிமுறைகள் சங்கத்திற்கு ஆற்றவேண்டிய கடமைகள் சங்கத்தின் மூலம் பெறகூடிய உரிமைகள் அனைத்தையும் தெரிந்திருக்கவேண்டும்.

கூட்டுறவுச்சங்கத்தின் நிர்வாகத்தில் அனைத்து உறுப்பினர்களுக்கும் மிகுந்த பொறுப்புண்டு என்ற உணர்வு உறுப்பினர்களுக்கு ஏறபட்டாலன்றி நிர்வாகம் செம்மையாக நடைபெறும் என்று சொல்லமுடியாது. ஏனெனில் கூட்டுறவு நிறுவனத்தின் வாழ்விலும் தாழ்விலும் உறுப்பினர்கள் காட்டும் அக்கறை பின்னிப் பிணைந்துள்ளது. இதற்கு உயிர் ஓட்டமாக அமைந்துள்ளது கூட்டுறவுக் கல்வியாகும்.

## கூட்டுறவுக் கல்வி

கூட்டுறவியக்கத்தின் வெற்றிக்குக் கூட்டுறவுக் கல்வி மிக மிக முக்கியமானது என்பது இந்த இயக்கம் தோன்றியகாலம் தொட்டே ஏற்றுக்கொள்ளப் பட்ட உண்மையாகும். கூட்டுறவியக்கத்திற்கு வித்திட்ட வித்தகர்கள் என்று போற்றப்படும் ''ராக்டேல்'' முன்னோடிகள் தாங்கள் உருவாக்கிய கூட்டுறவுத் தத்துவத்தில் கூட்டுறவுக் கல்வியை வலியுறுத்தியிருக்கிறார்கள். கூட்டுறவியக்கத்தின் வளர்ச்சிக்கு அது மக்கள் மனத்தில் வேரூன்றி நிலைபெறவும் கூட்டுறவுக்கல்வி ஓர் அடிப்படைத் தேவையாகும் என்பது அவர்களுடைய கருத்து. எனவே ஒவ்வொரு சங்கமும் உறுப்பினர்களுக்குக் கூட்டுறவுக் கல்வியைப் புகட்டவேண்டுமென்று அந்த முன்னோடிகள் கருதினார்கள்.

அனைத்துலகக் கூட்டுறவு மன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஆறு கூட்டுறவுக் கொள்கைகளில் ''கூட்டுறவுக் கல்வி'' முக்கிய இடம் வகிக்கிறது. தமிழ்நாடு கூட்டுறவுச் சட்டம், விதி முறைகளில் கூட்டுறவுக் கல்வியின் அவசியத்தை வலியுறுத்த ஒவ்வொரு சங்கத்தின் நிகர இலாபத்தில் 2 சதவீதம், கூட்டுறவுக் கல்விக்காக ஒதுக்கப்படவேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

உறுப்பினர்கள் மட்டுமின்றி கூட்டுறவுச்சங்க நிர்வாகப் பொறுப்பை ஏற்றிருக்கும் நிர்வாகக்குழு உறுப்பினர்கள், சங்கத்தலைவர் ஆகியோருக்கும் கூட்டுறவு இயக்கக் கொள்கை விளக்கமும், சங்கங்களைத் திறமையாக நடத்திச் செல்லத்தக்க பயிற்சியும் தேவைப்படுகிறது.

கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு மட்டுமின்றிச் சங்கத்தின் அன்றாட நிர்வாகப்பொறுப்பை மேற்கொண்டிருக்கும் பணியாளர்களும் கூட்டுறவுச் சங்கத்தின் செயல்முறைகளைப் பற்றிப் போதிய பயிற்சி பெற்றவர்களாக

இருக்கவேண்டும். மேலும் கூட்டுறவியக்கத்தின் நோக்கங்கள், சேவைகள், சாதனைகள், செயல் திட்டங்கள் அனைத்தையும் அனைவரும் அறியும் வண்ணம் எடுத்துரைத்துக் கூட்டுறவியக்கத்தில் ஈடுபாடு கொள்ளச்செய்யும் பிரச்சாரப்பணியினையும் மேற்கொள்ளவேண்டியிருக்கிறது.





தமிழகத்தில் கூட்டுறவுக் கல்விப் பயிற்சி மற்றும் பிரச்சாரப்பணியில் கடந்த 65 ஆண்டுகளாகத் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் அயராது பணியாற்றி வருகிறது. கூட்டுறவியக்கம் வளர்ந்து வந்த பொழுது கூட்டுறவுப் பிரச்சாரம் மற்றும் கல்வியைப் பிரச்சாரப் படுத்தவும் பழம் பெரும் கூட்டுறவாளர்களான திவான்பகதூர் திரு. ஆதிநாராயணய்யா, திரு. யூ. வெங்கட்ராமய்யா, திரு. ஆதிநாராயண செட்டியார் திரு. எம் சிவராவ் இன்னும் பல பெரியோர்கள் ஒன்றுகூடி இவ்வொன்றியத்தை நிறுவினார்கள். இந்தியாவில் முதன் முதலாகத் தோன்றிய கூட்டுறவுப்பிரச்சார நிறுவனம் இதுதான்.

தமிழகத்திலுள்ள 13 மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்கள் தலைமைக் கூட்டுறவு நிறுவனங்கள், 7 கூட்டுறவுப்பயிற்சிக் கழகங்கள் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் உறுப்பினர்களாவார்கள். உறுப்பினர்கள் செலுத்தும் ஆண்டுச் சந்தாவைத் தவிர கூட்டுறவு நிறுவனங்களின் நிகர லாபத்திலிருந்து ஒதுக்கீடு செய்யப்படும் 2 தொகையைக் கல்வி நிதி பெற்றுத் தமிழ் நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கல்விப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

**கல்வியும் பயிற்சியும்:**

கூட்டுறவுச்சங்க உறுப்பினர்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் நோக்கங்களையும் செயல் முறைகளையும் சங்க உறுப்பினர்களின் கடமைகளையும் உரிமைகளையும் தெளிவாகத் தெரிந்து கொள்ளும் பொருட்டு உறுப்பினர் கல்வித்திட்டம் நடத்தப்பட்டு வருகிறது. இதற்காகத் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் ஏழு பிரச்சார வண்டிகள் மாதத்தில் 20 நாட்கள் கிராமங்களில் பயணம் செய்கின்றன. மாவட்டக் கூட்டுறவு ஒன்றியத் தனி அலுவலரும் பஞ்சாயத்து ஒன்றியத்தைச் சார்ந்த பல அலுவலர்களும் இணைந்து கிராமங்களுக்குச் சென்று உறுப்பினர் கல்வி முகாம்களை நடத்தி வருகின்றார்கள். கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக் குழுக் கூட்டம் மற்றும் பொதுப்பேரவைக் கூட்டங்கள் கூட்டி உறுப்பினர்களுக்குத் தேவையான விளக்கங்கள் அளிக்கப்படுகின்றன. மாலை வேளைகளில் கூட்டுறவு வேளாண்மை, பால்வளம் போன்ற திரைப்படங்கள் காட்டப்பட்டு வருகின்றன.

அனைத்திந்திய வானொலியில் ''வயலும் வாழ்வும்'' நிகழ்ச்சியின் மூலம் கடந்த ஆண்டு கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் பற்றி வகுப்புகள் நடத்தப்பட்டன. அதைத்தொடர்ந்து கோவை, திருச்சி, நெல்லை ஆகிய நிலையங்கள் மூலம் இத்தகைய வகுப்புகள் நடத்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மேலும் தேசியக்கூட்டுறவு ஒன்றியத்துடன் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியமும் இணைந்து சென்னை நகரத்தில் நுகர்வோர் கூட்டுறவுக் கல்வித்திட்டம் நடத்தி வருகிறது. நகரிலுள்ள கூட்டுறவுப் பண்டகசாலைகளில் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ள தாய்மார்களைச் சந்தித்துக் கூட்டுறவுப்பண்டகசாலைகள் பற்றிய விளக்கங்கள், பண்டங்களை வாங்கும் முறை, அவற்றால் ஏற்படும் நன்மைகள், உறுப்பினர்கள் காட்டவேண்டிய ஈடுபாடு ஆகியவை எடுத்துரைக்கப்படுகின்றன. தாய்மார்களுக்குத் தேவையான சமையற் குறிப்புகள் ஓய்வு நேரத்தில் மேற்கொள்ள வேண்டிய கை வேலைப்பாடுகள் போன்றவை கற்றுத்தரப்பட்டு அவர்களுக்குக் கூட்றவுப் பண்டகசாலையின் மீது ஈபாடு கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்காக ஒரு திட்ட அலுவலரும் அவருக்கு உதவி புரிய ஒரு பெண்போதகரும் பணி புரிகிறார்கள்.

தமிழகத்தில் 7 கூட்டுறவுப் பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றத் தேவையான இளநிலைப் பணியாளர்களுக்குத் தக்க பயிற்சி அளித்து, கூட்டுறவுச் சங்கங்கள் திறமையாக நிர்வகிக்கப்பட தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் பணியாற்றி வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் 1400 இளநிலைப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளித்து வருகிறது. இது மட்டுமன்றிப் பயிற்சி இன்றி கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றி வரும் பணியாளர்களுக்குப் பகுதி நேரப்பயிற்சியும் குறுகிய காலப் பயிற்சியும் அளித்து, பணியாளர்களின் மேலாண்மைத் திறமையை அதிகப்படுத்தியும் வருகிறது.

பால்வள நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர்களுக்கு ஈரோட்டில் தனிப் பயிற்சி நிலையம் துவக்கப்பட்டு பால்வள கூட்டுறவுச் சங்க செயல்முறைகளுக்கு ஒத்த சிறப்புப் பயிற்சி வழங்கப் படுகின்றது.

சென்னையில் தேசிய கூட்டுறவு ஒன்றியத்தின் நிர்வாகத்தில் நடைபெறும் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரிக்கு, குறுகிய காலச் சிறப்புப் பயிற்சிகள் நடத்துவதற்காகத் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் நிதிஉதவி வழங்கி வருகிறது. அண்மையில் 75 மனைகள் கொண்ட பரப்பில் அண்ணா நகரில் அமைக்கப்பட்டுள்ள கூட்டுறவுக் கல்லூரியின் புதிய கட்டிடத் தொகுதிக்கு தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் சுமார் ரூ. 27 இலட்சம் நிதி உதவி வழங்கியுள்ளது என்

பது தமிழகக் கூட்டுறவு இயக்க வரலாற்றில் ஒரு சிறப்பான அம்ச மாகும்.

*1979-80* கூட்டுறவாண்டில் உறுப்பினர் கல்வித் திட்டத்தின் கீழ் சுமார் 80,000 உறுப்பினர் களுக்குக் கல்வி அளிக்கவும் குறு கிய காலப் பயிற்சித் திட்டத்தின் கீழ் கூட்டுறவுக் கல்லூரி மூலம் 25 குறுகிய காலப் பயிற்சி வகுப் புகளும் ஏழு கூட்டுறவுப் பயிற்சிப் பள்ளிகள் மூலம் 140 குறுகிய காலப் பயிற்சி வகுப்புகளும் நடத்தத் திட்டமிடப்பட்டுள் ளது.

**கூட்டுறவுப் பிரச்சாரம்:**

கூட்டுறவு இயக்கத்தில் சார்ந் துள்ளவர்கள் மட்டுமின்றி வெளியே இருப்பவர்களும் கூட்டு றவு இயக்கச் சிறப்பு இயல்பு களைத் தெரிந்து கொள்ள வேண் டும். கூட்டுறவுப் பிரசாரத்தைச் சீராகவும் தொடர்ந்தும் தமிழ் நாடு கூட்டுறவு ஒன்றியம் செய்து வருகின்றது.

கூட்டுறவு இயக்கக் கருத்துக் கள், திட்டங்கள், சாதனைகள், நிறுவனங்களின் சிறப்புமிக்க வர லாறு, கூட்டுறவுத் தலைவர்கள் வாழ்க்கைக் குறிப்புகள் ஆகிய வற்றைத் தாங்கி தமிழில் 'கூட்டு றவு' என்ற இதழும், ஆங்கிலத் தில் 'தமிழ்நாடு ஜெர்னல் ஆப் கோவாப்பரேஷன்' என்ற இதழும் கடந்த 50 ஆண்டு களாக நடத்தப்பட்டு வருகின் றன. இதே போன்ற தமிழகத்தி லுள்ள 13 மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்கள் நடத்தி வரும் செய்தி மடலுக்குத் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் நிதிஉதவி செய்து ஊக்குவித்து வருகிறது.

கூட்டுறவின் சிறப்பு அம்சங் களை விளக்கும் பல வண்ணச் சுவ ரொட்டிகள் அச்சிடப்பட்டு அவை பரவலாகத் தமிழகமெங் கும் விளம்பரப்படுத்தப் படுகின் றன. அவ்வாறே சிறப்புத் திட் டங்களை விளக்குகின்ற துண்டுப் பிரசுரங்கள் அச்சிட்டு வெளியி டப்படுகின்றன. பயிற்சி நிலைய மாணவர்களுக்குத் தேவையான பாட நூல்களும் அச்சிட்டு வினி யோகிக்கப்பட்டு வருகிறது. ஒவ் வொரு காலாண்டுக்கும் கூட்டுற வுத் துறை சார்ந்த புள்ளிவிவரத் தொகுப்பும் ஓராண்டு புள்ளி விவ ரப் புத்தகமும் அச்சிட்டு வெளி யிடப்படுகின்றன.

கூட்டுறவு தொடர்பாக முழக் கங்கள் அடங்கிய பதாகைகள் தயாரிக்கப்பட்டு விழாக்களின் போது விளம்பரப்படுத்தப்படு கின்றன. தமிழ்நாடு கூட்டுறவு




ஒன்றியம் தயாரித்து வழங்கிய ''கூட்டுறவே நாட்டுயர்வு'' என்ற 'ஸ்டிக்கர்' அனைவரையும் கவர்ந் தது. அதேபோன்று 'பேட்ஜ்' களும் தயாரிக்கப்பட்டு கூட்டுற வாளர்கள் அறிந்துகொள்ள வழங்கப்பட்டு வருகின்றன. பல வண்ண ஸ்லைடுகள் மூலமாக தமிழகத்திலுள்ள அனைத்துத் திரையரங்குகளிலும் கூட்டுறவுச் செயல் முறைகள் விளம்பரப் படுத்தப்படுகின்றன.

வானொலி, தொலைக்காட்சி மூலம் கூட்டுறவு தொடர்பான விளக்க உரைகள் கூட்டுறவு நிறு வனங்கள் பற்றிய சித்திரம், உரையாடல், பேட்டி முதலி யவை நடத்தப்பட்டு வருகின்றன. வர்த்தக ஒலிபரப்பு மூலமாகக் கிராமக் கூட்டுறவுச் சங்கத்தின் முக்கியத்துவம் பற்றியும் உறுப்பி னர்கள் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டிய கடமை பற்றியும் இசையுடன் கூடிய முழக்கங்கள் ஒலிபரப்பப்பட்டு வருகின்றன.

கூட்டுறவுக் கருத்துக்களை மையமாகக்கொண்ட கதை அம்ச மிக்க கூட்டுறவுத் திரைப்படம் பிரச்சாரப் பிரிவு மூலம் கிராமங் களில் காட்டப்பட்டு வருகிறது. கூட்டுறவு தொடர்பாகத் திரைப் படங்கள் தமிழகம் மற்றும் மத்திய அரசின் திரைப்படப் பிரி விலிருந்து தருவித்தும் காட்டப் பட்டு வருகின்றன.

கிராமக் கூட்டுறவுச் சங்கத்தில் பெறப்பட்ட கடன்களைத் திருப் பிச் செலுத்தவேண்டியதன் அவ சியத்தை வலியுறுத்தும் திரைப் படம் ஒன்று தயாரிப்பதற்கான ஏற்பாடு தமிழ்நாடு திரைப் படப்பிரிவு மூலம் செய்யப்பட்டு வருகிறது.

கூட்டுறவு நிறுவனங்களின் செயல்முறைகளில் தோன்றும் சிக்கல்களைக் கண்டறியவும் அவற்றைக் களைய வழிவகைகள் காணவும் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ளவும் கருத்தரங்கு களும் மாநாடுகளும் அவ்வப் போது நடத்தப்படுகின்றன. மாவட்ட அளவில் எழும் பிரச் னைக்குத் தீர்வுகாணும் வகையில் மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங் கள் கருத்தரங்குகளை நடத்து கின்றன. அண்மையில் ''கிராம நுகர்வோர் திட்டம்'' பற்றி உத கையில் நடத்தப்பட்ட அனைத் திந்திய நுகர்வோர் கூட்டுறவுக் கருத்தரங்கு வரலாற்றுச் சிறப்பு மிக்கதொன்றாகும்.

**கண்காட்சி:**

கூட்டுறவுப் பிரச்சாரத்தில் கண்காட்சி நடத்துவது ஒரு குறிப்பிடத்தக்க அங்கமாகும். மாநில அளவிலான அரசு நடத்தும் கண்காட்சிகளிலும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச் சிக்கழகம் நடத்தும் கண் காட்சியிலும் தமிழ்நாடு கூட்டு றவு ஒன்றியம் பங்கு பெற்று கவர்ச்சி மிக்க அரங்குகளை அமைத்து வருகின்றது. மாவட்ட அளவில் நடைபெறும் திருவிழாக் கள் கூட்டுறவு விழாக்கள் மற்றும் பொது நிகழ்ச்சிகளில் மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்கள் பங் கேற்று கண்காட்சிகள் நடத்தி வருகின்றன.

ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் திங்களில் அனைத்திந்தியக் கூட்டு றவு வார விழா தமிழகமெங்கும் சிறப்பாகக் கொண்டாட வேண் டிய ஏற்பாடுகளைத் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியமும், மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்களும் சிறப் பாகச் செய்து வருகின்றன. சிறந்த கூட்டுறவாளர்களை கௌரவித்தல், சிறந்த கூட்டுறவு நிறுவனங்களுக்குப் பாராட்டுக் கேடயங்கள் வழங்குதல், சிறந்த கூட்டுறவாளர்களுக்குப் பதக்கங் கள் அளித்துப் பாராட்டுதல், கலை நிகழ்ச்சிகள் நடத்துதல், கூட்டுற வாளர்களும் பல்துறை அறிஞர் களும் வழங்கும் கருத்துரைகள் ஏற்பாடு செய்தல் போன்றவை முக்கியமாக இடம் பெறும். இந்த ஆண்டும் தொடர்ந்து அனைத் திந்தியக் கூட்டுறவு வார விழா சிறப்பாகக் கொண்டாடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுவருகிறது.

இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலக் கூட்டுறவு ஒன்றியங்களி லும், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றி யம் நிதிவசதி மற்றும் கூட்டுறவுப் பிரச்னை நடவடிக்கைகளில் தனிச் சிறப்போடு இடம்பெற்று வருகிறதென்பது குறிப்பிடத்தக்க தாகும்.

இந்தியாவில் கூட்டுறவு இயக் கம் தோன்றி 75 ஆண்டுகள் ஆகின்றன. தமிழ்நாடு கூட்டு றவு ஒன்றியம் கடந்த 65ஆண்டுக் காலமாகக் கல்வி மற்றும் பிரச் சாரப் பணிகளில் ஈடுபட்டு கூட் டுறவியக்கத்தில் ஒரு சிறப்பான வரலாறு படைத்துள்ளது. கூட் டுறவு ஒளிபரப்பும் பணியில் இந்த நிறுவனம் தொடர்ந்து தளராது பணிபுரியத் தன்னை அர்ப்பணித்துக்கொண்டுள்ளது.


கோ-ஆப்டெக்ஸ்
அழகோவியம்!
அழகு மகளிர்
ஆவலோடு வாங்கி அணிவதெல்லாம்
கோ-ஆப்டெக்ஸ் சேலைகளையே!
அதில் உள்ள விந்தையெல்லாம்
அழகும் நயமும் இழைய...
அகம் கவரும் வண்ணங்கள் மிளிர.
கோடுகளும்-புள்ளிகளும் குலவ...
எண்ணற்ற வகைகளை
கோ-ஆப்டெக்ஸ் வழங்குகிறது!
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
ELEGANT

# தேசியக் கூட்டுறவுக் கொள்கைகள்

- தொழில் வளர்ச்சி, கிராமம் சார்ந்த பொருளாதார மேம்பாடு ஆகியவற்றைப் பரவலாக்க உதவும் பெரும் சாதனங்களில் ஒன்றாகக் கூட்டுறவு நிறுவனங்கள் அமைக்கப்படும்.

- பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக முன்னேற்றத்திற்கான திட்டங்கள் தீட்டும்போது அனைத்து மட்டங்களிலும் உள்ள கூட்டுறவு நிறுவனங்கள் ஈடுபடுத்தப்படும்.

- எளியோரைப் பாதுகாக்கும் "கேடயமாக" கூட்டுறவியக்கம் வளர்க்கப்படும். சிறிய, மிகச் சிறிய விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், கிராமக் கைவினைஞர்கள் குறைந்த, மற்றும் நடுத்தர வருவாயுள்ளவர்கள், கூட்டுறவியக்கத்தில் பங்குபெற அதிக வாய்ப்பளிக்கப்படுவதுடன்,கோடிக்கணக்கான கிராம மக்களை இவ்வியக்கத்தில் ஈடுபடுத்த அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

- கூட்டுறவு வளர்ச்சி தேசீய அடிப்படையில் ஏற்படுத்தப்படும், மண்டலங்களுக்கிடையே உள்ள ஏற்றத் தாழ்வுகள் படிப்படியாக அகற்றப்படும்.

- கூட்டுறவியக்கம் தனித்தியங்கும் தன்னிறைவு பெற்ற அதே வேளையில் கட்டுப்பாடுகளைத் தளர்த்தி, வெளியார் தலையீடு, முக்கியமாக அரசியல் தலையீடில்லா இயக்கமாக அமைக்கப்படும். கூட்டுறவுச் சங்கங்களின் தன்னாட்சியானது சொந்த நிதி வளத்தைப் பெருக்குவது —நகர, கிராமப்புறங்களின் சேமிப்பைச் சேகரிப்பது—அரசு மற்றும் பிற நிதி நிறுவனங்களின் உதவியை நாடாமல் குறைப்பது — ஆகிய அடிப்படையில் அமையும்.

- சுயநலமிகளின் ஆதிக்கத்திற்குட்படாத தெளிவு பெற்ற உறுப்பினர்கள் கொண்ட துடிப்புள்ள கூட்டுறவு ஜனநாயகம் உருவாக்கப்படும்.

- கூட்டுறவியக்கத்தின் நற்பெயரை மாசுபடுத்துகிற கூட்டுறவுக்கொள்கைகளுக்கு ஊறு விளைவிக்கின்ற ஊழல் மற்றும் முறைகேடுகளைக் களைந்து கூட்டுறவியக்கம் தூய்மைப் படுத்தப்படும்.

- கிராமப்புறங்களில் கடன் வழங்குதல், விவசாயத்துக்குத் தேவையான இடுபொருள் வழங்குதல், மற்றும் துணைத் தொழில்களான மாடு, கோழி, மீன், பன்றி வளர்ப்பு மற்றும் அவசியப்பண்டங்கள் வழங்குதல் போன்ற அனைத்திற்கும் உள்ள தொடர்பினை வலுப்படுத்தி, முழுமையான முன்னேற்றம் ஏற்படுத்தும் வகையில் தன்னிறைவுள்ள ஒருங்கிணைந்த கூட்டுறவு முறையை அமைக்க வேண்டும்.

- உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்குமிடையில் ஆதாயமுள்ள சிக்கனமான இணைப்பை அமைக்க கூட்டுறவு மூலம் வேளாண்மை அடிப்படையில் அமைந்த பதனிடுதல் மற்றும் தொழில் பிரிவுக்ள் அமைக்கப்படவேண்டும்.

- பொதுவிநியோக முறையை வலுப்படுத்தவும் நுகர்வோர் பாதுகாப்பு அரணாகச் செயல்படவும், விலைவாசிகளைக் கட்டுப்படுத்தும் சாதனமாகவும் நுகர்வோர் கூட்டுறவியக்கம் அமைக்கப்படும்.

- எளிய சாதாரண நடைமுறைகளுடன் கூடிய அமைப்புகளாகத் திறம்பட இயங்க, கூட்டுறவு நிறுவனங்களின் செயல்முறைகள் மேம்படுத்தப்படும்.

- தகுதி மிக்க, பொருத்தமானவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு முறையான பயிற்சியளிக்கும் திட்டத்தின் மூலம், தொழில் நுணுக்கமறிந்த நிர்வாகிகள் உருவாக்கப்படுவார்கள்.



நமது பொருளாதார அமைப்பின் எல்லாத் துறைகளிலும் கூட்டுறவு முறையானது நன்கு பரவியுள்ளது. பொருள்களின் விலை உயர்வுகளைக் கட்டுப்படுத்திப் பொது மக்களுக்கு நேர்மையான விலையில் அவர்களின் அவசியத் தேவைகளை வழங்கி உதவும் சிறந்த பணியைக் கூட்டுறவு நிலையங்கள் செவ்வனே நிறைவேற்றி வைக்க முடியும். சிறப்பான வகையில் அவைகளின் அமைப்பு இயங்குவதன் மூலம்தான் இயக்கம் இந்த உயர்ந்த குறிக்கோளை அடைய முடியும். கூட்டுறவுத் துறையானது பலம் பெற்று நல்ல வளம் பெற யாவரும் பாடுபடுவோமாக!

—பேரறிஞர் அண்ணா



# குடும்ப நலமும் கூட்டுறவும்

தமிழ்நாட்டில் கூட்டுறவு இயக்கம் குக்கிராமங்களுக்கும் பரந்து விரிந்து, பல்லாயிரக் கணக்கான மக்களுடன் தொடர்பு கொண்டுள்ளது. இவ்வியக்கம் தன் உறுப்பினர் குடும்பங்களின் பொருளாதார முன்னேற்றத்திலும் சமூக நலத்திலும் பெரும் அக்கறை கொண்டுள்ளது. ஆகவே, குடும்ப நலத்திட்டங்களை நிறைவேற்றுவதிலும் கூட்டுறவு இயக்கம் தன் பங்கை வகித்து வருகிறது. இதைத் தீவிரப்படுத்தும் பொருட்டு கீழ்க்கண்ட வகைகளில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன :-

குடும்பக்கட்டுப்பாட்டு முறைகளைப்பற்றிப் பிரச்சாரம் செய்தல், தாய்மார்கள் மற்றும் குழந்தைகளின் உடல் நலம் பேணும் பணிகளை மேற்கொள்ளுதல், தடுப்பு ஊசி போடும் முகாம்களை அமைத்தல்.

குடும்பக் கட்டுப்பாட்டுக்குத் தேவையான 'நிரோத்' போன்றவற்றைக் கூட்டுறவுச் சங்கங்கள் விநியோகித்தல். கூட்டுறவு சஞ்சிகைகளில் குடும்ப நலம் பற்றிய செய்திகள் தொடர்ந்து இடம் பெறுதல்.

மூன்று அல்லது அதற்குக் குறைவான குழந்தைகளையுடைய தம் பணியாளர் யாரேனும் குடும்ப நல அறுவை சிகிச்சை செய்து கொண்டால், அப்பணியாளருக்குக் கூட்டுறவுச் சங்கம் ஓர் ஆண்டு உயர் வூதியத்தை அளித்தல்.

# கூட்டுறவுக் கொடி

கடைசி அட்டையில் வெளியாகியுள்ள படம் கூட்டுறவுக் கொடியாகும். கூட்டுறவுக் கொடியில் வண்ணங்கள் ஏழும் ஊதா (Violet), கரு நீலம் (Indigo), நீலம் (Blue), பச்சை (Green), மஞ்சள் (Yellow), ஆரஞ்சு (Orange), சிகப்பு (Red) என்ற வரிசையில் கீழிருந்து மேலாக நிறங்கள் சரிமட்டமாக அமைந்துள்ளன.

1895-ஆம் ஆண்டில் உலகெங்கும் உள்ள கூட்டுறவு நிறுவனங்களுக்காக இலண்டன் மாநகரில் அனைத்து நாட்டுக் கூட்டுறவு நிலையம் அமைக்கப்பட்டது. அடுத்த ஆண்டில் 1896-ல் பிரான்சு நாட்டைச் சேர்ந்த எப்ஃபேர்னாடார்ட் என்னும் கூட்டுறவாளர், அனைத்து நாட்டுக் கூட்டுறவு நிலையத்திற்கு ஒரு கொடி அமைக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். ஆனால், அவருடைய கருத்து பல ஆண்டுகளாக முற்றுப் பெறாமல் இருந்தது. 1923-ல் 'ஜெண்ட்' எனும் இடத்தில் நடைபெற்ற அனைத்து நாட்டுக் கூட்டுறவு நிறுவனத்தின் செயற்குழுவில் ஒரு கொடியை அமைக்க வேண்டும் என்று ஒருமனதாக முடிவெடுத்தார்கள்.

தன்னிச்சையாய் ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுக்கும் உணர்வின் அடிப்படையில் ஏற்பட்டுள்ள கூட்டுறவு முயற்சியின் அறிகுறியாக அமையும் கொடி எவ்வாறு இருக்க வேண்டும் என்ற பிரச்சினை எழுந்தது. பிரஞ்சு நாட்டுக் கூட்டுறவாளர் சொன்னார் :

''அனைத்து நாட்டுக் கூட்டுறவு நிறுவனம் வானவில்லின் ஏழு வண்ணங்களைக் கொண்டதொரு கொடியை அமைத்துக் கொள்ளுதல் பொருத்தமானது. கொடியில் கழுகு, சிங்கம், புலி முதலிய வன விலங்குகளுக்குப் பதிலாக நாகரிக முன்னேற்றத்தை விளக்கக் கூடிய கரங்கள் இரண்டு கொண்ட சின்னம் பொறிக்கப் பெறல் வேண்டும்''.

வானவில்லின் பின்னால் ஒரு தங்கப் புதையல் உள்ளது என்பதாக மேலை நாட்டுப் பழங்கதை ஒன்று உண்டு. இது வெறும் கட்டுக் கதையே ஆயினும், வானவில்லின் தோற்றம் அனைவருக்கும் உற்சாகத்தையும் நம்பிக்கையும் தரும் நிகழ்ச்சி என்பதை யாரும் மறுக்கமுடியாது. ஆகவே, வானவில்லின் அமைப்பு, கூட்டுறவு இயக்கத்தின் கொடியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டது.



# நம்பிக்கை விடியல் கீதம்



ஏழையரின் இதய வானில் ஒளி
ஏற்றி வைத்த சூரியன் நீ!
வாழையென வைத்திழந்தும் நானும்
வளர் பிறை தான்; சந்திரன் நீ!
காளையரின் வழிப்பயணம்; திசை
காட்டுவதால் துருவ விண் மீன்!
நாளையவர் வாழ்வினுக்கோர் நல்ல
நாள்; நம்பிக்கை விடியல் கீதம்!

விதைத்தவன்; அறுத்துச் சேர்த்தே
விளைச்சலால் உள்ளம் சோர்ந்தோன்
சிதைத்திடும் கடனின் பின்னல்
சிக்கலைத் தீர்த்தாய் வாழி!
கதைப்பவர் கதைத்துப் பார்த்தார்;
கலகமும் மூட்டிப் பார்த்தார்!
நினைத்ததை முடிப்பவன் நீ! பெரு
நெருப்பினைச் சருகா மூடும்?

நடை பயிலக் காலிரண்டு, உலகை
நலம் பார்க்கக் கண்ணிரண்டு!
உடை கூட அணிகையிலே இரண்டு;
உழைப்பதற்கோ கையிரண்டு!
தடையெதற்கு சைக்கிளிலே இருவருக்கு?
தகக வழிப் பயணமன்றோ ஏழையர்க்கு?
விடை யெதற்கு? கேள்விக்கே; ஆட்சி
வினாக்குறிகள் நிமிர்வதற்கே!...

குளிருக்குப் போர்வை யானாய், விழி
குருடர்க்குப் பார்வை யானாய்!
நலிவிற்குச் செல்வ மானாய்; இந்
நாட்டிற்கே முதல்வனானாய்!
பொலிவுக்குப் புதையலானாய்; உயர்
புரட்சிக்கோ தலைவனானாய்!
அழிவிற்கோர் ஆக்கமானாய்; நல்
ஆட்சிக்கோ வாழி! வாழி!....

—கவிஞர் முத்துராமலிங்கம்—

சாகாவரம் பெற்ற கதைகள்:

# சிரிக்கவில்லை

## — கு. அழகிரிசாமி

மத்தியானம் இரண்டு மணி இருக்கும். ராஜாராமன் வீட்டுக்குள்ளே தனியாகப் படுத்துக் கொண்டிருந்தான். பன்னிரண்டு மணிக்குப் படுத்தவனாதலால் இரண்டு மணிக்கெல்லாம் தூக்கம் கலைந்துவிட்டது. நன்றாகத் தூங்கிய பிறகும், ஒரு பத்துப் பதினைந்து நிமிஷம் தூக்கமும் இல்லாமல் விழிப்பும் இல்லாமல் படுக்கையிலேயேபடுத்துக்கொண்டிருப்பது ஒரு சுகமான அனுபவம். அவனுடைய தாயார் எப்போதும் இரண்டு மணிக்கெல்லாம் காப்பி போட்டு வைத்திருப்பாள். அன்று அவளைக் காணவில்லை. ஆகவே விழித்துப் பார்த்ததும் சிறிது நேரத்தில் கண்களை இலேசாக மூடிக்கொண்டு பழையபடியும் படுத்துக் கொண்டான். மறுபடியும் தூக்கம் புது அத்தியாயத்தை ஆரம்பித்தது. இப்போது முக்கால் வாசித் தூக்கம் என்று கூடச் சொல்லிவிடலாம். அந்தச் சந்தர்ப்பத்தில் வாசலில் வெயிலுக்கு மறைவாகக் கட்டியிருந்த படுதாவில் ஒரு நிழல் தெரிந்தது. அம்மாதான் வருகிறாள் என்று நினைத்துக் கொண்டு அக்கறையில்லாமல் திரும்பிப் படுத்துக் கொண்டான். ஒரு நிமிஷம் கழிந்தது, இரண்டு நிமிஷம் கழிந்தது, ஐந்து நிமிஷம்கூட ஆனது. அம்மா வரவில்லை.

அப்படியானால் 'யார் அது?' என்று எட்டிப் பார்த்தான் ராஜாராமன். நிழலை இப்போது காணவில்லை. உடனே எழுந்தான். வாசலில் திரையை விலக்கிக் கொண்டு பார்த்தான். வெளியே யாரையும் காணவில்லை. வெயில்தான் தகித்துக் கொண்டிருந்தது. தூங்கி விழித்த அவன் கண்கள் கூசின; நெருப்பாக எரிந்தன. வெயில் கொடுமை, கண் எரிச்சல். தாயார் காப்பி போடாமல் எங்கோ போய்விட்டது, வாசலில் வந்து எட்டிப் பார்த்து விட்டுப் போன ஆள் இன்னாரென்று தெரியாமல் போனது-எல்லாம் சேர்ந்து அவனுக்கு எரிச்சலை உண்டாக்கிவிட்டன! கண்ணைக் கசக்கிக் கொண்டே வந்து குப்புறப்படுத்துவிட்டான். அந்தச் சந்தர்ப்பத்தில் தலையணையில் நெற்றியைத் தேய்த்துக்கொள்ளுவது மிகவும் சுகமாக இருந்தது. சாணையிலே கத்தியைத் தீட்டுவது போலத் தலையை இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் இழுத்து நெற்றியைத் தேய்த்துக் கொண்டே இருந்தான். கொஞ்ச நேரத்தில் பழையபடியும் தூக்கம் வந்துவிட்டது. பாவம்! இரவெல்லாம் விழித்திருந்த அலுப்பு! குழந்தையைப் போல நிமிஷத்துக்கு ஒரு தூக்கம் தூங்கிக் கொண்டிருந்தான். பழையபடியும் படுதாவில் நிழல் தெரிந்தது. படுதாவில் உள்ள ஒரு சிறு துவாரத்தின் வழியே அந்த நிழலின் கண் எட்டிப் பார்த்தது. கண் மட்டும் நிழலில்லை. உண்மையான கண்தான். பிறகு கொஞ்ச நேரத்தில் அந்த நிழல் பதினாறு வயதுப் பெண்ணாக மாறி வீட்டுக்குள்ளேயே வந்துவிட்டது.

குப்புறப்படுத்துக்கொண்டிருந்த ராஜாராமனுடைய சட்டை போடாத முதுகையும், பிடரியின் மடிப்புகளையும் திரண்டு உருண்ட புஜங்களையும் பார்த்துக்கொண்டே நின்றது நிழல் - அதாவது அந்தப் பெண். பிறகு, அங்கே ஜன்னலிலிருந்த கண்ணாடியை எடுத்து நேராக நிமிர்த்தி வைத்துப் பக்கத்தில் கிடந்த ஒரு புதுச் சீப்பினால் தன் தலையைப் பட்டும் படாமல் இலேசாக இழுத்துக்கொண்டாள். தலை ஏற்கெனவே வாரப்பட்டிருந்தது.

அந்தக் கண்ணாடி ஒரு பொய்க்கால் குதிரை. அதன் பின்னால் அதைத் தாங்கிக் கொண்டிருக்கும் இரும்பு வளையம் காற்றடித்தாலும் 'டப்' பென்று படுத்துக் கொள்ளும். அப்படியிருக்க சீப்பு பலமாகத் தட்டியதைப் பொறுக்குமா? கண்ணாடி திடீரென்று எதிர்பாராதவிதமாகச் சாய்ந்துவிட்டது; 'டபார்' என்று சப்தமும் கேட்டது.

இவ்வளவு நேரமும் மட்டித் தூக்கம் தூங்கிய ராஜாராமன் சப்தத்தைக் கேட்டதும் 'பளிச்' சென்று திரும்பிப் பார்த்தான்.

பாப்பம்மாள் பரக்கப் பரக்க விழித்துக்கொண்டு நின்றாள். ஒன்றுமே ஓடவில்லை. இலேசாகச் சிரிப்போமா என்றுகூட முயற்சி செய்தாள். சிரிப்பு வரவில்லை.

ராஜாராமனோ, ''என்ன சப்தம்?'' என்று கேட்கவில்லை.

''எப்போ வந்தே?'' என்றுதான் இனிமையாகக் கேட்டான்.

தான் கண்ணாடியைத் தாராளமாக எடுத்து உபயோகப்படுத்திய குற்றத்தைக் கண்டு, ''என்ன சப்தம்?'' என்று அவன் கேட்டால் சிரித்து மழுப்பிட நினைத்தாள். ராஜாராமன் இந்தக் குற்றத்தைப் பொருட்படுத்தாமல், வேறு கேள்வியைப் போட்டதனால் பாப்பம்மாள் சிரிப்பதற்கு அவசியம் நேரவில்லை. உடனே அப்பாவிப் பெண் போல முகத்தை வைத்துக் கொண்டு, ''இப்பத்தான் வந்தேன்'' என்றாள்.

''என்ன விஷயம்''?

சும்மா வந்தேன்'' என்றாள் பாப்பம்மாள்.

''எப்பக் கேட்டாலும் 'சும்மா' தானா?''

ராஜாராமன் சிரித்தான். பாப்பம்மாள் சிரிக்கவில்லை. அவசியம் இல்லாமலே, ''நான் வீட்டுக்குப் போகிறேன்'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள்.

''பாப்பம்மா'' என்று உரத்த குரலில், ஆனால் ரகசியம் போலக் கூப்பிட்டான் ராஜாராமன்.

அவள், ''நான் போகிறேன்'' என்று சொல்லிவிட்டுப் போய் விட்டாள்.



## கு. அழகிரிசாமி

தமிழ் மறுமலர்ச்சி எழுத்தாளர்களில் முன் வரிசையில் வைத்து மதிக்கப்பட வேண்டியவர் காலஞ் சென்ற அமரர் கு. அழகிரிசாமி அவர்கள். அழியாத பல இலக்கியச் செல்வங்களை நமக்கு விட்டுச் சென்றுள்ளார் அவர். அவருடைய 'அன்பளிப்பு' என்ற நூலுக்குச் சாகித்ய அகாதமிப் பரிசும், 'கவிச்சக்கரவர்த்தி' என்ற நூலுக்குத் தமிழ்நாடு அரசின் பரிசும் கிடைத்துள்ளன. அவருடைய சிறுகதைத் தொகுதிகள், ஒன்பதுக்கு மேல் வெளிவந்துள்ளன. அவருடைய கதைகள் கருத்தாழம் கொண்டவை; சிந்தனையைத் தூண்டுபவையாகும்.

கு. அழகிரிசாமியின் சிறந்த சிறுகதைகளில் ஒன்றான, ''சிரிக்கவில்லை'' என்ற கதையை இவ்விதழில் வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

பாப்பம்மாள் இப்படித் தினமும் நாலு தடவை ராஜாராமன் வீட்டுக்குச் 'சும்மா' வருவாள். ராஜாராமன் வீட்டிலிருந்தாலும் இல்லாவிட்டாலும், அவனுடைய தாயார் சமையல் செய்யும் போது மிகவும் அக்கறையாக உட்கார்ந்து அவளுக்கு ஒத்தாசை செய்வாள்! அவள் சொல்லாமலே பாப்பம்மாள் காய்கறிகளை எடுத்து நறுக்கத் தொடங்கி விடுவாள். வீட்டிலே இருப்பது ராஜாராமனும் அவனுடைய தாயாருமாக மொத்தம் இரண்டு உருப்படிகள்தான். பாப்பம்மாளோ ஒரு கல்யாணத்திற்குக் காய்கறிகளை நறுக்குவது போல வீட்டில் வாங்கி வைத்த காய்கறிகளையெல்லாம் நறுக்கி அம்பாரமாகக் குவித்து வைத்து விடுவாள். இதைப் பார்த்ததும் ராஜாராமனுடைய தாயார் ஓடி வந்து,

''என்ன வேலை இது பாப்பம்மா! சும்மாயிரு இண்ணாலும் இருக்கயா? இவ்வளவையும் ஒரேயடியாக நறுக்கச் சொன்னது யாரு? எந்திரி, நல்ல வேலை செய்தே, பொம்பிளை!'' என்று அங்கலாய்ப்பாள்.

மிகவும் மனவருத்தத்துடன் முகத்தைக் கோணவைத்துக் கொண்டு எழுந்திருப்பாள் பாப்பம்மாள். அப்படியே தன் வீட்டுக்குப் போய்விடமாட்டாள். எழுந்து இப்படியும் அப்படியும் உலாத்திவிட்டு, புழக்கடையிலே கொடியில் காய்ந்து கொண்டிருக்கும் ராஜாராமனுடைய வேஷ்டி, சட்டைகளை எடுத்துக் கொண்டு வந்து வீட்டுக்குள்ளே போடுவாள். இதைப் பார்த்தால் ராஜாராமனுடைய தாயாருக்குக் குலை நடுக்கம் எடுத்துவிடும்.

''இதென்னடா அநியாயமாயிருக்கு! பார்க்கிறவங்களுக்கு இது எப்படி இருக்கும்? வீட்டுக்கு வந்த மருமக மாதிரி, இப்படி வேட்டி சட்டையைத் தூக்கிட்டு அலையறா இந்தப் பொண்ணு'' என்று சத்தம் போட்டுச் சொல்லி விட்டு, ''அம்மா! பாப்பம்மா, 'ஒண்ணைத்தானே' ஒங்க அம்மா கூப்பிடறாளாம், போய் என்னான்னு கேளு!'' என்று ஒரு பொய்யைச் சொல்லி அனுப்புவாள்.

பாப்பம்மாள் போகும்போது வழக்கம்போலவே ''நான் வீட்டுக்குப் போகிறேன்'' என்று யாரையும் எதிர்பாராமல் தனக்குத்தானே சொல்லிக்கொண்டு போய்விடுவாள்.

ராஜாராமனுக்கு ரயிலில் புக்கிங் கிளார்க் வேலை; இந்த ஊருக்கு மாற்றிவந்து ஒரு வருஷமாகிறது. இந்த ஊர் ஒரு குட்டி டவுன். அங்கே ஹோட்டல் சாப்பாடு பிடிக்காமல் தன் தாயாரை ஊரிலிருந்து அழைத்துக் கொண்டு வந்து விட்டான். ஸ்டேஷனுக்குஅருகாமையிலேயே சுமார் ஒரு பர்லாங்கு தூரத்தில் ரயில்வே உத்தியோகஸ்தர்களின் வீட்டு வரிசை இருக்கிறது. அந்த வரிசையில் இரண்டாவது வீடுதான் ராஜாராமன் வீடு. அந்த ரயில்வேக் கம்பெனி வீடுகளுக்கு அடுத்தாற்போல ஓர் ஏழெட்டு வீடுகள் இருக்கின்றன. அந்த வீடுகளில் ஒரு வீட்டைச் சேர்ந்தவள் பாப்பம்மாள். அவளுடைய அப்பாவுக்கு ஒரு பலசரக்குக்கடையில் கணக்குவேலை. அந்தக் கிழவரை ஞாயிற்றுக்கிழமை தவிர மற்ற நாட்களில் வீட்டில் பார்க்க முடியாது. சாப்பாட்டு நேரம் போக மீதி நேரமெல்லாம் கடையில் தான் பெட்டியடியில் கிடப்பார். ஆகவே வீட்டில் பாப்பம்மாளும் அவளுடைய தாயாரும்தான் இருப்பார்கள். நாளெல்லாம் வீட்டிலேயே இருப்பது பாப்பம்மாளுக்குச் சங்கடமாக இருக்கும். அதனால் பக்கத்து வீட்டுப் பெண் ஒருத்தியோடு போய்ப் பல்லாங்குழி விளையாடிக் கொண்டிருப்பாள். அந்தப் பக்கத்து வீட்டுப் பெண், போன மாதம் கல்யாணமாகிப் புருஷன் வீட்டுக்குப் போய்விட்டாள். அதனால், பாப்பம்மாள் இப்போது ராஜாராமன் வீட்டுக்கு முன்போல ஏகதேசமாக வராமல் ஓயாமல் வந்து கொண்டிருந்தாள்; வரும்போதெல்லாம் 'சும்மா' தான் வருவது!

ராஜாராமனுக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லை. நல்ல வாட்ட சாட்டமான உடம்பு. மா நிறமானாலும் பூசி மெழுகி விட்டது போன்ற பளபளப்பான மேனி. கண்களில் ஈரம் படிந்து குளு குளு என்றிருக்கும். ஒரு வார்த்தை பேசுவதென்றால் ஆயி

ரம் பொன் கேட்கும் அடக்க மான பேர்வழி. எடுத்ததற் கெல்லாம் சிரிப்பான்; ஆனால் வாய்விட்டுச் சிரிக்கமாட்டான்.

சோம்பேறித்தனம் அவனுக்கு ஒரு சுகபோகம். அதிலும் இப் போது ரயில்வேயில் வேலை யான பிறகு, ஒரு வாரம் ராத் திரி வேலையும் ஒரு வாரம் பகல் வேலையுமாகப் போய்விட் டதனால், ராத்திரி வேலை நாட்களில் பகலெல்லாம் உறங்கு வான். பகல் வேலை நாட் களிலோ இரவில் உறங்குவ தோடு நின்றுவிடுவது கிடையாது. பகலிலும் தூக்கம் வரும். எப் படிப்பட்ட காரியத்துக்குச் சந் தர்ப்பம் கிடைத்தாலும், அந்தச் சந்தர்ப்பத்தைத் தூங்குவதற்குத் தான் பயன்படுத்துவான். பக லிலும் இரவிலும் கண்கள் சொரு கிப்போய் ஒரு மயக்க நிலையி லேயே இருப்பான். அப்படி இருப்பதில் ஒரு கவர்ச்சி இருக் கும். சிலர் எப்படி இருந்த போதிலும் கூடக் கவர்ச்சி மட் டும் அவர்களை விட்டுப் போகா மலே இருந்து விடுகிறது அல்லவா?

பாப்பம்மாள் கண்ணாடியைக் கீழே தள்ளிய நாள் போய் சுமார் பத்து, பதினைந்து நாட்கள் ஆகி யிருக்கும். நடுவிலே ஏதோ ஒரு நாள் ராஜாராமனுடைய தாயார் —அந்தப் பெரியம்மாள்—அரிக் கன் லாந்தரின் மூடியைக் கழற்ற முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாள். அப்போது ராஜாராமனும் வீட்டில் இல்லை. சந்தர்ப்ப வசமாக வந்த பாப் பம்மாள், தான் கழற்றுவதாகச் சொன்னாள். பெரியம்மாளுக் கோ லாந்தரைக் கொடுக்க இஷ்ட மில்லை; ஆனால் பிடிவாதம் பிடித்துக்கொண்டு பாப்பம்மாள், பெரியம்மாள் கையிலிருந்த லாந்தரைப் பிடித்து இழுத்தாள். உடனே அவள் சிமினியைப் பத் திரமாகக் கழற்றிக் கொண்டு லாந்தரைப் பாப்பம்மாள் கை யில் கொடுத்தாள். அதை வாங்கி, பல்லைக் கடித்துக் கொண்டு மூடியைக் கழற்ற முயன் றாள். முடியவில்லை. உடனே தன் சேலை முந்தியை விரலில் சுற்றிக்கொண்டு திருகினாள். எவ்வளவோ நேரம் கழித்து, மூடி 'படார்' என்று திறந்தது. ஆனால் திறந்ததோடு விவகாரம் நின்றுவிட வில்லை. லாந்தரில் கொஞ்ச நஞ்சம் இருந்த மண்ணெண்ணெய் இருவர் மேலும் தெறித்து, பக்கத்தில் கிடந்த பாயிலும் கொட்டி விட்டது.

''அப்போதே சொன்னேன், கேட்டயா? கொண்டா கொண் டான்னு லாந்தரைப் பிடுங்கிக் கிட்டே!'' என்று எப்போதும் இல்லாதவாறு மிகவும் அதிக மாகக் கோபித்துக் கொண்டாள் பெரியம்மா.

பாப்பம்மாள் மிகவும் பயந்து போனாள். அன்றுமுதல் அவள் ராஜாராமன் வீட்டுக்குச் சரி யாக வருவதே இல்லை. அந்தத் தெரு வழியாக மட்டும் பத்துத் தடவை போய்வருவாள். வாசலில் ஈஸிச் சேரில் படுத்துக்கொண்டு பேப்பர் படிக்கும் ராஜாராமனை போகும்போது ஒரு தடவையும் வரும்போது ஒரு தடவையுமாகக் கடைக் கண்ணால் பார்ப்பாள். ராஜாராமன் சிரித்தால் சிரிப்



பாள். இல்லாவிட்டால், புருவத்தை இடுக்கிக்கொண்டு, முகத்தையும் 'உம்'மென்று வைத்துக் கொண்டு போய்விடுவாள்.

ஒருநாள் பாப்பம்மாளுக்கு ஒரே சந்தோஷம் வந்துவிட்டது. அவள் வீட்டில் பசு, கன்று போட்டுவிட்டது. இந்த 'அதிசயமான' செய்தியைச் சொல்லுவதற்கு ராஜாராமன் வீட்டுக்கு ஓடோடியும் வந்தாள். ராஜாராமன் வாசலில் உட்கார்ந்திருந்தான். அதை அவள் லட்சியம் பண்ணவே இல்லை. விறு விறு என்று வீட்டுக்குள்ளே போய், வேர்த்து விறு விறுக்க பசு கன்று போட்ட செய்தியைச் சொன்னாள். இது வெளியிலிருந்த ராஜாராமனுக்குத் தெளிவாகக் கேட்டது. உடனே ஜன்னல் வழியாக உள்ளே திரும்பி, ''கன்னுக்குட்டிக்குக் கொம்பு ரெண்டா, நாலா?'' என்று கேட்டான்.

''ஆமா. எட்டிருக்கும் ஒங்க காலத்திலே!''

''அப்படியானால் ரெண்டு கொம்புதானா? அடேடே, இதுக்குத்தானா இப்படி ஓடிவரணும்?''

பெரியம்மாள் சிரித்தாள். பாப்பம்மாள் வேகமாக வெளியில் வந்து ராஜாராமனுக்கு எதிரே நின்று கொண்டாள். ஆள் வந்ததும் ராஜாராமனுடைய ஹாஸ்யம் காற்றில் பறந்துவிட்டது. பேசாமல் தலை குனிந்து கொண்டான்.

''ஒங்களுக்கு இனிமேல் பால் கொண்டு வரட்டுமா? இந்தா பாருங்கோ'' என்று ராஜாராமனின் குனிந்த தலையை வாய்ச் சொல்லாலேயே நிமிர்த்த முயன்றாள் 'பாப்பம்மாள்.

ராஜாராமன் ஒன்றும் சொல்லவில்லை. ஆகவே, பழையபடியும் ''பால் வேண்டாமா? உம்?'' என்று ரகசியம்போல் 'குசு குசு'வென்று சொன்னாள். எந்த விஷயத்தையும் ரகசியம் போலச் சொன்னால், அதில் ஒரு கவர்ச்சி ஏற்பட்டு விடும். ராஜாராமனுக்குப் பாப்பம்மாள் பேசப் பேச மிகவும் சுகமாக இருந்தது.

''ம் ம். பால் கொண்டு வா.''

''சரி, நான் வீட்டுக்குப் போகிறேன்'' என்று புறப்பட்டாள் பாப்பம்மாள்.

''இந்தா, இன்னிக்குக் கொண்டு வந்துடாதே! நாலு நாள் போகட்டும்'' என்று அவன் எச்சரித்தான். அவன் சொன்னதைப் பாப்பம்மாள் கேட்டாளோ இல்லையோ?

மறுவாரம் ராஜாராமனுக்குப் பகல் வேலை. காலையில் கொஞ்ச நேரமும் அப்புறம் சாப்பாட்டுக்காக வரும் நேரமும் தவிர, மீதி நேரமெல்லாம் அவனுக்கு ஆபீசில் வேலை இருந்தது. அதனால் அந்த வாரத்தில் பாப்பம்மாள் வந்து போனது ராஜாராமனுக்குத் தெரியாது. பால் மட்டும் வீட்டுக்கு ஒழுங்காக வந்து கொண்டிருக்கிறது என்பதைத்தெரிந்துகொண்டான்.

அதற்கு அடுத்த வாரம், இரவு வேலை வந்தது. பகலில், பாயும் படுக்கையுமாகத் தான் வழக்கம் போல வீட்டோடு கிடந்தான் ராஜாராமன். சாயங்காலக் காப்பிக்காகச் சுமார் நாலரை மணிக்கெல்லாம் பால் கொண்டு வந்துவிடுவாள் பாப்பம்மாள். ராஜாராமனுடைய தாயார், மத்தியானம் இரண்டு மணிக்கு வீட்டு வேலையை ஒதுங்க வைத்து விட்டு வெளியே போனால், அப்புறம் திரும்பிவர மணி ஐந்தாகிவிடும். எங்காவது பக்கத்து வீட்டுப் பெண்களுடன் போய்ப் பேசிக் கொண்டிருப்பாள். இந்த நித்திய நியதி ராஜாராமனுக்குத் தெரியும்; பாப்பம்மாளுக்கும் தெரியும். அதனால்தான் அவள் நாலரைக்குப்பதிலாக நாலுமணிக்கே பால் கொண்டு வரத் தொடங்கினாள். பாலை ஜன்னலில் வைத்துவிட்டு வந்து, ராஜாராமன் தூங்கிவிட்டானா என்று எட்டிப் பார்த்தாள். அவன் முன்பெல்லாம் இந்த நேரத்துக்குத் தான் தூங்கச் செல்வான்; இப்போதோ தூங்குவதெல்லாம் வெறும் பாசாங்கு!

ஒருநாள் நாலு மணிக்குப் பாப்பம்மாள் வந்தாள். அன்று அவள் புதுப் புடவை கட்டிக்கொண்டு புது ரவிக்கையும் போட்டுக்கொண்டு வந்தாள். புடவை அலங்காரத்திற்குப் பொருத்தமாக முகத்தைக் கழுவி சாந்துப் பொட்டு வைத்துக்கொண்டு, தலையிலே பூவும் முடித்துக் கொண்டு வந்து விட்டாள். அன்று அவளுக்கு ஒரே குதூகலம்.

ராஜாராமன் பொய்த் தூக்கத்தில் குறட்டைவிட்டுக் கொண்டிருந்தான். கொஞ்ச நேரத்தில் அவன் தானாகவே எழுந்து விடுவது வழக்கம். அன்று அவன் விழிக்கும் வரையிலும் பாப்பம்மாள் சும்மா இருக்கவில்லை, கண்ணாடியை எடுத்துப் பார்த்தாள். சீப்பு இருந்தால் இன்னும் கொஞ்சம் படிய வாரிக் கொள்ளலாம் போல இருந்தது. சீப்பைக் காணவில்லை. 'சரி, காணோம்; எங்கே இருக்கோ?' என்று மனத்துக்குள்ளேயே சொல்லிக் கொண்டாள்.

ராஜாராமனை எழுப்ப வேண்டும் என்று அவளுக்குத் தோன்றியது. எப்படி எழுப்புவது? அவனுடைய தாயார் ''ராசா'' என்று அவனை அழைப்பது வழக்கம். பாப்பம்மாள் கொஞ்சம் யோசித்தாள். அப்புறம் தூங்குகிறவனுக்குக் கேட்கவா போகிறது என்று நினைத்து, விளையாட்டாக 'ராசா' என்றாள்.

''ராசா'' என்று கொஞ்ச உரக்கச் சொன்னாள். அதுவும் விளையாட்டாகவும் ரகசியம் போலவும் இருந்தது.

ராஜாராமனுக்குச் சிரிப்பு வந்தது, அடக்கிக் கொண்டான்.

சிறிது நேரம் கழிந்தது.



நிமிர்ந்து நின்று கொண்டு, புத்தகத்தைப் பார்த்துப் படிப்பது போல, குரலில் ஏற்ற இறக்கமின்றி ''ஏ, ராசா'' வென்று மூன்று தடவை சொன்னாள்.

ராஜாராமனால் சிரிப்பை அடக்க முடியவில்லை. எழுந்து நின்று இலேசாகத் தலைகுனிந்து கொண்டு, கண்களை மேல் நோக்கித் திரும்பிப் பாப்பம்மாளைப் பார்த்தான். தன் கீழுதட்டைக் கடித்தான். கீழுதடு நனைந்து பளபளத்தது. சீப்பால் தலையைக் கோதுவது போல, பல்லால் நாலு தடவை மாறிமாறிக் கீழுதட்டைக் கோதிக்கொடுத்தான். 'பளிச்' சென்று பாப்பம்மாளின் கையைப் பிடித்துவிட்டான். 'அவள் கையைப் பிடிப்போம்' என்று அவன் எழுந்து நிற்கும் வரையிலும் நினைத்தது கிடையாது.

பாப்பம்மாள் ராஜாராமனின் புஜங்களிடையில் சிக்கினாள். அவன் அவளுடைய முகத்தைத் தன் முகத்துக்கு நேராகத் திருப்பினான்; அவளுடைய கண்களை ஒரு நிமிஷம் கூர்ந்து பார்த்தான். திடீரென்று அவளை முத்தமிட்டு விட்டான்.

ராஜாராமனுக்கு, முத்தத்தில் சுகானுபவம் பொதிந்திருந்தது. பாப்பம்மாளுக்கோ முத்தம் குஷியாகத்தான் இருந்தது. அவளைப் பொறுத்தமட்டிலும் முத்தத்திற்காகத் தான் முத்தம்; வேறு எதற்காகவும் அல்ல!

சந்தர்ப்பங்கள் மாறின. பாப்பம்மாள் வெளியே வந்தாள். 'வெளியே சொல்லக்கூடாது' என்ற ஜாக்கிரதைதான் பாப்பம்மாளுக்கு இருந்ததே ஒழிய, முத்தத்தில் தன்னை மறந்த உணர்ச்சியோ, பெரிய பயமோ ஏற்படாது போய்விட்டன.

எதிர்பாராதவிதமாக வீட்டுக்குள்ளே வந்த ராஜாராமனின் தாயாரிடம் பாப்பம்மாள் கொஞ்சங்கூடக் கல்மிஷம் இல்லாமல், ''பால் கொண்டுவந்து வச்சுட்டேன்'' என்று சொல்லிவிட்டு வாசல் படியில் காலெடுத்து வைத்தாள். அப்புறம் தெருவில் இறங்கிப் போகும்போது அவள் தனக்குத் தானே ''நான் வீட்டுக்குப் போறேன்'' என்று சொல்லிக் கொண்டாள்.

அது நிலாக்காலம். அன்றிரவு பாப்பம்மாள் ஜன்னலோரத்தில் கட்டிலைப் போட்டுப் படுத்துக் கொண்டாள். ஜன்னல் கம்பி சந்திரனின் மத்திய பாகத்தில் விழும்படியாக முகத்தைத் தள்ளி வைத்துக் கொண்டாள். இரண்டு



கண்களையும் குவித்து ஜன்னல் கம்பியைப் பார்த்தாள். ஆகாயத்தில் இரண்டு சந்திரன்கள் இருப்பது போல் தோன்றியது. பளிச்சென்று வானத்தை ஏறிட்டுப் பார்த்தாலோ ஒரே சந்திரன் தான். சந்திரனை இரண்டாக்குவதும் பழையபடியும் ஒன்றாக்குவதுமாகப் படுத்துக் கொண்டிருந்தாள் பாப்பம்மாள். அப்போது அவளுக்கு எதிர்பாராத விதமாக உறக்கம் வந்துவிட்டது. 'சரி தூங்கணும்' என்று திரும்பிப் படுத்துக் கொண்டாள். மேலே பார்த்த வாக்கில் வெறும் வெளியை இரண்டு மூன்று தடவை முத்தமிட்டாள். மிகவும் குதூகலமாக இருந்தது அவளுக்கு. 'ரொம்ப நேரமாய் விட்டதே! தூங்கணுமே' என்று ஜாக்கிரதைப் படுத்திக் கொண்டு கண்களை மூடினாள். கொஞ்சநேரத்தில் தூக்கமும் வந்துவிட்டது.

வழக்கம் போலவே அவள் தினமும் பால் கொண்டுவந்து வைத்துக் கொண்டிருந்தாள். மறுவாரம் ராஜாராமனுக்குப் பகல் வேலை, அதனால் அவன் வீட்டிலே இல்லை. பாப்பம்மாளுக்கு அது ஓர் ஏமாற்றமாகவும் இல்லை. 'அவர் இருந்தால் முத்தமிடுவார்' என்று மட்டும் எப்போதோ ஒரு தடவை சொல்லிக் கொண்டாள்.

பத்துப் பதினைந்து நாட்கள் தான் கழிந்திருக்கும். ஒரு நாள் திடீரென்று பாப்பம்மாளுக்குக் காய்ச்சல் வந்தது. சாதாரணக் காய்ச்சலைப் போலத் தான் ஆரம்பத்தில் இருந்தது. பிறகு அந்தக் காய்ச்சலே பலத்துவிட்டது. படுத்த படுக்கையாகிவிட்டாள் பாப்பம்மாள். அவளுடைய தாயார்தான் பால் கொண்டுவர வேண்டியதாய்விட்டது. பாப்பம்மாள் நாளுக்கு நாள் மெலிந்து கொண்டு வருகிறாள் என்றும், சரியாகச் சாப்பிடாமல் இருக்கிறாள் என்றும் அவளுடைய தாய் சொன்னாள்.

ஒரு நாள் பாப்பம்மாளைப் பார்க்கப் போனாள் ராஜாராமனுடைய தாயார். ராஜாராமனுக்கும் போகலாம் என்று ஆசை தான். கொஞ்ச நாட்களுக்கு முன் என்றால் தாராளமாகப் போயிருப்பான். இப்போது அவன் மனத்தில் ஏதோ ஒரு திருட்டு உணர்ச்சி ஊசலாடிக் கொண்டிருந்தது. தான் முத்தமிட்டதன் காரணமாகப் பாப்பம்மாளைப் பார்க்கப் போனால் ஊரார் என்ன நினைப்பார்களோ என்று காரணமில்லாமல் பயம் தட்டுப்பட்டது அவனுக்கு. கடைசியில் அவன் போகவில்லை.

முத்தமிட்ட விஷயம் இன்னும் கொஞ்சம் அழுத்தம் பெறுவதற்கு வேறொரு காரணமும் இருந்தது. அந்தத் தினத்திற்குப் பின் நாலைந்து நாட்களில் ராஜாராமனுக்குக் கல்யாணம் செய்ய ஏற்பாடு செய்துவிட்டார்கள். ஊரிலிருந்து அவனுடைய சிற்றப்பா கடிதம் எழுதியிருந்தார். தகப்பனார் காலமாகிவிட்டதால் சிற்றப்பாதான் தகப்பனார் ஸ்தானத்தில் இருந்து ஒரு பெண்ணை ஏற்பாடு செய்திருந்தார். அந்தப் பெண் ராஜாராமனுக்குத் தெரியும். நல்ல பெண் தான். கட்டிக் கொள்ளவும் இஷ்டம் தான். ஒரு மாதத்துக்குள்ளாகவே கல்யாணத்தை நடத்த ஏற்பாடாகிவிட்டது.

கல்யாணம் ஏற்பாடானதும், பாப்பம்மாள் அந்நியப் பெண் என்றும் யாருக்கோ மனைவியாகப் போகிறவள் என்றும், ராஜாராமனுக்குத் தோன்றியது. ஒரு கன்னிப் பெண்ணை முத்தமிட்டது பிசகு என்றும் அவனுக்குத் தோன்றியது. ஆகவே, பாப்பம்மாள் சம்பந்தப்பட்ட எந்தக் காரியத்தைச் செய்யவும் அவனுக்குக் கொஞ்சம் அச்சம்தான்.

ராஜாராமனுடைய கல்யாண சமாச்சாரம் தெரிந்தது பாப்பம்மாளுக்கு. உடனே அவளுக்குச் சந்தோஷம் வந்து விட்டது. கல்யாண வீட்டின் கோலாகலம் அவள் கண்முன் வந்து நின்றது. கொஞ்ச நேரத்தில் அவளுக்கு வேறொரு அபிப்பிராயமும் தோன்றியது. 'அவரை நான் கல்யாணம் பண்ணிக் கொள்ளட்டுமா!' என்று நினைத்தாள். நினைத்தால் உடனே நடந்துவிடக்கூடிய சர்வ சாதாரணமான காரியமாகத்தான் பாப்பம்மாளுக்குப் பட்டது. ஆனால் அந்த யோசனையும் திடீரென்று மாறிவிட்டது. 'அதெப்படி முடியும்! அவர் வேறே சாதி; நான் வேறே சாதி. கல்யாணம் செய்து கொள்ள முடியாதே' என்று நினைத்துக் கொண்டாள். அப்புறம் 'கல்யாணத்துக்கு நான்

புதுச் சேலை கட்டி, புது ரவிக்கை போட்டுக்கிட்டுப் போகணும். அதுவரைக்கும் அந்தப் புதுச் சேலையையும் ரவிக்கையையும் அழுக்காக்கிறக்கூடாது. என் உடம்பும் அதுக்குள்ளே தாவலையாகிப் போகணும் கடவுளே' என்று கடவுளைக் கும்பிட்டாள்.

ராஜாராமனுடைய சொந்த ஊரிலேயே கல்யாணம் நடந்ததால், புதுப் புடவையும் புது ரவிக்கையும் இருந்தும் பாப்பம்மாள் கல்யாணத்துக்குப் போக முடியவில்லை. உடம்பெல்லாம் குணமாகிப் பழையபடியும் வீட்டிலே நில்லாமல் இங்கும் அங்கும் போய்க் கொண்டிருந்தாள்.

சில தினங்களில் ராஜாராமன் தன் மனைவியோடு உத்தியோக ஸ்தலத்துக்கு வந்து விட்டான். வந்த தினத்தன்று பாப்பம்மாள் வீட்டுக்குப் பலகார பண்டங்களெல்லாம் கொடுத்தனுப்பினாள் பெரியம்மாள்.

பாப்பம்மாள் ராஜாராமன் வீட்டுக்கு வருவதற்கு இடையூறாக இப்போது இரண்டு தடங்கல்கள் இருந்தன; ஒன்று, யாரோ ஒரு புதுப்பெண் வந்துவிட்டது. அவள் இருக்கும்போது பாப்பம்மாளுக்கு அந்த வீட்டில் நடமாடுவது அவ்வளவு உற்சாகமில்லை; தவிரவும் அந்த வீட்டில் தான் செய்த வேலைகளை எல்லாம் அந்தப் புதுப் பெண்ணே செய்து வந்தாள். அங்கேபோய்ச் சும்மா உட்கார்ந்து கொண்டு இருப்பது எப்படி?

அடுத்தபடியாகப் பாப்பம்மாளின் தாயார், ''இனிமேல் நீ அங்கே அடிக்கடி போகக்கூடாது' என்று பாப்பம்மாளிடம் சொன்னாள்.

பாப்பம்மாளுக்குக் கொஞ்சம் கஷ்டமாகவே இருந்தது. ஆனாலும் ஏகதேசமாக நாலைந்து நாட்களுக்கு ஒரு தடவை வந்து ராஜாராமன் மனைவியிடம் பூவோ, ரிப்பனோ வாங்கிக் கொண்டு போவாள். தான் பூ வாங்கினாலும் அவளுக்குக் கொண்டு வந்து கொடுப்பாள். சில நாட்களில் அவனுடைய மனைவியிடம் அவளுக்குப் பிரியம் உண்டாகிவிட்டது. தன் தாயாரிடம் எப்போதும் ராஜாராமன் மனைவியைப் பற்றி ஏதாவது சிலாகித்துச் சொல்லிக் கொண்டிருப்பாள். அவளைப் பற்றிப் பேசாவிட்டால் பாப்பம்மாளுக்கு நெஞ்சு வெடித்துவிடும்.

இப்போது பாப்பம்மாளோ அவளுடைய தாயாரோ யாராவது ஓர் ஆள் பால் கொண்டு வருவது வழக்கம். சில நாட்களில் பசுவின் பால் வற்றிப்போய்விட்டது; கன்றுக்குட்டிக்கே அவ்வளவு பாலையும் விட்டுவிட்டார்கள். பால் விவகாரம் நின்றுவிட்டது.

இப்போது ராஜார்ராமன் வீட்டுக்குப் பாப்பம்மாள் போவதென்றால் பழையபடியும் 'சும்மா' தான் போகவேண்டியதாய் விட்டது. ராஜாராமன் தன் மனைவியைப் பக்கத்தில் வைத்துக்கொண்டே பாப்பம்மாளைப் பார்த்துக் குறும்பாக ஏதாவது சொல்லுவான். புருஷனும் மனைவியும் சிரிப்பார்கள். இது பாப்பம்மாள் மனதுக்குச் சந்தோஷமாக இருக்கும். சில சமயங்களில் ராஜாராமனின் முன்னிலையிலேயே பாப்பம்மாள் அவன் மனைவியை அதட்டுவது உண்டு. 'அப்படிச் செய்யலாமா? இப்படிச் செய்யலாமா' என்று ஏதாவது சொல்லுவாள். ஒருநாள் ராஜாராமனின் வேஷ்டி கொடியிலிருந்து விழுந்து தரையில் கிடந்ததைக் காட்டி, 'இதை எடுத்து வைக்கவில்லையே?' என்று அவனுடைய மனைவியைக் குற்றம் சாட்டுவது போலச் சொன்னாள். பிறகு அவளே போய் எடுத்து வைத்தாள்.

ராஜாராமன் தனக்குள்ளாகவே நினைத்துக் கொண்டான்:

'அவளுக்கில்லாத அக்கறையா பாப்பம்மாளுக்கு? நான் கண்டிப்பதைப் போல அல்லவா பாப்பம்மாள் அவளைக் கண்டிக்கிறாள்! என் விஷயத்தில் எவ்வளவு அக்கறை!'

ஏழெட்டு மாதங்களுக்கு மேலாகிவிட்டன. பாப்பம்மாள் தெருவோடு போகும்போது, நாள்தோறும் ஒன்றுபோல ராஜாராமனைப் பார்த்துச் சிரிப்பதும் அவன் பதிலுக்குச் சிரிப்பதும், ஏகதேசமாக அவனுடைய வீட்டுக்கு வந்து உரிமையுடன் நடந்து கொள்ளுவதும் நிற்கவில்லை. வழக்கம் போல நடந்துகொண்டு தான் இருந்தது. இந்தச் சமயத்தில் ராஜாராமனின் மனைவி கர்ப்பிணியாக இருந்தாள். அவள் ஊருக்குப் போய் ஒரு மாதத்திற்கு மேலாகிவிட்டது. 'அடுத்த மாதம்தான் அவளுக்கு மாதம்' பிறகு இரண்டு மாதங்களில் அவள் குழந்தையை எடுத்துக் கொண்டு வருவாள் என்று ஒரு நாளைக்கு நூறு தடவை மனதுக் குள்ளேயே மாறி மாறிச் சொல்லிக் கொண்டிருந்தான் ராஜாராமன். அவனுக்குக் கனவும் நனவும் அதுதான். பத்துப் பதினைந்து நாட்களுக்கு ஒரு தடவை போய் மனைவியைப் பார்த்து விட்டு வருவதும், வாரத்துக்கு ஒரு தடவை கடிதம் எழுதுவதுமாக இருந்தான்.

அடுத்த மாதத்திலேயே குழந்தை பிறந்தது. ஆண் குழந்தை. இந்தச் செய்தியைப் பாப்பம்மாள் கேள்விப்பட்டாள். அப்பொழுதுகூட அவளிடம் ஒரு மாறுதலும் ஏற்படவில்லை. ஆனால் குழந்தையை எடுத்துக் கொண்டு ராஜாராமனுடைய மனைவி வந்ததும் கதை எல்லாம் தலைகீழாக மாறிவிட்டது. பாப்

**ஆங்கிலப் பயிற்றுமொழி வகுப்பில் பயிலும் மாணவர் செலுத்தும் படிப்புக் கட்டணம்**

மேல் நிலைப்பள்ளிகளில் ஆங்கிலப் பயிற்றுமொழி வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் ஆண்டினிடையில் ஆங்கிலப் பயிற்று மொழிப் பிரிவை விட்டு விலகும்போது, எந்த மாதத்தில் விலகுகிறார்களோ அந்த மாதம்வரை மட்டும் தான் படிப்புக் கட்டணம் செலுத்த வேண்டுமென அரசு, ஆணை பிறப்பித்துள்ளது. அவர்களிடமிருந்து ஒரு முழு ஆண்டுக்குச் சம்பளம் வசூலிப்பது கூடாது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

31-7-'79-க்குப்பின் தாமதமாகப் பள்ளியில் சேருபவர்களிடமிருந்து அவர்கள் பள்ளியில் சேரும் மாதத்திலிருந்து படிப்புக் கட்டணம் ஒவ்வொரு மாதமும் வசூல் செய்து ஆண்டுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள ரூ. 200/-க்குக் குறைவுபடும் தொகையைக் கடைசித்தவணையில் வசூல் செய்ய வேண்டுமென்றும் அரசு ஆணையிட்டுள்ளது. இவை 1979-80-ஆம் கல்வி ஆண்டிலிருந்து அமல்படுத்தப்படவேண்டும். தமிழ் மூலம் கல்வி கற்கும் மாணவர்கள் இலவசக் கல்வி பெறுகிறார்கள்.

பம்மாளுக்கு உலகமே புரண்டது போலிருந்தது.

ஒரு நல்ல நாளன்று குழந்தையோடு வந்து சேர்ந்தாள் ராஜாராமனின் மனைவி. அவள் வந்த சிறிது நேரத்திற்குள் மிகவும் உற்சாகத்துடன் ஓடோடியும் வந்தாள் பாப்பம்மாள். வந்து அவலோடு குழந்தையைப் பார்த்தாள். ராஜாராமனுடைய சாயலிலேயே இருந்தது குழந்தை. அதிலும் குழந்தையின் புன்சிரிப்பு ராஜாராமனின் புன்சிரிப்பேதான். தாமரை இதழ்களின் வெளிவரிசையும் உள் வரிசையும் உருவத்தில் பெரிதும் சிறியதுமாக இருந்தாலும், அமைப்பு ஒன்றுபோலவே இருப்பது மாதிரி இருந்தன. அந்த இரண்டுபேரின் புன்னகைகளும்!

இதைப் பார்க்கும்போது பாப்பம்மாளுக்கு என்னவோ போலிருந்தது. அவளுடைய ஏதோ ஒரு நம்பிக்கை அடிப்படையோடு சாய்ந்து விழுந்துவிட்டது. ராஜாராமன் அவன் மனைவிக்குத்தான் சொந்தம், என்பதைக் குழந்தை ஒவ்வொரு கணமும் சிரித்துச் சிரித்து நிரூபித்தது.

ராஜாராமனால் தான் அவள் குழந்தை பெற்றாள். குழந்தையோ அவன் குழந்தை. ஆனால் பிறந்தது அவள் வயிற்றில். கல்யாணமானால் இப்படிக் குழந்தை பிறக்கத்தான் செய்யும் என்பதைப் பாப்பம்மாள் முன்பு நினைத்ததாகத் தோன்றவில்லை; நினைக்காதது போலவும் தோன்றவில்லை. எப்படியும் குழந்தை பிறந்துவிட்டது. அப்படியானால் அவன் அவளுக்கு எப்போதோ சொந்தமாகிவிட்டான். இப்போது பாப்பம்மாள் யார்? குழந்தை பெறாத பாப்பம்மாள் யார்?

எழுந்து வெளியே வந்தாள். ஒருவரோடும் ஒன்றும் பேசவில்லை. வழக்கம்போல 'நான் வீட்டுக்குப் போகிறேன்' என்றும் அவள் சொல்லவில்லை. மிகவும் வேகமாகத் தன் வீட்டைநோக்கி நடந்தாள். வீட்டுக்குப் போய்ப் படுக்கையில் வீழ்ந்ததும் அவளுக்கு அழுகை வந்துவிட்டது. 'மூஸ் மூஸ்' என்று நாலைந்து தடவை அழுதாள்; விம்மினாள். ஒரு நிமிஷத்திற்குள் அழுகை நின்றுவிட்டது. ஆனால் பழைய படியும் மறுநிமிஷத்தில் அழுகை நின்றுவிட்டது. இப்படியே நிறுத்தி நிறுத்தி நாலைந்து தடவைகள் அழுதுவிட்டாள்.

அவளுடைய மானசீகப் பற்று வரவுக் கணக்கில் ஒரு பெரிய தப்பு விழுந்துவிட்டது. பற்று வரவுக் கலங்களில் வரவு வைக்க வேண்டியதைப் பற்று என்றோ, பற்று என்று எழுத வேண்டியதை வரவு என்றோ பதிவு செய்துவிட்டாள். கணக்குப் பார்த்தாள், மாறி மாறித் தப்பு விழுந்துகொண்ண்டிருந்தது.

மறுநாள்-மறுநாள் என்ன? எல்லா நாட்களும் தான்-ராஜாராமனை அவள் பார்க்கத்தான் செய்தாள்; ஆனால் முன்போல் சிரிக்கவில்லை. ராஜாராமன் சிரித்தாலும் அவள் சிரிக்கவில்லை. அவனைப் பார்த்தால் அவளுக்கு ஐந்தாறு தடவை இமை கொட்டும். முகத்தையும் 'உம்' மென்று வைத்துக் கொள்ளுவாள். 'டு'விட்டுக் கொண்ட குழந்தைபோல, வேண்டுமென்றே கோபித்துக்கொண்டு தன் வீட்டுக்கு வந்து விடுவாள் பாப்பம்மாள்.

("தமிழ்ப்புத்தகாலயம், சென்னை-5" வெளியிட்டுள்ள "சிரிக்கவில்லை" என்ற சிறு கதைத்தொகுதியிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.)



## —பாரதி விழா—

சென்னை பாரதியார் சங்கத்தின் ஆதரவில் சென்னை மத்திய மாவட்ட நூலகத்தில் செப்டம்பர் 11, 12 ஆகிய தேதிகளில் நடைபெற்ற பாரதியார் விழாவில் பாரதியார் கண்காட்சியை திரு சீனி விசுவநாதன் - திரு டி. வி. எஸ். மணி ஆகியோர் அமைத்திருந்தனர். அக்கண்காட்சியில் பாரதியார் எழுதிய நூல்கள், பாரதியாரைக் குறித்த நூல்கள் என 189 நூல்கள் இடம் பெற்றிருந்தன. கண்காட்சியைப் பார்வையிடும் மேதகு ஆளுநர் அவர்களுக்கு விளக்கம் தருபவர் திரு டி. வி. எஸ். மணி.

# கூட்டுறவு தரும் வீட்டு வசதி

நா. ஜகந்நாதன்,
பதிவாளர்,
வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கம்.

தமிழகத்தில் உள்ள ஏழை நடுத்தர வருமானமுள்ள பிரிவினருக்கு கூட்டுறவுத் துறையின் மூலம் வீடு அமைத்து கொடுக்கக் வேண்டும் என்ற கோரிக்கை பல்லாண்டுகளுக்கு முன்பே எழுப்பப்பட்டது. அதன் விளைவாக 1924-ஆம் ஆண்டு முதல், கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்கள் துவக்கப்பட்டுச் செயலாற்றி வருகின்றன.

1964-ஆம் ஆண்டு வரை மாநில அரசு கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மூலம் கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்களுக்கு கடன் உதவி செய்தது. இச்சங்கங்கள் அதன் உறுப்பினர்களுக்கு 20 ஆண்டு தவணை முறையில் கடன் வழங்கின. 1964-ஆம் ஆண்டுக்குப் பிறகு மத்திய அரசு வகுத்த திட்டத்தின்படி குறைந்த வருமானமுள்ளவர்கள், நடுத்தர வருமானம் உள்ளவர்கள், ஆலைகளில் தொழில் புரிவோர் என்று ஒவ்வொரு தொகுதியினருக்கும் தனித்தனியாக கடன் தொகை வீட்டுப் பரப்பளவு, வருமானம் ஆகியவற்றிக்கு உச்சளவு நிர்ணயம் செய்து ஆண்டுதோறும் ஒதுக்கப்பட்டது. மாநில வீட்டு வசதிப் பதிவாளர் வீடு கட்டும் கூட்டுறவு சங்கங்களால் அனுப்பப்படும் உறுப்பினர்களின் கடன் மனுக்களை அனுமதித்து கடன் தொகையைச் சங்கங்களின் மூலமாகப் பட்டுவாடா செய்வார்.

மத்திய, மாநில அரசுகளால் செயலாற்றப்பட்ட இத்திட்டம் 1972-ல் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. 1973 முதல், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் என்ற மாநில சங்கத்தின் மூலமாக தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு வகையான கூட்டுறவு வீட்டமைப்புச் சங்கங்களுக்குக் கடன் உதவி செய்யத் திட்டமிடப்பட்டது. அதன்படி தலைமைச் சங்கத்திற்கு வேண்டிய பண உதவியை பம்பாயில் உள்ள ஆயுள் காப்புறுதிக் கழகத்திடம் பெற்று தன்னுடன் இணைந்துள்ள எல்லாப் பிரதம வீட்டு வசதிச் சங்கங்களுக்கும் தேவையான கடனை அளிக்கின்றது

தற்போது தமிழ்நாட்டில் பல்வேறு வகைப்பட்ட 1300 கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் இயங்கி வருகின்றன.

வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கங்களின் முக்கிய நோக்கம் வீடில்லாதோருக்கு வீடு அமைத்துக் கொடுப்பதேயாகும். இதற்காக இச்சங்கங்கள் வீடு கட்டிக் கொடுத்தோ வீடு கட்டக் கடன் வழங்கியோ அங்கத்தினர்களுக்கு உதவிபுரிகின்றன. மற்றும் வீடு கட்டுவதற்கு முன்பும் வீடு கட்டும் போதும் வீடு கட்டிய பின்பும் ஏற்படும் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் இச்சங்கங்கள் உதவி புரிகின்றன. வீடு கட்ட மனைகள் தேவைப்படுவதால் பெரும் அளவில் நிலங்களைக் கையகப்படுத்தி அவைகளைக் குடியிருப்பு மனைகளாகப் பிரிக்க மேம்பாட்டுத் திட்டம் வகுத்துச் செயலாற்றல், சாலைகள், நீர்த் தேக்கங்கள் மற்றும் குடியிருப்புக்கு வேண்டிய வடிகால், மின்சார விளக்கு முதலியவற்றை நிறுவிப் பராமரித்தல் போன்றவற்றையும் இச்சங்கங்கள் செய்கின்றன.

மேற்குறிப்பிட்ட சங்கங்களில் 2,67,000 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களால் சுமார் ரூபாய் 756.59 இலட்சம் பங்கு மூலதனமாகச் செலுத்தப்பட்டுள்ளது. இவைகளின் செயல் மூலதனம் சுமார் ரூ 48 கோடியாக உள்ளது. இச்சங்கங்கள் துவக்க காலம் முதல் இதுநாள் வரை மத்திய, மற்றும் மாநில அரசுகள் வழங்கிய கடன் மற்றும் மானியம் பெற்று குறைந்த வருவாய்ப் பிரிவினருக்காக ரூ. 406 இலட்சம் கடன் அளித்து 5096 வீடுகளும் நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கு ரூ. 279.59 இலட்சம் கடன் வழங்கி 1530 வீடுகளையும் கிராம மக்களுக்கு ரூ. 129 இலட்சமும் கடன் உதவி செய்து 1893 வீடுகளையும் அரசு வீட்டமைப்புத் திட்டத்தின் கீழ் ரூபாய் 483 இலட்சம் கடன் கொடுத்து 7473 வீடுகளையும் தொழிலியல் தொழிலாளருக்காக ரூ. 135 இலட்சம் கடன் வழங்கி 3086 வீடுகளையும் கட்டிக் கொள்ள உதவி செய்தன.

1972ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு தன்னுடைய நிதியிலிருந்து கடன் கொடுப்பதை நிறுத்தி, தலைமைச் சங்கமாகிய தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் ஆயுள் காப்புறுதிக் கழகத்திடம் அரசு உத்தரவாதத்தின் பேரில் கடன் வாங்க ஏற்பாடு செய்தது. இக்கடன் தமிழ்நாட்டில் உள்ள பல்வகைப்பட்ட கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களுக்குத் தலைமைச் சங்கமாகிய தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் மூலமாக வழங்கப்பட வேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டது. இத்திட்டப்படி கடன் பெற விரும்பும் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் தலைமைச் சங்கத்துடன் இணைந்து கடன் பெற வேண்டும். இந்நாள் வரை 553 கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்துடன் இணையப் பெற்றுக் கடன் வசதி பெற்றுள்ளன.

### தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம்!

இச்சங்கம் துவக்கத்தில் தமிழ்நாட்டில் இயங்கி வந்த கூட்டுறவு வீடு அடமான சங்கங்களின் தலைமைச் சங்கமாக இருந்து மேற்படி சங்கங்களுக்கு நிதி வசதி செய்து வந்தது. 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு மேற்கொண்ட முடிவின்படி எல்லாவிதமான கூட்டுறவு வீட்டு வசதிச்சங்கங்களுக்குத்தலைமைச் சங்கமாக மாற்றப்பட்டு சென்னையில் இயங்கி வருகிறது. 553 பிரதம கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களையும் 31 தனிப்பட்டோரையும் உறுப்பினராகக் கொண்டுள்ள இச்சங்கத்தில் தமிழ்நாடு அரசும் பங்கு முதலீடு செய்துள்ளது.

தற்போது அரசு செலுத்தியுள்ள ரூ. 2,85,00,000 சேர்த்து இச்சங்கத்தின் பங்கு மூலதனம் ரூ. 5,98,15,000 ஆகவுள்ளது. மேலும் ஆயுள் காப்புறுதிக் கழகத்தில் மபற்றுள்ள கடன் ரூ. 37,00,07,000 தவணை வைப்புத் தொகை ரூ. 94,88,000

தமிழ்நாடு அரசு கடன் ரூபாய் 2,00,00,000 பொது காப்புறுதிக் கழகத்தின் கடன் ரூபாய் 1,00,00,000 ஆக மொத்தம் ரூ. 40,94,95,000 கடனாகவும் வைப்புத் தொகையாவும் இது வரை பெற்றுள்ளது.

30-6-'79 வரை இச்சங்கம் 53,433 வீடுகள் கட்ட ரூபாய் 63,20,33,000 கடனாக வழங்கியுள்ளது. இதில் 32,896 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும், 10,760 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இச்சங்கம் வழங்கும் கடன்களுக்கு உறுப்பினர்களிடம் தங்கள் வருமானத்திற்கு ஏற்பக் கீழ்க்கண்ட விகிதத்தில் வட்டி வசூல் செய்யப்படுகிறது.

பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினர் (E.W.S.) — 9.25 சதவீதம்

குறைந்த வருவாய்ப் பிரிவினர் (L.I.G.)—10.75 சதவீதம்

நடுத்தர வருவாய்ப் பிரிவினர் (M.I.G.)—12.75 சதவீதம்

உயர்ந்த வருவாய்ப் பிரிவினர் (H.I.G.)—14.75 சதவீதம்

**கிராமிய வீட்டு வசதித் திட்டம் :**

பல்லாண்டுகளாகவே கிராம மக்களுக்கு வீடு கட்டுவதற்காகப் பல கிராமிய வீட்டு வசதிச் சங்கங்கள் துவக்கப்பட்டு இயங்கி வருகின்றன. ஆயினும் கிராம மக்களின் தேவைகள் முழு அளவில் உடனுக்குடன் கவனிக்கப்படவேண்டும் என்ற நோக்கத்துடன் 10 தாலூகா அளவிலான கிராமிய கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களும் 50, கோட்ட அளவிலான கிராம்ய கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களும் துவக்கப்பட்டன. மேற்கூறிய 50 சங்கங்கள் தமிழ்நாட்டில் உள்ள எல்லாக் கிராமங்களுக்கும் வீடு கட்ட கடன் உதவி செய்ய பணிக்கப்பட்டுள்ளன. இச்சங்கங்கள் ஒவ்வொன்றிற்கும் முழு நேர தனி அலுவலராக ஒரு முது நிலை ஆய்வாளர் நியமிக்கப்பட்டுள்ளார். இவரின் பணிச்செலவை முதல் இரண்டு ஆண்டுகளுக்கு அரசு ஏற்கும். 3-ஆம் ஆண்டு 80 சதவீதம் 4-ஆம் ஆண்டு 50 சதவீதம் 5-ஆம் ஆண்டு 20 சதவீதம் செலவையும் அரசு ஏற்கும். ஆறாம் ஆண்டு முதல் முழுச் செலவையும் சங்கம் ஏற்கும்.

கிராமங்களில் வீடு கட்டும் திட்டத்தைத் துரிதப்படுத்தும் நோக்கத்துடன் தமிழ்நாடு அரசு 16-2-'79-ஆம் தேதியில் ஒரு திட்டத்தை வெளியிட்டது. இதன்படி 1978 ஜூலை முதல் 1983 ஜூன் முடிய 5 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் உள்ள கிராம மக்களுக்காக ஒரு இலட்சம் வீடுகள் கட்டப்பட வேண்டும். இதில் பெரும்பான்மையான வீடுகளின் மதிப்பு ரூ. 3,000-க்குள் இருக்க வேண்டும் என்றும் மற்றும் 4,000 ரூ. 5,000 மதிப்பீட்டிலும் கட்டப்பட வேண்டும் எனவும் அரசு ஆணையிட்டுள்ளது. மேலும் 1978-79-ல் 10,000 வீடுகளும் 1979-80-ல் 20,000 வீடுகளும் 1980-81-ல் 20,000 வீடுகளும் 1981-82, 1982-83 ஆகிய இரு ஆண்டுகளில் ஆண்டுக்கு 25,000 வீடுகளும் கட்டப்பட வேண்டும் என்பது திட்டம். இதில் 1979-80 ஆண்டுகளுக்கு 30,000 வீடுகள் கட்ட வேண்டும் என்ற மாற்றத்தை அரசு சமீபத்தில் வெளியிட்டது. இத்திட்டத்திற்கு ஆகும் ரூ. 40 கோடி முதலீடு செய்ய வேண்டியிருக்கும்.

இத்திட்டப்படி அரிசன உறுப்பினர்கள் வட்டியில்லாக் கடன் பெறலாம். ரூ. 3,000 மதிப்பீட்டில் கட்டப்படும் வீட்டிற்கு அரிசன உறுப்பினருக்கு ரூ. 600 மானியமாக வழங்கப்படும். மேலும், இந்த மானியம் பெரும்பான்மையான அரிசனங்கள் வாழும் குடியிருப்பில் வீடு கட்டிக் கொள்ள முன்வரும் மற்ற வகுப்பினருக்கும் தரப்படும். இத்திட்டப்படி வகுப்பு பேதமற்ற குடியிருப்புகளை உருவாக்க வேண்டும் என்பது அரசின் நோக்கமாகும்.

இத்திட்டத்தின் முதலாவது ஆண்டான 1978-79-ல் 10,000 வீடுகள் கட்டப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இத்திட்டம் ஆண்டு இறுதியில் செயலாற்றப்பட்டதால் 7430 வீடுகளே கட்டி முடிக்கப்பட்டன. மற்றும் 6727-க்கு மேலான வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. வரும் ஆண்டுகளில் திட்டப்படி வீடுகள் கட்டி முடிக்க துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.



## வீட்டு வசதி

1976-77-ல் 1215 ஆரம்பக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள். வீடுகள் கட்டுவதற்காகச் செயல்பட்டு வந்தன. 1974-75-ல் ரூ. 943.71 லட்சம் வழங்கப்பட்டன. 1975-76-ல் ரூ.1043.96 இலட்சமாகக் கூடியது. 1976-77-ல் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் 538.77 இலட்சம் ரூபாயை மட்டுமே கடனாக வழங்க முடிந்தது. இந்தத் தலைமைச் சங்கத்திடம் நிதிப் பற்றாக்குறை, மற்றும் ஆயுள் காப்புறுதிக் கழகத்தின் அறிவுரையின் பேரில் அது கடன் வழங்கவில்லை. 1974-75-ல் 5158 வீடுகளையும், 1975-76-ல் 4150 வீடுகளையும், 1976-77-ல் 4153 வீடுகளையும் இந்தப்பிரதம சங்கங்கள் கட்டி முடித்திருந்தன.

## தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம்

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் 1957-ஜூலையில் செயல்படத் துவங்கியது. அதன் ஆரம்பநாள் முதல் 30-6-78 வரை வீடுகள் கட்டுவதற்காக 45.53 கோடி ரூபாயைக் கடனாக வழங்கியது. 30-6-77 வரை 28,904 வீடுகள் கட்டுவதற்காக நிதியுதவியை அனுமதித்துள்ளது. இவற்றில் 19394வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு குடியமர்த்தலும் செய்யப்பட்டுவிட்டது. ஆண்டு இறுதியில் 7369 வீடுகள் கட்டுமானத்தில் இருந்து வருகின்றன. 1960-61-முதல் இச்சங்கம் தொடர்ந்து ஆதாயத்திலேயே இயங்கி வந்தது. 1960-61-ல் 0.25 இலட்சம் ரூபாயையும், 1976-77-ல் ரூ. 34.29 இலட்சம் ரூபாயையும் ஆதாயமாகப் பெற்றது. 1977-78-ல் ரூபாய் 26.16 இலட்சம் மட்டும் அது ஆதாயமாகப் பெற்றது.

# முதல் கிராமக் கூட்டுறவுச் சங்கம்

நம் மாநிலத்தில், ஏன், இந்தியாவிலேயே, செங்கல்பட்டு மாவட்டம் திருவள்ளூர் வட்டத்தில், திரூர் கிராமத்தில்தான் முதலாவதாகக் கூட்டுறவுச் சங்கம் பதிவு செய்யப்பட்டது. திரூர் கிராமக் கூட்டுறவுச் சங்கம் 75 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய வரலாற்றையும், அதன் நடைமுறை விவரங்களையும் சங்கத்தின் தலைவராயிருந்த திரு கே. ராஜரத்தினம் நாயுடு 24 ஆண்டுகளுக்கு முன்பு 'கூட்டுறவு' பத்திரிகையில் எழுதிய கட்டுரையின் சுருக்கத்தை இங்கே வெளியிட்டுள்ளோம்.

திரூர் கிராமத்தில் எங்கள் கம்மவார் குடும்பமும், திவான் பகதூர் திரு எம். ஆதிநாராயண ஐயா அவர்கள் குடும்பமும்தான் செல்வாக்கு வாய்ந்த குடும்பங்களாகும். திரு. ஆதிநாராயண ஐயா அரசாங்கத் துறையில் ரெவின்யூ செட்டில்மெண்ட் இலாக்காவின் டிப்டி கமிஷனராக சேவை செய்து 1902-ல் ஓய்வு பெற்றிருந்தார். அவரும் என் சிறிய தகப்பனார் திரு கே. முனிசாமி நாயுடுவும் நண்பர்கள்.

பொது சேவையில் இருவரும் வேறுபாடின்றி ஒருமித்துப் பாடுபடும் பண்பாளர்கள். அந்தக் காலத்தில் 'அர்பத்நாட் கம்பெனி' என்று ஒரு நிறுவனம் இருந்தது. அது திடீரென திவாலாகிவிட்டது. அதில் பணம் போட்டிருந்த இந்தியர்களில் பலர் தங்கள் சொத்தை இழந்து தவித்ததைக் கண்டு மனந்தாளாது திரு ஆதி நாராயணய்யா வருந்தினார். இப்போது 'இந்தியன் பாங்கு' என்று ஓங்கி வளர்ந்துள்ள நிறுவனத்தை நிறுவி, அதில் அலுவல்களை நடத்தி வந்தார். விவசாயத்தில் மிகுந்த அக்கறை கொண்டிருந்த அவர், திரூர் கிராம விவசாய மக்களுக்கு எல்லா வசதிகளையும் செய்து கொடுக்க விரும்பினார். அவருக்கு வலக் கையாக என் சிறிய தகப்பனார் இருந்து வந்தார்.

*1904*-ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் எங்கள் திரூரில் நடைபெற்ற இன்பகரமான நிகழ்ச்சிகள் என் மனக் கண்முன் படம் படமாய் விரிகின்றன. ஓர் உயர் அதிகாரி எங்கள் கிராமத்திற்கு வருவதாக நான் கேள்விப்பட்டேன். அக்காலத்தில் ஓர் அதிகாரி ஒரு கிராமத்துக்கு வரப் போகிறார் என்றால், என்ன ஆர்ப்பாட்டம்! என்ன ஆனந்தம்! என்ன வரவேற்புகள்! திரு. ஆதிநாராயண ஐயாவும், என் சிறிய தகப்பனாரும், என் சகோதரரும் கிராம மக்களுக்கு அதிகாரியின் வருகை பற்றி தெரிவித்திருந்தார்கள். அந்த அதிகாரி யார் தெரியுமா? முதல் கூட்டுறவுப் பதிவாளரான சர் பி. ராஜ கோபாலாச்சாரியார்தான்! அவர் கூட்டுறவுப் பதிவாளராக நியமனம் பெற்றவுடன், எந்த கிராமத்துக்குச் சென்றால் தம் அலுவல்களைச் செய்ய முடியுமென்று ஆலோசித்து, திருவள்ளூர் தாலுக்காவிலுள்ள மற்றொரு கிராமமாகிய மப்பேடு கிராமக் குளக் கரையில் கூடாரம் அடித்து அலுவல்களை கவனித்து வந்தார்.

(மப்பேடு கிராமத்துக்கு அடுத்த கிராமம் கீழச்சேரி கிராமம்). திரூர் கிராமத்திலுள்ள ஆதி நாராயண ஐயாவை அணுக வேண்டுமென்று எண்ணி, அவர் எங்கள் ஊருக்கு வந்தார். அவர் வந்தபோது ஏற்பட்ட நிகழ்ச்சிதான் இன்று என் மனக்கண்முன் வருகிறது. சர் பி. ராஜ கோபாலாச்சாரியாரைக் கண்டதும் திரு. ஆதிநாராயணய்யா ஓடோடியும் சென்று, அவரை மார்புறத் தழுவிக் கொண்டார். இருவரும் நலம் விசாரித்துக் கொண்டார்கள்.

இவ்விருவரும் கூட்டுறவு விதையை எங்கு ஊன்றலாம் என்று ஆலோசித்தார்கள். தீர ஆலோசித்து ஒரு முடிவுக்கு வந்தார்கள். திரூரில் முதல் கூட்டுறவுச் சங்கத்தைப் பதிவு செய்வது என்ற முடிவுதான் அது. உடனே சுற்றுப்புற கிராமங்களிலுள்ள மக்களைத் திரட்டினார்கள். கூட்டுறவு இயக்கத்தின் கொள்கைகளை அவர்களுக்குக் கூட்டுறவுப்



முதல் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர்
(திரூர் கூட்டுறவுச்சங்கம்)
திரு. ஆதிநாராயண ஐயா.

பதிவாளர் எடுத்துக் கூறி விளக்கம் தந்தார்.

சர்.பி.ராஜகோபாலாச்சாரியார் அப்போது வழங்கிய கருத்துக்களிலே வரையறுக்கப்பட்ட பொறுப்பு, வரையறுக்கப்படாத பொறுப்பு பற்றி சொல்லியது இன்னும் எனக்கு நினைவு இருக்கிறது. வரையறுக்கப்படாத பொறுப்பைப் பற்றி அவர் விளக்கிக் காட்டியபோது கிராமமக்கள் பயந்தார்கள். இப்படிப்பட்ட கூட்டமைப்புள்ள சங்கம் தங்களுக்கு வேண்டாம் என்று சொன்னார்கள். ஆனால், 1904-ஆம் ஆண்டின் கூட்டுறவுச் சட்டம் வரையறுக்கப்படாத பொறுப்பு சங்கம் அமைவதைத்தான் அனுமதித்தது! இதற்கு என் செய்வது?

கிராம மக்கள் வரையறுக்கப்படாத பொறுப்பை ஏற்க மறுக்கின்றனர் என்பதை உணர்ந்த அவர், அரசாங்கத்துக்கு எழுதி விசேஷ அனுமதியைப் பெற்றார். வரையறுக்கப்பட்ட பொறுப்பின் அடிப்படையிலேயே சங்கத்தினைப் பதிவு செய்துகொடுத்தார். எங்கள் சங்கம் கிராம சங்கமாயிருந்தாலும் வரையறுக்கப்பட்ட பொறுப்பு சங்கமாக— திரூர் கிராமக் கூட்டுறவுச் சங்கம் எண். 1 என - 30-8-1904-ல் பதிவு செய்யப்பட்டது.

ஆரம்பத்தில் 12 கிராமங்களில் திரூர் சங்கம் அதன் அலுவல்களை நடத்திற்று. 214 அங்கத்தினர்கள் சேர்ந்தார்கள். 12 கிராமங்களில் அலுவல் நடத்துவது சிரமம் என்று கருதப்பட்டதால், திரூர் கிராமத்தில் மட்டும் அலுவல்களை நடத்த செயல் எல்லையைக் குறைத்துக் கொண்டோம். அதனால் 214 அங்கத்தினர்கள் 120 பேராகக் குறைந்தார்கள். அப்போது அங்கத்தினர்களிடமிருந்து வசூலித்த டிபாசிட் தொகை ரூபாய் 410. அதற்கு வட்டி 6.5 சதவிகிதம். அங்கத்தினர்களுக்குக் கொடுத்திருந்த கடன் எவ்வளவு தெரியுமா? ரூ. 4991. மொத்தம் 14 கடன்கள்-எல்லாம் ரூ. 50க்குக் குறைவு. ஜாமீன் பேரில்தான் கடன்கள் வழங்கப்பட்டன. கடனின் வட்டி 9 3/8 சதவிகிதம். மாடு வாங்க. அரசின் கந்தாயம் கொடுக்க, வீட்டுச் சாமான் வாங்க, சில்லரைக் கடன் தீர்க்க கடன்கள் கொடுக்கப்பட்டன. முதல் ஆண்டின் இலாபம் ரூ. 5.50 காசு.

இரண்டாவது உலகப்போரின் சமயத்தில் எங்கள் சங்கம், பொது மக்களுக்கு உதவ ரேஷன் கடையை நடத்திற்று. கட்டுப்பாட்டுச் சாமான்கள், துணிமணி முதலியனவற்றை நியாய விலையில் விற்று உதவிற்று. இவைகளையெல்லாம் நினைத்தால்- இந்த நிலையம் வலிவு பெற்றிராமல் இருந்தால், இந்தச் சேவைகளையெல்லாம் செய்திருக்க முடியாது என்பது என் முடிவு.

[தமிழ்நாட்டிலேயே முதன் முதலாக ஏற்படுத்தப்பட்ட திரூர் கூட்டுறவுச் சங்கத்திலே உறுப்பினராக-2வது உறுப்பினராக இருந்த-93 வயது நிரம்பிய மதிப்பிற்குரிய லலிதா அம்மையார் அவர்களை, சென்ற ஆண்டு சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற கூட்டுறவு வார விழாவில், தமிழக அரசு கௌரவித்துப் பாராட்டியது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்—

ஆசிரியர்]




## கிராமக் கடைத் திட்டம்!

அரிசி, கோதுமை, சீனி, மிளகாய், புளி, தனியா, கடலை எண்ணெய் போன்ற இன்றியமையாத பொருட்களை ஒவ்வொரு ரெவின்யூ கிராமத்திலும் திறக்கப்படும் சில்லறைக் கடை மூலம் விநியோகம் செய்யும் பொது விநியோக முறையைச் சென்ற ஆண்டு (1978-79) அரசு கொண்டு வந்துள்ளது. கிராமப்புறப் பகுதிகளில் இன்றியமையாத பொருட்கள் நியாயமான விலையில் தாராளமாகக்கிடைக்க வேண்டும் என்பது இத்திட்டத்தின் நோக்கம். செங்கற்பட்டு, வடஆர்க்காடு, மதுரை, இராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, சேலம், கோயம்புத்தூர், நீலகிரி, கன்னியாகுமரி ஆகிய 10 மாவட்டங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் அரசு நிதி உதவியுடன் 6,012 புதுக்கடைகளைத் திறந்துள்ளன. எஞ்சியுள்ள மாவட்டங்களில் இக்கடைகள் திறக்கும் பொறுப்பு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் எல்லா மாவட்டங்களிலும் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்கெனவே நடத்தி வந்த 4,441 நியாய விலைக்கடைகளும் முழு அளவு நுகர்பொருள் விற்பனைக் கடைகளாக மாற்றப்பட்டு, எல்லா இன்றியமையாதப் பண்டங்களையும் கிராமப்புற மக்களுக்கு வழங்கி வருகின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தும் 10,453 கிராமக் கடைகள், அத்தியாவசியப் பண்டங்களை நியாய விலையில் விநியோகம் செய்வதன் மூலம், கிராமப்புறங்களில் ஒரு சாதனையைச் செய்துள்ளன. மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் இன்னும் 362 புதுக்கடைகளைத் திறக்க அரசு அனுமதியளித்துள்ளது. இவற்றையும் துவங்கினால் மாநிலத்தின் மொத்தம் 10,815 கூட்டுறவுக் கிராமக்கடைகள் செயல்படும். ஜூலை '79 முடிய ஏழு மாத காலத்தில் இக்கூட்டுறவு கிராமக் கடைகள் சுமார் 5.32 கோடி ரூபாய் பெறுமானமுள்ள பண்டங்களை விற்பனை செய்தன.

# எளியவர் இல்லந்தோறும் எரியும் விளக்கு!

—கொங்குநாடன்



அடிவானில் வான வில்லின்
ஆட்சியால் அழகுத் தோற்றம்;
மிடியெலாம் தூள் தூளாக
மாறிய புதுமை; பாதை
நெடுகிலும் வண்ணக் கோலம்!
நெஞ்சிலே உறவின் பாலம்!
விடிந்தது பொழுது! வாழ்த்தி
வளம்பெற வாராய் தம்பி!

உழவர்கள் எழுந்தார்; கூட்டு
உறவினில் மலர்ச்சி கண்டார்.
பழுதிலாப் பணிக ளாற்றும்
பழமுதிர் சோலை யென்றார்!
விழுதிட்டு நாட்டி லெங்கும்
விரிந்திட்ட இயக்கம்; நாடு
செழித்திட உழைத்து வாழச்
சேருவோம் ஒன்றாய் வாரீர்!

நலிந்தவர் வலிமை பெற்று
நலமெலாம் துய்க்க வேண்டும்!
வலியவர் மெலியார் என்ற
வேற்றுமை மறைதல் வேண்டும்!
பொலிக கூட்டுறவு எண்ணம்!
பாடுக உதய கீதம்!
சிலிர்க்கட்டும் சிந்தை; வையம்
சிறந்திடக் காண்போம் வாரீர்!

தனிநபர் வாழ்ந்து இந்தத்
தரணியில் என்ன லாபம்?
இனிதாகப் பலரும் கூடி
இதயங்கள் தழுவும் போது
கனிந்திடும் உறவு! தீய
காரிருள் மறையு மன்றோ!
இனியொரு வழியு முண்டோ?
எதிர்காலம் நமக்கே சொந்தம்!

ஊரெங்கும் கடைகள்; வாழ்வில்
உடைந்தது தடைகள்; மக்கள்
தேர்ந்ததை விரும்பி வாங்கத்
திறந்தது வழியே! வானம்
கார்மழை பொழிவ தைப்போல்
கூட்டுறவு வுதவக் கண்டோம்!
சீர்பெற, உழைக்கும் மாந்தர்
சிரித்திட நிறைவு காண்போம்!

எண்ணங்கள் இணைக; இன்ப
இசையெங்கும் பாய்க; ஏழு
வண்ணங்கள் ஒளிர்க; நாடு
வளமெலாம் பெற்று வாழ்க!
கண்ணான தமிழில் பாடிக்
கொள்கையைப் பரப்பு! சொந்த
மண்ணுக்கு வளத்தைக் கூட்டு
உறவினில் வளர்க்க வாராய்!

எளியவர் இல்லந் தோறும்
எரிகின்ற விளக்கு! கற்றுத்
தெளிந்தவர் உள்ள மெங்கும்
தவழ்கின்ற நிலவு! மக்கள்
உளமொன்றாய் இணைந்து வாழ
உணர்வூட்டும் பாடல்! கோடி
வளநகர் நோக்கிச் செல்லும்
வழியென வாழ்த்த வாராய்!








# விவசாயிகளுக்கு அரசு அளித்துள்ள சலுகைகள்

விவசாயிகளின் பிரச்சினைகளை ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழுவின் பரிந்துரைகளுக் கேற்ப கூட்டுறவுக் கடன்களைப் பொறுத்த மட்டில் அரசு கீழ்க்கண்ட சலுகைகளை அளித்துள்ளது.

## 1. அபராத வட்டி தள்ளுபடி :

30.6.'78ல் தவணை தவறி யிருந்த எல்லா விவசாயக் கடன்கள் மீதும் அந்தத் தேதியில் செலுத்த வேண் டியிருந்த அபராத வட்டியும் அந்தக் கடன்களைத் திருப்பிச் செலுத்துகிற தேதி அல்லது 30-6-'79 இவற்றில் எது முன்னதோ அத்தேதி வரை அபராத வட்டியும் தள்ளுபடி செய்யப் படுதல்.

1.7.'77 முதல் 30.6 '78 வரை செலுத்தப்பட்ட அபராத வட்டியும், 30.6.'78ல் தவணை தவறிய கடன் கள் மீது செலுத்த வேண்டியிருந்த வட்டியை 30.6.'78க்குப் பிறகு செலுத்தியிருந்தால் அந்த அபராத வட்டியும் திருப்பித் தரப் படுதல்.

## 2. சாதாரண வட்டி தள்ளுபடி :

குறுகிய காலக் கடன்கள் ஏற் கனவே மூன்று அல்லது ஐந்து ஆண்டு களில் திருப்பிச் செலுத்த வேண்டிய மத்திய காலக் கடன்களாக மாற்றப் பட்டு, 30.6.'78ல் நிலுவை நின்ற தொகையில் பேரில் அந்தத் தேதியில் செலுத்த வேண்டியிருந்த சாதாரண வட்டி தள்ளுபடி செய்யப்படுதல். மேற்படி வட்டி 30.6.'78க்குப் பிறகு செலுத்தப்பட்டிருந்தால் அந்தத் தொகை திருப்பத் தரப்படுதல்.






### 3. வட்டி வீதம் குறைப்பு :

30.6.'78ல் நிலுவையிலிருந்த மாற்றியமைக்கப்பட்ட கடன்களுக்கும் ஒருங்கிணைக்கப்பட்ட கடன்களுக்கும் 1.1.'79 முதல் வட்டி வீதம் சிறு விவசாயிகளுக்கு 10.5 சதவீதமாகவும் இதர விவசாயிகளுக்கு 12 சதவீதமாகவும் குறைக்கப்படுதல்.

### 4. கடன்களைத் திருப்பிச் செலுத்தும் கால நீட்டிப்பு:

ஒரு விவசாயிக்கு மாற்றியமைக்கப்பட்ட கடன்கள் 2 இருந்தால் 3 ஆண்டுகளில், 3 இருந்தால் 5 ஆண்டுகளில், 4 இருந்தால் 6 ஆண்டுகளில் அவற்றைத் திருப்பிச் செலுத்தும் வகையில் அக்கடன்கள் ஒருங்கிணைக்கப்படுதல். அவ்வாறு ஒருங்கிணைக்கப்படும் கடன்களில் ஆண்டுத் தவணைகள் 30.6.'80ல் முடியும் கூட்டுறவு ஆண்டில் தொடங்குமாறு அமைத்தல்.



# கூட்டுறவுச் செய்திகள்

உழவர் பெருமக்களின் குறுகிய கால,
நடுத்தரக் காலக் கடன் தேவைகளைக் கவனிக்க
4802 பிரதம வேளாண்மைக் கடன் சங்கங்கள்
தமிழகத்தில் இயங்குகின்றன. இவற்றின்
எண்ணிக்கை 1968-69-ல் 7255 ஆக இருந்தது.
வலிமையற்ற சங்கங்களை வலிமையுள்ளன
வாக மாற்றியமைத்த வகையில் அவற்றின்
எண்ணிக்கை குறைந்தது. எண்ணிக்கையைப்
பொறுத்த வரை இந்தியாவில் தமிழகம் 11-
வது இடத்தைப் பெற்றுள்ளது. கடன் வழங்கு
தலில் தமிழகம் மூன்றாவது இடத்தை (அதா
வது மராட்டியம், உத்திரப் பிரதேசத்திற்கு
அடுத்தபடியாக) வகிக்கிறது.

4802 பிரதம வேளாண்மைக் கடன் சங்
கங்களில் தன்னிறைவுடன் செயல்படுபவை
4254 சங்கங்கள் (88.6 சதம்). இதில் அனைத்
திந்திய மட்டத்தில் தமிழகம் முதலிடம் வகிக்
கிறது. 4415 சங்கங்களில் சம்பளச் செய
லாளர்கள் பணிபுரிகிறார்கள்.

வேளாண்மைக் கடன் சங்கங்கள் உறுப்
பினர்கள், பங்குத் தொகை இட்டுவைப்பு
கடன் பெற்றது, செயல் மூலதனம் மற்றும்
கடன் வழங்கிய வகையில் கடந்த 10 ஆண்டு
களில்(1968-69 முதல் 1977-78)வியத்தகு முன்
னேற்றம் கண்டுள்ளன. உறுப்பினர் தொகை
31.3 இலட்சத்திலிருந்து 47.58 இலட்சமாக
உயர்ந்துள்ளது. இது 49 சதவீத வளர்ச்சி
யாகும். பங்குத் தொகை ரூ. 1294 இலட்சத்
திலிருந்து ரூ. 3676 இலட்சமாகப் பெருகி
யுள்ளது (184 சதம்). அரசு வழங்கிய பங்குத்
தொகை ரூ. 122 இலட்சத்திலிருந்து ரூ. 703
இலட்சமாக உயர்நதுள்ளது (75 சதம்).

## அச்சகங்களின் பணி

வளரும் இயக்கம்,
கூட்டுறவு இயக்கம் வளரும் அவற்றின் தேவைக்
சங்கங்கள் வளர வளர, படிவங்கள், எழுது
கான் குறிப்பேடுகள், வளர்கிறது.
பொருட்களின் தேவையும் தேவையான
கூட்டுறவுச் சங்கங்களுக்குத் கூட்டுறவு
வற்றை அச்சிட்டுத் தருவதும் நோக்கமாகும்.
அச்சகங்களின் முக்கிய

அச்சகங்கள்,
தமிழ்நாட்டில் 16 கூட்டுறவு 14.55 இலட்ச
7702 உறுப்பினர்களுடனும், இயங்கி வரு
ரூபாய் பங்கு முதலீட்டுடனும் ரூபாய்
கின்றன. அவை 167.34 இலட்ச இவை
அளவுக்குத் தொழிலை நடத்தியிருந்தன. 33.78
வழங்கிய ஊதியத்தின் அளவு ரூ. 1455
இலட்சமாகும். இந்த அச்சகங்கள் அளித்துள்ளன.
பேருக்கு வேலைவாய்ப்பு ஆதாயத்தில்
இவைகளில் 13 அச்சகங்கள்
இயங்கி வருகின்றன.

அச்சகங்கள்
1976-77-ல் தமிழகக் கூட்டுறவு (ரூ. 153.15
அதிக அளவு வேலை செய்து முதலிடத்தைப்
இலட்சம்) இந்தியாவில் இடத்தை
பெற்றுள்ளது. இரண்டாவது கூட்டுறவு
குஜராத் மாநிலம் பெறுகிறது. வேலை
அச்சகங்களுக்கு அதிக அளவு தமிழ்நாடுதான்
வாய்ப்புக்களை அளித்ததும் இரண்டாவது
(1516 பேர் 30.6.77-ன்படி)
இடத்தை மகாராஷ்டிரம் பெறுகிறது.

## மத்தியக் கூட்டுறவு வங்கிகள்

பிரதம வேளாண்மைக் கடன் சங்கங்
களைப் போலவே மத்தியக் கூட்டுறவு வங்கி
களும் கடந்த 10 ஆண்டுகளில் சிறந்த முன்
னேற்றம் கண்டுள்ளன. அவற்றின் உறுப்பினர்
தொகை எட்டு மடங்காகப் பெருகியுள்ளது.
மத்திய வங்கிகளில் உள்ள பங்குத் தொகை
(1968-69) ரூ. 1040 இலட்சத்திலிருந்து
(1977-78) ரூ. 3169 இலட்சமாக உயர்ந்
துள்ளது. இது 205 சதவீத வளர்ச்சியாகும்.
இவற்றில் உள்ள இட்டு வைப்புத் தொகை
ரூ. 2559 இலட்சத்திலிருந்து, ரூ.12666 இலட்
மாக (395 சதம்) உயர்ந்துள்ளது. கடந்த
பத்தாண்டுகளில் 704 சதம் ஆக உயர்ந்துள்
ளது. குறிப்பாக, கடந்த நான்கு ஆண்டுகளில்
அதிகம் என்றே கூறலாம்.


இட்டு வைப்புப் பொறுத்த மட்டில்
தமிழக வங்கிகள் நான்காவது இடம் வகிக்
கின்றன. (ரூ. 9917 இலட்சங்கள்). முதல்
மூன்று இடம் வகிப்பவை முறையே மராட்டி
யம், குஜராத் மற்றும் உத்திரப்பிரதேச
மாகும்.

கடன் வசூலில்கூட தமிழகம் முதலிடம்
(87 சதம்) வகிக்கிறது. அடுத்தபடியாக
அரியானா (77 சதம்) மாநிலம் இடம் பெறு
கிறது.

## மாநிலக் கூட்டுறவு வங்கி

கடந்த பத்து ஆண்டுகளில் மாநிலக்
கூட்டுறவு வங்கியின் பங்கு மூலதனம் ரூபாய்
471 இலட்சமாக உயர்ந்துள்ளது. இந்த
வளர்ச்சி 38.5 சதம் ஆகும். இவ்வங்கியில்
உள்ள இட்டு வைப்புத் தொகை ரூ. 1172
இலட்சத்திலிருந்து, ரூ. 8784 இலட்சமாகப்
பெருகியுள்ளது. இந்த வளர்ச்சியின் அளவு
649 சதவிகிதம். அதேபோல, இவ்வங்கி
வழங்கிய கடன் தொகை ரூ. 2765 இலட்சத்தி
லிருந்து, ரூ. 30,648 இலட்சமாக உயர்ந்துள்
ளது. இந்த வளர்ச்சி 1008 சதவீதமாகும்.
இவ்வங்கி ஈட்டிய ஆதாயம் ரூ. 32 இலட்சத்
திலிருந்து, ரூ. 221 இலட்சமாகப் பெருகியுள்
ளது ,கடந்த ஆண்டைவிட 1977-78ஆதாயம்
இரு மடங்கு அதிகரித்துள்ளது. இந்த வகை
யில் தமிழக மாநில வங்கி இந்தியாவில் ஐந்தா
வது இடம் வகிக்கிறது. மராட்டியம் முதலி
டம் பெறுகிறது.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.



திரு எஸ். எம். துரைராஜ், எம்.எல்.ஏ., அவர்கள், முதல்வரின் பேரவைச் செயலராகப் பதவி ஏற்றார். மாண்புமிகு முதல்வர் அவர்கள் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

2.10.1979 அன்று சென்னை வியாசர்பாடியில் கூட்டுறவு சங்கக் கட்டிடத் திறப்பு விழாவின்போது, மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள், சிறு வியாபாரிகளுக்கு வங்கிக் கடன்களை வழங்கினார். மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் செல்வி பி.டி. சரசுவதி உடன் உள்ளார்.





2.10.1979 அன்று, கதர் கைத்தொழில் அங்காடியில் (குறளகம்) காந்தி ஜெயந்தி கதர் விற்பனை விழாவை மேதகு ஆளுநர் துவக்கி வைத்தார். அதிகக் கதர்விற்பனை செய்த ஊராட்சி ஒன்றியங்களுக்குரிய பரிசுகளை மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் வழங்கினார்.

பதிவு எண். M. 8676



# கூட்டுறவு இயக்கம்- 75 ஆண்டுகள்